

இராஜ கோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மெய் அன்பர்களே!

இந்த இராஜ கோபுரம் உயர்ந்து அடியார்களை ஆட்கொண்டு அருளுவதுபோல் நா. சண்முகம், புங்குடுதீவு அவர்கள் உள்ளம் உயர்வால் ஏற்பட்ட இக்கோபுரத்தின் மகிமை என்றும் நிலைப்பதுபோல் அன்னவர்கள் பணி நிலைத்து ஓங்கி நீண்டு வாழ ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி அருள்பாலிக்க உள்ளத் தூய்மையுடன் வேண்டி வாழ்த்துகிறோம்.


# ஸ்ரீநிவாசன்ஸ்கோ லிமிடெட்

ஏற்றுமதியாளர்கள்

**102, குமார வீதி, கொழும்பு-11.**

தொலைபேசி: **24843**
**26575**
**82399**

த. பெ. **673**
தந்தி: கிறிஸ்டல்
தொலை தொடர்பு: **21244**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T|200|0794

உ
சிவமயம்

புங்குடுதீவு பெருங்காடு இராஞ்சியம்பதி

ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி

(சிவன் கோவில்)

# இராஜ கோபுரக் கும்பாபிஷேகச்

# சிறப்பு மலர்

சிவசம்பந்தச் சிந்தனைத் தேட்டம்

26-3-1981

புங்குடுதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# புங்குடுதீவு மேற்கு பெருங்காடு கிராஞ்சியம்பதி

அருள் தரு

## ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத

## சோமசுந்தரேஸ்வர சுவாமி கோவில்

# இராஜ கோபுர சிறப்பு மலர்

வெளியீடு :

கொழும்பு வர்த்தக அபிமான அன்பர்கள்

இணை ஆசிரியர்கள் :

புலவர் க. சிவானந்தன்

திரு. ச. சதாசிவம் சேவியர்

மலர் குழு :

திரு. S. P. சாமி

திரு. வ. நடராசா

திரு. க. கனகரெத்தினம்

திரு. நா. தெய்வேந்திரன்

திரு. சு. யோ. பூராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுர வாசலும் கோயில் வாயிலும்

மங்களத்திற்குரிய மணிஓசை எங்கும் பரவி வேண்டாத விவகாரங்களை விலக்கி, வேண்டும் பக்குவத்தினைத் தந்த வேளையிது.

பன்னூறு ஆண்டுகட்கு முன்பு பாராண்ட பக்திமிகு தமிழ் பரம்பரையின் தணியாத சிவப் பணியின் தொடர்நிலை தொண்டான கோபுர அமைப்பு நிறைநிலை கண்டு நன்நீராட்டினை ஏற்ற நேரமிது.

எங்கும் எல்லோரிடத்திலும் எம்பெருமானின் எண்ணம் பள்ளி எழுந்து அருள் வெள்ளம் பொங்கித் துள்ளி பிரவாகிக்கும் சூழ்நிலை இது.

இந்த நேரத்தில் இராஜ கோபுரம் என்னும் சிறப்பு மலரின் வாசலில் சற்று நேரம் உங்களை தங்கவைத்து வரவேற்று உள்ளே அழைப்பதில் மகிழ்வு கொள்கின்றோம்.

கற்கோபுரம் அமைத்து உதவிய நா. சண்முகம் அவர்களின் திருப் பணியால் ஓர் அருட்பணி அத்தியாயம் வான் நோக்கி எழுந்துள்ளது. தமிழ் மன்னர்கால மகத்துவம் தூலலிங்கமாய் தத்துவம் பேசி மூல இலிங்கத்தை - முழுமுதலை விளங்க வைக்கின்றது.

கோபுர தரிசனம் கண்டு கோயில் வாயிலில் நிற்கும் உங்களுக்கு ஓர் உண்மையை உரைப்பதில் உவகை கொள்கின்றோம். கோபுரம் அமைத்த சண்முகம் அவர்களுக்கு கோபுர மலருக்குக் கட்டுரை தீட்டிய நமது புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்கள் கட்டுரையிலேயே ஒரு பட்டம் சூட்டியுள்ளார். ஆம்! "உத்தம சோழன்" சண்முகம் என்பதுவே அது. பெருமான் பணி செய்தவருக்கு பொருந்தும் பட்டமல்லவா இது?

இக் கோபுர மலருக்கு மணஞ்சேர்த்தோர் கோயில் வரலாறு வளர்ச்சி அனைத்தையும் கூறியுள்ளார்கள். கோபுரத்தையும் கோயிலையும் புரிந்து கொள்ள இந்த மலர் உதவுகிறது.

மின்சார வெட்டு என்னும் நெருக்கடி நேரத்தில் இந்த மலர் உருவாகியது. காலந் தவறியும் கடமையாற்ற வேண்டியிருந்தது. இதனால் சில இடங்களில் அச்சுப் பிழைகள் தென்படலாம். இதனை நீங்கள் பொறுத்துக் கொள்வீர்கள் என்று நம்புகின்றோம்.

வணக்கம்.

அன்பன்,

ச. சதாசிவம் சேவியர்,
(மலர் குழு சார்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கிராஞ்சிச் சிவனின் திருக்கோவில் நாளும் பொழுது வளர்ந்து அருள் வழங்கு கையிலேயங்கிரியில் கைகூப்பி நிற்கும் இணைபிரியா இரத்த உறவுகள் சிவஸ்ரீ கி. சதாசிவகுருக்களும், ஸ்ரீமதி மா. செல்வநாயகி அம்மாளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவன்கோவில் தேவஸ்தானத்தில் துங்கக் கரிமுகத்துத்
தூமணி — விக்கினங்கள் தீர்த்து விளங்க வைக்கும்
பிள்ளைக் கடவுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உத்தம சோழனுர் உன்னிப்பாய் நோக்குவது பொருளியற் கணக்கையா அருளியற் கணக்கையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Chandramouleeswaraya Namaha

SRI SANKARA BHAGAVADPADACHARYA PARAMPARAGATHA

His Holiness

Sri Kanchi Kamakoti Peetadhipathi

# Jagadguru Sri Sankaracharya Swamigal
# Srimatam Samasthanam

KANCHEEPURAM - 631 502

Camp : Talesari

Date : 18.2.81

★ ★ ★

மதுரையம்பதியில் ஸ்ரீ மீனாக்ஷி அம்பாள் சமேத சொக்கநாதப் பெருமான் பல லீலைகளை செய்து பக்தர்களை ஆட்கொண்டு அருள்பாலித்து வருகிறார். சொக்கநாதப் பெருமானைப்பற்றி பரஞ்ஜோதி புராணம் பறை சாற்றுகிறது. இவ்வளவு மகிமைவாய்ந்த இறைவனின் திருநாமத்தோடு கடல் கடந்து ஸ்ரீ லங்காவில் வாழும் அன்பர்கள் கோவில் அமைத்து பஞ்சதள (5) இராஜ கோபுரங்கள் அமைத்து கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதைக் கேட்டு மிகுந்து சந்தோஷிக்கிறோம். இந்த வைபவத்தில் எல்லோரும் பங்குகொண்டு சொக்கநாதப் பெருமானின் பரிபூர்ண அனுக்ரஹித்திற்கு பாத்திரராகும்படியாய் ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயணஸ்மிருதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Phone : 34157 Grams : "CORKBOTTLE"

*WITH BEST COMPLIMENTS*
*FROM*

# T. S. T. P. T. & CO.

GENERAL MERCHANTS

**49, Dam Street,**

**COLOMBO - 12.**

* * *

With Best Compliments

of

# SELVAMS TEXTILES

WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILES

**345, Main Street,**

**COLOMBO - 11.**

Telephone : 21475

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுர திருக்குட நன்னீராட்டிற்கு தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் பாராட்டு

அன்பிற் சிறந்த நமது ஈழத்துச் சிவானந்தன் அவர்களுக்கு, எல்லா நன்மைகளும் பெருக அண்ணாமலை அண்ணலின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம். தங்கள் கடிதம் கிடைத்தது. புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி சிவன் கோவிலுக்கு இராஜ கோபுரம் அமைக்கப்பெற்று கும்பாபிஷேகம் நிகழ இருப்பது அறிந்து மகிழ்கின்றோம். திருவருளின் துணையோடு கோபுரத்தின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா இனிதே நடைபெற பிரார்த்திக்கின்றோம். இத் திருப்பணிக்கு உதவிய அருள்நெறி அன்பர் நாகலிங்கம் சண்முகம்பிள்ளை அவர்களை நெஞ்சு நிறைந்த வாழ்த்துக்களோடு பாராட்டுகின்றோம்.

சிவன் கோவிலில் நமது முன்னிலையில் பன்னிரு ஆண்டுகளுக்கு முன்னர் பன்னிரு திருமுறை தமிழ் அர்ச்சனை நடைபெற்றதை நினைவுபடுத்தியிருந்தீர்கள் அன்றைய அர்ச்சனையில் நாமே திருமுறைகளை ஓத காலஞ்சென்ற ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் அர்ச்சனை செய்த காட்சி இன்னும் நெஞ்சைவிட்டு அகலவில்லை அர்ச்சனைக்குப் பின்பு வான்முகில் பெய்து இறைவனின் அகக்குறிப்பை வெளிக்காட்டியதையும் மறக்க முடியாது.

தமிழகம் தெய்வமணம் கமழும் திருநாடு, இறைமணம் கமழும் இன்பத் திருநாடு. விண்ணை அளந்துகாட்டி வினைமறைக்கும் கோயில்கள் நிறைந்த நாடு. கல்லையெல்லாம் கலையாக்கிப் பொற்சித்திரமாக்கினர், அவ்வழி அருளும், பொருளும் உணர்தினர் நம் முன்னோர். கோயில்களில் கோபுரம் அமைத்து பக்தியுணர்விற்கு ஊட்டம் கொடுத்தனர். கோபுர தரிசனத்தையே கோடி புண்ணியமாகக் கொண்டனர். திருக்கோயிலும், கோபுரமும் நுண்கலைப் படைப்புக்களே. அருளியலும், பொருளியலும் கலந்த படைப்பு, கலையிலும், பொருளியலும் இணைந்த படைப்பு, மண்ணுக்கும் விண்ணுக்கும் இணைப்பூட்டும் கருவி. மனிதன் மிருக உணர்ச்சியிலிருந்து விலகவும், அதன் பின் முழுமனிதனுகவும், பின்பு தேவனுகவும் வளர்ந்து வாழத் துணைசெய்வது திருக்கோயில்.

நமது திருக்கோயில்கள் தத்துவக் களஞ்சியங்களாகும், வரலாற்றுச் சுவடிகளாகும். கலைகளின் கருவூலமாகும். மனிதனின் ஊனினை உருக்கி உள்ளொளியைப் பெருக்கி உலப்பிலா வாழ்வை வழங்குவது திருக்கோயிலேயாம். கோபுரம் என்பது மக்களை திருவருளை நாடித் திருக்கோயிலுக்குச் செல்ல ஆற்றுப்படுத்தும் சாதனம்.

ஈழத்திலும் திருக்கோயில்களும் கோபுரங்களும் எழுந்து மக்களை நல்வழிப்படுத்தி வருவதனை அங்கு அருள்நெறி யாத்திரை செய்தபோது கண்டு மகிழ்ந்தோம். புங்குடுதீவு சிவன் கோயிலில் நடந்த முப்பத்துமூன்றுகுண்ட நூறுஸ்தப உத்தமோத்தம பக்ஷபாக மாஹா கும்பாபிஷேகம் பற்றி நீங்கள் குன்றக்குடிக்கு வந்தபோது கூறியது நினைவிற்கு வருகிறது. தாங்கள் தந்த கும்பாபிஷேக மலரால் சிவன் கோயிலின் அருள்வளம்மிக்க வளர்ச்சிச் சிறப்பினை அறிந்தோம்.

கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்று நான்கு ஆண்டுகளுக்குப் பின் கோபுர அமைப்பும் கோபுர கும்பாபிஷேகமும் நடைபெற இருப்பது அக்கோயிலைச் சார்ந்த சிவாச்சாரியார்களினதும் சிவபக்தர்களினதும் சிறத்த முயற்சியையும் உயரிய ஊக்கத்தையும் காட்டுகின்றது.

கோபுர அமைப்புப் பற்றியும் அதன் ஆக்கம் பற்றியும் சிந்தித்த சண்முகம்பிள்ளை அவர்கள் குடும்ப நலத்தோடு நீடு வாழ்ந்து சமயப் பணியும், சமுகப் பணியும் ஆற்றி ஆன தொண்டராக விளங்க திருவருள் கூட்டுமாக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

குன்றக்குடி. 623 206
இராமநாதபுர மாவட்டம்.
நாள் 4-3-81

தெய்வசிகாமணி
(குன்றக்குடி அடிகளார்)

WITH THE BEST COMPLIMENTS

FROM

# S. A. CHELLIAH & CO.

General Merchants & Commission Agents.

ඇස්. ඒ. සී. සහ සමාගම          செ. ஆ. செ. அன் கோ.

**No. 14 & 24, FOURTH CROSS STREET,**

**COLOMBO - 11.**

**Telephone: 22128**          **Telegrams: 'NAGAPUSNY'**

***BRANCH:***

## S. A. CHELLIAH & CO.

No. 110, HOSPITAL ROAD,

JAFFNA.

Telephone: 7010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவ சிவ

# கோபுரதரிசனம் கோடிபுண்ணியம் தரும்

சிவபுண்ணிய செம்மல்
க. ஆறுமுகம்
(சிவசக்தி மில்ஸ் யா-எல)

இலங்கையின் சிறப்புமிகு புங்கை மா நகரிலே நடுநாயகமாய் சிறந்து விளங்கும் (அருள்மிகு ஸ்ரீ மீனாக்ஷி அம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தானம் இறைவனின் ஆணைப்படி பஞ்சதள இராஜ கோபுரம் புதிதாக அமைக்கப்பெற்று புது பொலிவுடன் ரௌத்திரி ஆண்டு பங்குனித் திங்கள் 13ம் நாள் 26-3-1981 வியாழக் கிழமை காலை 9-15 தொடக்கம் 11 மணி வரை வரும் சுபவேளையில் மகாகும்பா பிஷேகம் நடைபெற திருவருள் பாலித்து இருக்கின்றது. இது மிகவும் பழமைவாய்ந்த புண்ணியஸ்தலமாகும் இது தொன்று தொட்டு உத்தம பிராமணகுருமார்களால் பத்தி சிரத்தையுடன் நியதி தவறாது பூசைகள் நடைபெற்று வந்தது. இதன் காரணமாய் இறைவன் திருவருள் ஓர் வர்த்தக பெருமகனுன திருவருள் செல்வர் திரு. நாகலிங்கம் சண்முகம் அவர்கள் உள்ளத்தே புகுந்து தனிமையில் இராஜகோபுரத்தை அமைக்க திருவுளம் கொண்டார். முன்ஜென்மம் செய்த புண்ணியம் கைகூட இதை பத்தி சிரத்தை யோடு இரவு பகல் பாராது பல லட்சம் ரூபா செலவில் கட்டி முடித்தார். முன் தவம் பலித்தது தவமும் தவமுடையார்க்கே. கருணைக்கு கைமாறு ஏதும் அறியேன்.

சித்தமே புகுந்து எம்மை ஆட்கொண்டு
தீவினை கெடுத்து உய்யலாம்
பத்தி தந்துதன் பொன்கழற்கணே பன்மலர்
கொய்து சேர்த்தலும்
முத்தி தந்து இந்த மூவுலகுக்கும் அப்புறத்து
எமை வைத்திடும்
அத்தன் மாமலர்ச் சேவடிக்கண் நம்சென்னி
மன்னி மலருமே

## திருவாசல்

பொய்வாழ்வில் நாம் கண்ட பயன் யாது இவ்வுலக வாழ்விலே நாம் வாழ்கின்ற காலம் சிறிது இக்கால எல்லைக்குள் நாம் செய்கின்ற நல்ல செயல்கள் மட்டுமே நமக்கு சொந்தம். மற்றும் அனைத்தும் நமக்கு சொந்தமில்லை. இறைவன் நமக்கு செய்த எல்லை இல்லாத கருணையை நாம் நினைத்துப் பார்ப்போ மேயானுல் நமது வாழ்வு முழுதுமே அவனுக்கு தொண்டுசெய்ய கடப்பாடுடை யோம். நமது என்றது ஒன்றுமே இல்லை. எல்லாமே அவன் தந்தவைதான். நாம் தேடிய செல்வம் மற்றும் அனைத்தும் நம்முடன் வருவதில்லை. முன் செய்த புண்ணியம் மனிதனுய் பிறந்தும் அவமே காலத்தை போக்குகின்றோம் அடியார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளாளர்கள் இறைவனை நினைத்து நினைத்து உருகி உருகிகண்ணீர் சொரிந்தார்கள். இன்னும் பல ஜென்மம் வருமே, அது எப்படி அமையுமோ, இறைவா உந்தன் திருவடிக்கீழ் இருக்க அருள் செய்வாய் என்று நமக்காகவே இறைவன் கருணை கூர்ந்து இந்த அடியார்கள் மூலம் நமக்கு ஞாபகப் படுத்துகின்றார். மறு ஜென்மம் என்பது நமக்கு நிச்சயம் உண்டு. எனவே இவ்வுலக வாழ்வுக்கு மட்டுமன்றி தொடரும் மற்றுமோர் பயணத்துக்கும் நம்மைத் தயார் செய்ய வேண்டும். இது எந்த நேரம் போகும் பயணம் என்பதை நாம் அறியோம். எனவே இப்பொழுதே இறைவன்பால் உங்கள் சிந்தனையைத் திருப்புங்கள். இறைவன் எப்பொழுதுமே நம்மை, பிரியாது இருக்கின்றான். நாம் அதை சிந்திப்பதில்லை.

## இன்றும் இறைவனைக் காணலாம்

அருளாளனாக இருக்கின்ற இறைவன் சிறப்பாக சாந்நித்யம் கொண்ட ஸ்தலங்களில் இன்னும் மெய் அடியார்கள் கனவில் தோன்றி பல அற்புதங்கள் புரிவதை காணலாம். சிறந்த அடியார் உள்ளத்தில் தேனாகியும் இன் அமுதமாகியும் தன்னை மறவாது பிரியாது இருக்கும் அடியார்களிடம் மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி தீராத நோய் தீர்க்க வல்லவனாகி நம்மை என்றும் ஆட்கொள்ள காத்திருக்கின்றான். நாம் மறந்தோமே தவிர அவன் என்றும் நம்மை மறப்பதில்லை. எனவே நாம் நமது வாழ்விலே அவனை பிரிந்து வாழ முடியாது. எனவே நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து உருகி உருகி கண்ணீர் மல்கி அவன் தாழ் மலர் சேவடி கமலங்கள் சென்றடைந்து உய்வோமாக.

## அன்பர்கள் உள்ளம் நிறைந்தவன்

நமது நாட்டைச்சார்ந்த உள்ளம் நிறை அன்பர்கள் சிவநேய செல்வர்கள் இன்னும் பலர் உண்மையை உணர்ந்து தங்கள் வாழ்க்கையை திசைதிருப்பி நல்ல அரும் பெரும் தொண்டினை ஆற்றி வருகிறார்கள். அவர்கட்கும் இறைவனுடைய திருவருள், கடாட்சம் நிச்சயம் கிட்டும். இது நமது நாட்டுக்கும் பெருமை தரும் நல்ல செயலாகும் இவர்களையும் நாம் சிரம் தாழ்த்தி வணங்கு கின்றோம். வாழ்த்துகின்றோம்.

## எல்லாம் அவன் செயல்

கூட்டுவதும், கூட்டிப், பிரிப்பதுவும்,
ஒன்றொன்றை, ஆட்டுவதும், ஆட்டி,
அடக்குவதும்
காட்டுவதும், காட்டி, மறைப்பதுவுங்,
கண்ணுதலோன்
முன்னமைந்த, ஏட்டின்படி யென்றிரு
நமச்சிவாய வாழ்க நாதன் தாழ்வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில்
நீங்காதான் தாழ்வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராஜ கோபுரம்

## சித்தாந்த சிகாமணி, பொன். அ. கனகசபை

### முன்னுரை

புங்குடுதீவு புட்கலாவர்த்த மேகம் பொன் மழை பொழிந்த புண்ணிய பூமி; மேன்மைகொள் சைவநீதியும், மேதினி போற்றும் தமிழர் பண்பாடும் வீறுகொண் டிலங்குந் திருநாடு. சிவமணமுந் தமிழ்மண முஞ் செறிந்து, எட்டுத்திசையும் அருள் மணக்க வீற்றிருக்கும் அலங்கார தீவகம். அதன் மத்தியில் அருண்மிகு மீனுட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. மறைத் திரு' மார்க்கண்டமாமுனிவன் கண்ட மனக் கோயில், இன்று கலைக் கோயிலாகக் காட்சி தருகின்றது. மீனுக்ஷி சுந்தரேஸ்வரசுவாமி கோவில் இராஜ கேபுரம் தமிழர் கலை கலாசாரம், நாக ரிகம் பண்பாடு ஆதிய அனைத்திற்கும் அழியாச் சின்னமாக வானுற ஓங்கி வளர்ந்து நிற்கின்றது.

### கோபுரச் சிறப்பு

சிவராஜ கோபுரம் கலைச்செல்வக் களஞ்சியமாகவும், பூர்வ நுண்கலைப் பொக் கிஷசாலையாகவுந் திகழுகின்றது. கோபுரச் சோலையில் முத்தமிழுங் கோலமுறப் பூத்துக் குலுங்குகின்றன. சிற்பங்கள் இசைபாடத் திருவுருவங்கள் நடனமாடுகின்றன; பதுமை கள் பேசுவதைப் பாவையர் பார்த்து உவக்கின்றனர்; சிற்ப வடிவங்கள் சிவா னந்தத் தேன் பருகிச் செம்பொருளில் இலயித் திருக்கின்றன.

ஆறு ஆதாரங்களில், மூலதாரமாய் அமைந்திருப்பது திருக்கோபுரவாயில். அதுவே குண்டலி ஸ்தானம். மூலாதாரத் திலிருந்தே பிரபஞ்சம் முழுவதும் உற்பத்தி யாகின்றது. சிவராஜ கோபுரம் சித்துலகம் அசித்துலகம் அனைத்தையுந் தன்னகத்தே கொண்டெழுந்து, 'காரியப் பிரபஞ்சம் அனைத்துங் கடவுளின் திருவுருவமே' என்னுந் தத்துவத்தை உபதேசஞ் செய்கின்றது. ஆலயவழிபாடு செய்யவரும் அடியார்கள், அதி தூரத்தே வந்து கொண்டிருக்கும் பொழுதே தூலலிங்கமாகத் தரிசித்துத் தொழுவதற்கு ஏற்ப, உயர்ந்த தோற்றம் தருகின்றது. கல்லையும் மண்ணையுங் கொண் டமைந்த கலைவடிவங்களிலே கடவுளைக் கண்டு களிப்புறச் செய்கின்றது கவின்மிகு இராஜகோபுரம்.

### கோபுரம்

'திருக்கோயிலுக்கு முற்பக்கத்திலே திருக்கோபுரம் அமைக்கப்பட வேண்டும்' என்ற சிற்பநூல் விதிக்கு இணங்கவே, இச்சிவராஜ கோபுரம் அமைக்கப் பட்டுள்ளது. பெரும்பாலும் திருக்கோயி லின் கிழக்குத் திசையிலேயே கோபுரங்கள் அமைந்துள்ளன. அவ்வாறே இந்த அரச கோபுரமும் திருக்கோயிலின் கிழக்குத் திக்கிலுள்ள மூன்றும் பிரகாரத்தில் திவ்விய மாக அமைக்கப்பட்டுத் திகழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வீதிக்குந் தனித்தனி ஒவ்வொரு கோபுரம் அமைவதே முறை. அவற்றுக்குத் தனித்தனியே அமைந்த பெயர்களும் உண்டு. ஆயினும், இக்காலத் தவர் அவையனைத்தையும் இராஜகோபுரம் என்றே இயம்பி வருகின்றனர்.

இந்தச் சிவராஜ கோபுரம் சிகரம், ஸ்தூபிகள் கூடம், களத்திரநாசிமுதலிய உறுப்புக் களுடன் பூரண அமைவு பெற்றுப் பொலிகின்றது ஆகமங்களுஞ் சிற்ப நூல் களுங் கூறும் பஞ்சதள கோபுர அளவுப் பிரமாணத் துக்கு இஃது ஓர் எடுத்துக் காட்டாகும்.

### தளங்கள்

திருக்கோயிற் கருவறை 9' 4" பிர மாணத்தில் அமைந்திருக்கின்றது. அதற் கமையவே இராஜகோபுரமும் 55' உயரங் கொண்டதாக அமைந்துள்ளது. இதன் அடிப் பாக நீளம் 20' 8" அகலம் 11' 8" கோபுரத் தின் முன்புறம் பின்புறங்களிலாவது, ஏனைய இருபுறங்களிலாவது நின்று, இக்கோபுரத் தைப் பார்ப்பவர்கள் அடிப்பாகம் அகன்றும் உயர்ந்துகொண்டே போகும் பகுதியின் அகலம் இருமருங்கிலுஞ் சம அளவாகக் குறைந்தும் மேல்நோக்கி உயர்ந்துஞ் செல்வதைத் தெளிவாகக் காணலாம். கோபுரத்தின் இடதுபுறம் வலதுபுறங்களைப் பார்க்கிலும், முற்பக்கமும் பிற்பக்கமும் ஒரே அளவில் அகன்றுள்ளன. கருவறையின் மேலுள்ள விமானத்தை விட இக்கோபுரம் உயரமானது. கருவறை விமானத்திற் காணப்படும் பல்வேறு வேலைப்பாடுகள் இக் கோபுரத்திலுங் காணப்படுகின்றன.

கோபுரங்களுக்கு 3, 5, 7, 9, 11 ஆகப் பல எண்ணிக்கை கொண்ட மாடங்கள் உண்டு. கோபுரங்களின் உச்சியில் 3, 5, 7, 9 கலசங்கள் நிறுவப்படும். இப்பஞ்சதள இராஜகோபுரத்துக்கு ஐந்து எழில்மிகு மாடங்களே உண்டு. இவற்றை நிலைகள் என்றுங் கூறுவர். முற்பக்கமும் பிற்பக்கமுந் திறந்தவாறு, ஐந்து சாளரங்கள் அமைந் துள்ளன உச்சியை ஐந்து கலசங்கள் அழகுறுத்துகின்றன. மாநசார சிற்பநூலிற் கூறப்பெற்றவாறே இப்பஞ்சதள இராஜ கோபுரத்தின் ஒவ்வொரு தளமும், அதிலே காணப்படும் அறைகள், தூண்கள், சுவர்கள் முடிகளுடன் கூடிய விமானங்கள் முதலிய யாவும் அமைக்கப்பட்டுள்ளன. முதலாவது தளத்தில் 108 பத்ம தளங்களும். இரண்டா வது தளத்தில் 40 பத்ம தளங்களும், மூன்றுவது தளத்தில் 32 பத்ம தளங்களும், நாரன்காவது தளத்தில் 24 பத்ம தளங்களும், ஐந்தாவது தளத்தில் 36 மகா பத்மங்களும் ஆக இந்த இராஜ கோபுரத்தில் 240 பத்ம தளங்கள் அமைந்துள்ளன. இவற்றோடு 160 உருவங்களும் இணைந்து சிவராஜ கோபுரத்துக்குத் தனியழகைத் தருகின்றன.


### முடிவுரை

கோபுரத்தின் ஒவ்வொரு தளத்தையுஞ் சுற்றிச் சுற்றித் தொடர்ச்சியாக பார்ப்பவர், தம்மையறியாதே தூலலிங்கத்தை வலம் வந்த தவப் பேற்றையும் பெறுவர். கொழும்பு மாநகர் நான்காம் குறுக்குத் தெரு 'இறத்கம ஸ்ரோர்ஸ்' உரிமையாளர் சிவதருமவள்ளல் உயர் திரு. நாகலிங்கம் சண்முகம் அவர்களின் அருட்செல்வமும், பொருட்செல்வமுமே சிவராஜ கோபுரமாக உருவந்தாங்கி நிற்கின்றன. திருவாளர் திரு. சண்முகம் அவர்களின் வாழ்வின் மையக் கல்லாக இச்சிவராஜ கோபுரம் அமைந்து விட்டது

புங்குடுதீவையே தாயகமாகக் கொண்ட வரும், கட்டிடக்கலையிற் கைதேர்ந்தவரும், சிற்ப சாஸ்திர வித்தகருமான திரு. கனகசபை சபாரத்தினம் ஸ்தபதியார் அவர்களே இச்சிவராஜ கோபுரத்தைக் கட்டி நிறைவேற்றிய பெருமைக்குரியவர். தாய்த் திருநாட்டிலே செய்த தெய்வத் திருப்பணியாதலின் தனிப்பட்ட ஆர்வங் காட்டி யுள்ளார். இராஜகோபுரக் கட்டிடத் திருப்பணியைச் செய்து முடித்ததில் பரி பூரண திருப்தி கண்டுள்ளார். தீர்வைச் சாந்தினுல் அமைக்கப் பெற்ற சிற்ப வடிவங் களைச் சீர்காழி, திரு. சிங்காரவேலன் பக்கிரி சாமி அவர்கள். அமைத்துத் தந்துள் ளார்கள் பன்னிரண்டு நிறக்கலவைகள் கொண்டு அழகொழுக வர்ணந்தீட்டி உயிர்ப்பித்தவர் கொழும்பு திரு. வி. சூரிய குமாரன் அவர்கள். இவர்கள் அனைவரும் இராஜகோபுரத் திருப்பணியின் மூலம் ஆற்றியுள்ள சிவ தொண்டினைச் சிவனடி யார்களாகிய நாம் அனைவரும் பாராட்டி நன்றி நவிலக் கடமைப்பட்டுள்ளோம். சிவஇராஜ கோபரமாகிய தூலலிங்கத்தை நாமுந் தினந்தோறுந் தரிசனை செய்து இஷ்டசித்திகளையும், ஈறிலா இன்பப் பேற்றினையும் எய்துவோமாக!

ஓம் சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூவையர்கள் பூச்சூடிப் பொட்டிட்டுப் புது வாழ்வுகாண
புன்முறுவல் தவழ அருள் வழங்கும் அம்மை
தேவகோட்டை மீனாட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மார்க்கண்டர் மகனின் மணிவிழா மன்றத்தில் நாக. சண்முகம்
அவர்களும், இராமகான சபை நாராயண சாஸ்திரிகள் அவர்களும்.
மணிவிழாத் தம்பதியரும், சண்முகம் புனிதவதி அவர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மதுரை ஆதீன 292 ஆவது குருமகா சந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் ஆசியுரை

எல்லாம்வல்ல எம்பெருமானது இன்னருளால்
எல்லா நலன்களும் எய்துக.

கடவுள் வழிபாட்டினைத் தலையாய கடனாகக் கொண்டு உய்தி பெறுதல் தமிழர்களிடத்தே தொன்று தொட்டு நிலைத்து நிற்கும் உண்மையாகும். உலகத்தில் எந்தப் பகுதியில் தாம் வாழ்ந்து வந்தாலும் அன்பு வெள்ளம், அருள் வெள்ளம், அதன் பயனாகிய இறையின்ப வெள்ளம் ஆகிய மூன்றின் சங்கமத்திலே பக்தித் திருநீராடல் செய்திடத் தமிழர்கள் தவறினது இல்லை. தேவாரத் திருமறைகளையும், ஆழ்வாரது பாசுரங்களையும் ஓதி வந்து இறைவனது இன்னருள்மாட்டு ஆராக் காதலை அவர்கள் வளர்த்து வருகிறார்கள். என்பதற்கு தமிழகத் திருக்கோயில் திருவிழாக்களின் சாயல்களாக அண்டைநாட்டுக் கோயில்கள் அமைந்திருப்பதே சான்று. திருக்கோணமலை, யாழ்ப்பாணம், புங்குடுதீவு முதலான பகுதிகளில் தமிழர்கள், இறையுணர்வுகளைப் பெருக்கிக் கொள்ளவும், தமிழர் சமய வரலாற்றுப் பெருஞ் சிறப்புக்களை உலகமனைத்திற்கும் எடுத்துக் காட்டவும் திருக்கோயில் திருப்பணிகள் பல அளவின்றி ஆற்றி வருதலை நாம் நன்கு அறிவோம்.

திருப்பணிகளுள் மிகவும் பயன் தரத்தக்கதும், சீரிய புகழ் உடையதும் திருக்கோயிலுக்கு விண்ணுயர் கோபுரங்கள் எழுப்பித் திருக்குடமுழுக்கு விழா எடுப்பித்தலேயென்பது தமிழுலகம் அறிந்து, வைகலும் போற்றியொழுகி வரும் ஒரு பேருண்மை. அத்திருப்பணி தெய்வ நலத்தில் அடியவர்களை உய்க்கும். அருளையும் துய்ப்பிக்கும்.

அருள்மிகு மீனாட்சியம்மன் துணையாக புங்குடுதீவில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு சோமசுந்தரேசப் பெருமான் திருக்கோயிலில் பஞ்ச தள இராஜகோபுரம் வானுயர்ந்து இலங்கை மானிலத்தின் இறைமை கருவறையெனப் பறைசாற்றிடும் வண்ணம் உள்ளதை நன்கு உணர முடிகிறது. நமக்கு அத்திருப்பணி மட்டில்லா மனநிறைவையும் மனமகிழ்வையும் தருகிறது. புங்குடுதீவை மிகச் சிறந்த வளம் செறிந்த தீவாக இவ்வாலயம் இனி ஆக்கிவிடும் என நம்பலாம். இலங்கைவாழ் தமிழர்கள் சிவம் பெருக்கும் சிந்தையராய் சீலமுடன் ஆகம நெறிப்படி ஒழுகுபவர்களாய் இருக்கிறார்கள் என்பதற்கு இதுபோன்ற திருக்கோயில்கள் எடுத்துக்காட்டாக இலங்குகின்றன.

26.3.81 ஆம் நாள் நடைபெறும் திருக்குடமுழுக்கு அதிவிமரிசையாகப் பக்திப் பரவசத்துடன் கொண்டாடப் பெறவும், அதில் யாதொரு விக்கினமும் நிகழாவாறு அங்கே உறையும் இறைவனும் இறைவியும் இன்னருள் புரியவும், வழிபாட்டின்போதும், இசைச் சொற்பொழிவின் போதும் உள்ளூர்ப் பெருமக்களும் அன்பர்களும், மற்றும் திரளாக வந்து குவியும் பக்தர்களும் இறைவழிபாடு செய்தும், செவியினிக்கக் கேட்டுச் செம்மாப்புறவும், திருவருள்பாலிக்க வேணுமாய் எல்லாம்வல்ல ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசப் பெருமானையும் நமது குருமுதல்வர் ஞானசம்பந்தப் பெருமானையும் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

எல்லோருக்கும் ஆசீர்வாதம்.

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்

மதுரையாதீனம்,
70, தெற்கு ஆவணிமூல வீதி,
மதுரை.
10.2.81

With Best Compliments

from

*

# ARASAN COMPANY

General Merchants & Commission Agents

**No. 72-A, 4th Cross Street,**

**COLOMBO-11.**

Phone: 29407

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்
# ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் ஸ்வாமிகளின்
## ஆசியுரை

✶

பேரன்புடையீர்,

புங்குடுதீவு பெருங்காடு சிவன் கோயில் பஞ்ச தள கும்பா பிஷேகத்தையிட்டு அன்பர்கள் ஒரு மலர் வெளியிடுவதை அறிந்து பெருமிதம் அடைகிறேம். இவ்வாறன சைவ சமய பணிகட்கு சைவ மக்கள் அனைவரும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துப் பாராட்ட வேண்டும். முக்கியமாக சைவ இளைஞர்கள் எடுக்கும் இத்தகைய பெரு முயற்சிகளுக்கெல்லாம் நாம் மனமார நன்றி தெரிவித்துக் கொள்ளவேண்டும். சைவப் பயிர் தழைத் தோங்கி வளர்கிறதென்பதற்கு இவை எடுத்துக்காட்டாக அமையும்.

எமது உளங்கனிந்த ஆசிகள்.

**ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் ஸ்வாமிகள்**

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
17.2.81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

*T'grams:* **'RANAMUKA'** *Phone:* **21429**

# K. Arumugam & Company

**Importers General Merchants & Commission Agents**

177, 5th Cross Street,

COLOMBO-11.

உ
சிவமயம்

# Sivasakthy Mills

**RICE - DHALL MILLERS**

**JA-ELA.**

**T'phone: 076 - 394**


சிவசக்தி மில்ஸ்

அரிசி - பருப்பு ஆலை

மினுவாங்கொடை ரோட்,


யா-எல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேதியன் மார்க்கண்டேயன் விலங்கிடு காலன் சென்று
ஆதிநாயகனை வேண்டி அணுகியே அருளால் வந்த
சோதியாம் தூயலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவஸ்ரீ மா. மீனாட்சிசுந்தரக் குருக்களும், திருமதி. பரமேஸ்வரி அம்மாளும்
அறுபதாம் கல்யாணம் கண்டபோது வாழ்த்திய மெய்யன்பர்கள் சிலருடன்
மணிவிழாத் தம்பதியர்.



சிவன் கோவில் பெருவழிபாட்டுத் தினமொன்றில் சிவாச்சாரியார்களுக்கு
அன்பளிப்பு வழங்கும் நா. க. மயில்வாகனர் அவர்களும், பாரியாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுபெரும் தமிழறிஞர் கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் வாழ்த்து

<u>பிரார்த்தனை உரை</u>

"கோபுர தரிசனம்
கோடி புண்ணியம்"

புங்குடுதீவு
கிராஞ்சியம்பதி
சிவகாம சுந்தரி சமேத
ஸ்ரீ சோமசுந்தரேசுவரர்
ஆலய
இராஜ கோபுரம்
திரு. நா. சண்முகம் அவர்களின்
தனித்த உபயம்.

★

கோபுரம் தூல லிங்கம்
மூலஸ்தான மூர்த்தம்
சூக்கும லிங்கம்

★

தூல லிங்கமாகிய கோபுர தரிசனம்
சூக்கும லிங்கத்தை
நினைவுபடுத்தி,
இறை அநுக்கிரகத்துக்குப்
பாத்திரமாக்கி,
தரிசிப்பார் புண்ணியத்தை
மேன் மேற் பெருக்கி,
கோடி புண்ணியம்
ஆக்கி விடுகின்றது.

★

சகல வைபவங்களோடுங்
கூடிய
பஞ்ச தள இராஜ கோபுர
கும்பாபிஷேகம்
மக்கள் உள்ளிட்ட
உயிர்களின் உள்ளத்தைப்
புனிதம்
செய்வதாக
என்று
திருவருளைப்
பிரார்த்திப்போமாக.

சி. கணபதிப்பிள்ளை
(இலக்கிய கலாநிதி, பண்டிதமணி)

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
9-3-1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

With Best Compliments from:

# Ambal Trading Company

General Merchants & Commission Agents
for Local Produce

අම්බාල් ට්‍රේඩිං කොම්පැණි

அம்பாள் ரேடிங் கொம்பனி

**78, 4th Cross Street,**

**COLOMBO-11.**

T'phone: 29374

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# உயர்நீதிமன்ற நீதியரசரின் ஆசியுரை

புங்குடுதீவில் தோன்றியுள்ள சிவன் கோயிலுக்கு பல லட்ச ரூபாய் செலவில் ராஜ கோபுரம் அமைக்கப்பெற்று எதிர்வரும் 26.3.1981 ல் வெகுவிமரிசையாக கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதை அறிந்து அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் சிறுவனுக இருந்த காலத்தில் தீவகங்களிலேயே கோபுரம் அமைந்த கோயில் நயினுதீவில் உள்ள நாகபூஷணி அம்பாள் கோயில் மட்டுமே. இன்று அயல் தீவகங்களிலுள்ள கோயில்களிலும் கோபுரம் அமைக்கப்பெற்று வருவதை அறியும்போது என் மனம் பெருமகிழ்ச்சி அடைகிறது.

ஏனெனில் பல வழிகளாலும் பின்தங்கிய எம் தாயகத்திலே எம் மூதாதையர் கண்ட கனவெல்லாம் எம் காலத்திலே நனவாக காணக்கிடைத்தது பெருமையும், பேரதிர்ஷ்டமுமே யாகும். அல்லாமலும், இறைவனின் அளப்பரிய கருணையையும் இங்கு பிரத்தியட்சமாக காணமுடிகின்றது.

இன்றைய நிலையில் கோபுரம் அமைப்பது சுருக்கமாகவோ, சுலபமாகவோ செய்யக் கூடியதொன்றன்று. இதற்குப் பல லட்ச ரூபாய் தேவைப்படும். பணத்தைத் தேடிய போதிலும் நல்ல மனம் வேண்டும். அதிலும் துணிவுள்ள திடமனம் வேண்டும். இறைவனின் கருணையும் வேண்டும்.

துணிந்து பணிசெய்ய முன்வந்து ராஜ கோபுரம் அமைத்து கும்பாபிஷேகம் செய்து, நறுமணம் கமழும் நல் மலரும் வெளியிட இருப்பதை பாராட்ட வேண்டியவனுகவே உள்ளேன். நான் மட்டுமன்றி தமிழ் நாடே போற்றக் கடமைப்பட்டுள்ளது. இவர்கள் மட்டுமல்ல இவர்களின் பரம்பரை, வருங்கால சந்ததி யாவருமே போற்றப்பட வேண்டியவர்கள். இச்சேவையை கோபுரம் என்றென்றும் நினைவுறுத்தி நிற்கும் ஓர் வானளாவிய ஆலயத்தின் அரும்பெரும் சின்னமாகவே திகழும்.

இப்படியான நல்ல பணிகளைச் செய்ய தாயக மக்கள் முன்வரவேண்டுமென வேண்டிக் கொள்வதுடன் விழா இனிதே நடைபெற வேண்டுமென்றும், கும்பாபிஷேக மலர் நறுமணம் கமழ்ந்து இனிதே முடிவுற வேண்டுமென்றும் திருவருள் கிடைக்க இறைவனை இறைஞ்சுவதுடன், என் நல்லாசிகளையும் கூறி இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

சு. சர்வானந்தா,
உயர்நீதிமன்ற நீதியரசர்.

6/1, ரொரிங்டன் பிளேஸ்,
கொழும்பு - 7.
16.2.81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

T'phone: 36077

# SIVASHANMUGARAJAH & CO.

**GENERAL MERCHANTS, COMMISSION AGENTS AND EXPORT SUPPLIERS**

*Dealers in:*

**All kinds of Ekel Brooms, Coir Brooms, Coir Yarns, Jute Twine, Paper Bags and all other Local Produce.**

45, 4th Cross Street,

**COLOMBO-11.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். அரசாங்க அதிபரும், மாவட்ட அமைச்சின் செயலாளரும், முன்னைநாள் சட்டசபை முதல்வர் சேர். வை. துரைசுவாமி அவர்களின் புதல்வரும் ஆகிய திரு. யோகேந்திரா அவர்கள் அளித்த ஆசியுரை

*

## அருள் மழை பொழிக!

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பது ஆன்றோர் வாக்கு. இந்த வாக்கினை வழிவழியாக எமது சமயத்தவர் கைக்கொண்டு வாழ்கின்றார்கள். புங்குடுதீவு மேற்கு — பெருங்காடு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு ஐந்து தளங்கள் அமையப்பெற்ற பஞ்ச தள ராஜ கோபுரமொன்றினைப் புங்குடுதீவைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளர் திரு. நா. சண்முகம் குடும்பத்தினர் அமைத்திருப்பது மிகவும் பாராட்டுக்குரிய பக்தி நிறைந்த செயலாகும். இக் கோபுர வேலை நிர்மாணத்தினைத் தொடங்கி வைத்து, இக் கும்பாபிஷேக வைபவத்தில் பங்குகொள்ள இறைவன் அருள்பாலித்தமை எனக்குக் கிடைத்த பெரும்பேறெனவே கருதி மகிழ்கின்றேன். அது தொடர்பாக வெளியிடப்படும் கும்பாபிஷேக மலருக்கும் என்னுடைய பக்தி பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடவுள் பக்தியும் பண்பாடும் மிக்க இப்பகுதி மக்களுக்கு இறைவனின் அருள் மென்மேலும் நிலவப் பிரார்த்திக்கின்றேன். புங்குடுதீவு மேற்கு — பெருங்காடு ஸ்ரீ மீனாக்ஷி அம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வரரின் அருள் எங்கும் பொலிவதாக.

யோகேந்திரா துரைசுவாமி,
மாவட்ட அமைச்சின் செயலாளரும்,
யாழ். அரசாங்க அதிபரும்.

9-2-1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலாயன் கபே

36, 38, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

Telephone: 8074

WITH THE BEST COMPLIMENTS

FROM

*


# MAYURA ENTERPRISE

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

195, FIFTH CROSS STREET,

COLOMBO-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவனுர் திருவடியை சிந்தையில்வைத்து மந்திரம் வளர்க்கும் மா. பிளுட்சிசுந்தரக் குருக்களும், பாரியார் பரமேஸ்வரி அம்மாவும், மகள் லோகேஸ்வரியும், சின்ன மார்க்கண்டச் செல்வன் அருளேதயனும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மார்க்கண்டர் மகன் மீனுட்சிசுந்தரக் குருக்களுப் நாகலிங்கனுர் வழித்தோன்றல் சண்முகனுரும்.

உளியால் மொழி எழுதி உத்தமனுர் கோபுரத்தை உயர நிட்டிய கனக - சபாரத்தினம் அவர்கள்.





பரமன் கோபுரத்தில் பாவைக் கதை காட்டி பணைப் பெருமைதன்னைப் பார்வைக்கு வைத்த பக்கிரிசாமி அவர்கள்.

சூரிய தூரிகையால் நேரிய கோடிழுத்து வண்ணம் தீட்டிய வி. சூரியகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரின்
# வாழ்த்துச் செய்தி

★ ★ ★

ஓர் ஆலய அமைப்பில் இராஜ கோபுரம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. புங்குடுதீவு மேற்கேயுள்ள அதிகீர்த்தி பெற்ற ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி கோவிலுக்கு ஓர் இராஜ கோபுரம் இல்லாக் குறையை அக்கிராமப் பெரியார்கள் இப்பொழுது நிவிர்த்தி செய்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். அத்திருப்பணி வேலை குறுகிய காலத்தில் வெற்றிகரமாக முடிவுபெற்று பங்குனி மாதம் 26ம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற இருப்பது ஆலயப் பிரமுகர்களின் விடாமுயற்சிக்கும், தெய்வபக்திக்கும் சான்றாக விளங்குகின்றது. கும்பாபிஷேக தினத்தன்று வெளியாகவிருக்கும் சிறப்பு மலருக்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

புங்குடுதீவு மக்களின் அயரா உழைப்பாலும், தேசபக்தியாலும் அவ்வூர் சமீப காலத்தில் பலதுறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருப்பதைக் காணலாம். சோமசுந்தரேஸ்வரப் பெருமானின் திருவருளால் இவ்வூரின் முன்னேற்றம் இன்னும் மென்மேலும் ஓங்கி வளரவும், கும்பாபிஷேக விழா சிறப்பாகப் பூர்த்தியாகவும் பிரார்த்தித்து எனது ஆசியை வழங்குகின்றேன்.

வீ. சிவசுப்பிரமணியம்,
தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்,
உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர்.

75, லோறன்ஸ் வீதி,
கொழும்பு.
13.2.81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

of

★ ★ ★

# Devi Trading Company

**MERCHANTS, AGENTS, DEALERS IN AYURVEDIC DRUGS, CHEMICALS ETC.**
**EXPORTERS OF ALL CEYLON PRODUCES.**

**125, BANKSHALL STREET,**

**COLOMBO-11.**

Telephone: 2 2 0 3 4

Telegrams: "GRADUATE"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபையார் வழங்கிய ஆசியுரை

ஓர் ஆலயத்தின் அமைப்பில் பிரதான அங்கமாக விளங்குவது அவ் ஆலய முகப்பில் வானளாவ எழுந்தோங்கி நிற்கும் ராஜ கோபுரமாகும். வெகு தூரத்தே வருபவர்கள் ஆலயம் ஒன்றிருக்கின்ற தெனக்காணவும் அக்காட்சியினுல் இறைவனை நினைந்து அன்பு கொள்ளவும் வாய்ப்பாக அமைந்திருப்பது திருக்கோபுரமாகும். அண்டசராசரங்கள் எல்லாவற்றை யும் தன்னகத்தே கொண்டு விளங்குவதான ஓர் அமைப்பே கோபுரமாக நிருமாணிக்கப்பெறுகிறது. உலகங்கள் எல்லாவற்றையும் தன்னகத்தே அடக்கிஉள்ளது இறைவனின் அருவுருவத்திருமேனியாகிய இலிங்கமாகும். அந்த இலிங்கத்தின் காட்சியைக் கண்ணுல் நேரிற்காணும் பாவனையாகக் கோபுரம் அமைக்கப்பெறுவதால் அது தூலலிங்கம் என்று சொல்லப்படும். "கோபுரதரிசனமே என்பாவ விமோசனமே" என்று கூறப்படும் ஒரு பாடல் வரி எமக்கெல்லாம் கோபுரத்தின் மகிமையை விளக்குவதாய் இருக்கிறது. கோபுரத்தின் அமைப்பிலுள்ள வாயில்களின் எண்ணிக்கை யைக் கொண்டு அக்கோபுரம் பற்பல தத்துவங்களை உள்ளடக்கி விளக்குவ தென ஆன்ருேர் கூறுவர்.

இத்தகைய மகிமை வாய்ந்த ராஜ கோபுரம் ஒன்று புங்குடுதீவு பெருங்காட்டுச் சிவன் கோயில் முகப்பில் இன்று மிக அழகாக எழுந் தோங்கி நிற்கின்றது. இக்கோயிலுக்குப் பிரதான அங்கமாகிய கோபுரம் இல்லாத குறையை நோக்கி அதனை நிவிர்த்தி செய்ய எழுந்த நினைவு மிகப் பெருந்தரும சிந்தையுள்ள ஒருவர் உள்ளத்தில் உதித்ததை இறை யருளின் தூண்டுதலாகக் கருதி நாம் பாராட்டுகிறேம்.

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்ருல்
அற்குப ஆங்கே செயல்

என்ற வள்ளுவர் கருத்துணர்ந்து தாம் பெற்றுக்கொண்ட பெரும் செல்வப் பெருக்கை ராஜ கோபுரம் அமைத்தலாகிய மிகப்பெரும் சிவபுண்ணிய கைங்கரியத்தில் செலவிட்ட அந்தப் பேரன்பருடைய செயல் யாவராலும் போற்றுதற்குரியது. புங்குடுதீவு பெருங்காட்டுச் சிவன் கோயில் பல்வகை அம்சங்களோடும் பூரணத்துவம் பெற்று விளங்கவைத்த சிவ புண்ணியச் சிந்தனையை நாம் வாழ்த்துகிறேம். அத்திருக்கோயிலின் எழுச்சிக்கும் மாட்சிக்கும் பொலிவிற்கும் காரணர்களாய் நின்றுழைத்த அன்பர்கள் யாவருக்கும் பெருங்காட்டுத்தலத்துச் சிவபெருமானது பேரருள் கிடைப்பதாக.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

இங்ஙனம்,
இ. குலசேகரம்பிள்ளை,
மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய
தேவஸ்தான நிர்வாகஸ்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

# J. M. Damian Rodrigo & Co.,


General Merchants & Commission Agents

172, Maliban Street,

**COLOMBO-11.**


ஜே. எம். டி. ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




[redacted]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரமன் கோவிலில் பைந்தமிழ் வழங்கும் தமிழ்வேள்
வித்துவான் பொன். அ. கனகசபை அவர்கள்.



கிராஞ்சியம்பதியை மதுர மூதாரோடு ஒப்பநோக்கி பத்திமை
வளர்க்கும் பண்டிதர் சி. சரவணனுர் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தேசிய அரச பேரவையின்
# எதிர்க்கட்சி முதல்வர்
# திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்த்து

✶✶✶

இன உணர்வும் இலட்சிய வேட்கையும் சமயப்பற்றும் விருந்தோம்பும் பண்பும் மிக்க புங்குடுதீவு மக்களின் வழிபாட்டுக்குரிய புங்குடுதீவு மேற்கு பெருங்காடு ஸ்ரீ மீனுக்ஷியம்பாள் சமேத சோபசுந்தரேஸ்வர சுவாமி கோவில் பஞ்சதள இராச கோபுர மகா கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்வ தறிந்து அகமிக மகிழ்கின்றேன்.

பாரிய இத் திருப்பணியை நிறைவேற்றி முடித்திருக்கும் வர்த்தக நண்பர் நா. சண்முகம் அவர்களின் தெய்வப்பணி போற்றுதலுக்குரியது. இறை பணியில் அவர் கொண்டிருக்கும் நாட்டம் மேன்மேலும் பல்வகைப் பணிகளை தோற்றுவிக்கும் என நம்புகின்றேன்.

இப்புனிதமான தினத்தில் இறையருள் பொங்கிப் பிரவாகித்து எல்லோருக்கும் மங்களங்கள் பல உண்டாக வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி, கோபுர உபயகாரருக்கும் ஆலய நிர்வாகிகளுக்கும் என் அன்பான வாழ்த்துக்களை உரித்தாக்குவதில் இறும்பூதெய்துகிறேன்.

வணக்கம்.

**அ. அமிர்தலிங்கம், பா.உ.**
இலங்கை எதிர்க்கட்சி முதல்வர்.

மூளாய்,
சுழிபுரம்.
7.3.1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T'phone: 33240

*With Best Compliments from:*

# Gunasekara Sons & Co.,

**GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**

No. 115, FIFTH CROSS STREET,

**COLOMBO-11.**

With Best Compliments from:

# LATHA TRADING CO.,

GENERAL MERCHANTS

No. 59, Dam Street,

**COLOMBO-12.**

Phone: 34907

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாநகர முதல்வர்

# திரு. இ. விசுவநாதன் அவர்களின் வாழ்த்து

✶ ✶

புங்குடுதீவு மேற்கு - பெருங்காடு ஸ்ரீ மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்த ரேஸ்வர சுவாமி கோவில் பஞ்சதள இராஜ கோபுர கும்பாபிஷேகம் ரௌத்திரி ஆண்டுபங்குனித் திங்கள் 13ம் நாளில் வெகு சிறப்பாக நடைபெறுவது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

தமிழ் மன்னர் காலத்திலும்கூட தமிழ் மன்னர்கள் தமது மாளிகைகளிலும் பார்க்க இறைவன் திருக்கோவிலையே பெருஞ்சிறப்புடன் அமைப்பதில் பெருமை பெற்றனர். அதனால்தான் தமிழனின் திராவிட சிற்பச் சிறப்புக்கள் யாவும் தெய்வ சந்நிதானங்களில் மண்டிக்கிடப்பதை இன்றும் நாம் தமிழ்நாட்டில் காணக்கூடிய தாகவுள்ளது.

தமிழ்நாட்டுக்கு வருகைதரும் வெளிநாட்டார் எமது கோவில்களில் காணப் படும் [சிற்பத்திறனைக் கண்டு வியப்பதற்காகவே வருகிறார்கள். அதுபோன்ற பெருமையை இங்கும் ஏற்படுத்தும் பணியின் ஓர் அம்சமாகவே புங்குடுதீவு பெருங்காடு சிவன்கோவிலில் பஞ்சதள இராஜகோபுரம் நிறுவப்பட்டுள்ளது.

மேற்படி இராஜகோபுர கும்பாபிஷேகத்தில் லண்டன் முருகனின் கீர்த்தியைப் பாடிய இசைச் சக்கரவர்த்தி சீர்காழி கோவிந்தராஜன் தமது குழுவினருடன் கலந்து கொண்டு இசைமாரி பொழியவிருப்பது வைபவத்தின் மாட்சிக்குக் கட்டியம் கூறுகின்றது.

மேற்படி சிறப்புப் பொருந்திய புங்குடுதீவு, பெருங்காடு சோமசுந்தரேஸ்வர சுவாமி கோவிலின் பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகத்தையொட்டி, கொழும்புவாழ் தீவுப்பகுதி மக்கள் ஒரு விசேட மலரை வெளியிடுவது மிகமிகப் பொருத்தமானதே!

எனவே புங்குடுதீவு சிவன்கோவில் பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகத்தை யொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்குச் செய்தி விடுப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகமும், அதனையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலரும் நேர்த்தியாகவும், வனப்பாகவும் அமைய ஸ்ரீ மீனாட்சியம்பாள் சமேதராக சோமசுந்தரேஸ்வர சுவாமி அருள்பாலிப்பாராக.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
8-3-1981

இ. விசுவநாதன்
மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

from

# V. MANICKAM & BRO.

IMPORTERS AND EXPORTERS
GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

34, FOURTH CROSS STREET,
COLOMBO - 11.

Telephone: 23408, 23986 Telegrams: 'THAVAYOGA'

WITH THE BEST COMPLIMENTS

FROM

# NALLUR TRADERS

IMPORTERS, GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

நல்லூர் டிரேடர்ஸ் නල්ලූර් ට්‍රේඩර්ස්

49, FOURTH CROSS STREET,
COLOMBO - 11.

Telephone: 33991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மேலதிக மாவட்ட நீதிபதியின்

## ஆசியுரை

இலங்கை பூராவும் உள்ள இந்துக் கோவில்களில் எல்லாம், புனருத்தாரண வேலைகள் நடைபெற்று, பழம்பெருமை வாய்ந்த இந்து ஆலயங்கள் புத்தொளி பெற்று வருவதை நாம் காணும்பொழுது பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

பழம்பெருமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றான புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி சோமசுந்தரேஸ்வரர் ஆலய ராஜ கோபுரத்தை தனது சொந்தப் பணத்தில் கட்டி எழுப்பிய பிரபல வர்த்தகர் திரு. நாகலிங்கம் சண்முகம் அவர்களை எமது சைவ உலகம் என்றும் மறக்கமாட்டாது. இந்து ஆலயங்களை புனருத்தாரணம் செய்த மன்னர்களின் வழியில் நின்று தொண்டு புரியும், திரு. சண்முகம் அவர்களின் சிவத்தொண்டு மேலும் வளர எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு சகல நலன்களையும் அளிப்பாராக.

புங்குடுதீவு பெருங்காடு சிவன் கோவிலின் ராஜ கோபுரக் கும்பாபிஷேக நிகழ்ச்சியில் இசை விருந்தளிக்க வந்திருக்கும் பிரபல தென் இந்தியப் பாடகர் சீர்காழி கோவிந்தராஜனும் சிவத் தொண்டில் நனைந்தவராவார். அவருடைய இசை நிகழ்ச்சி சிறப்புறவும் எனது நல்லாசிகள்.

க. ஞானச்சந்திரன்,
யாழ்ப்பாண மேலதிக மாவட்ட நீதிபதி,
பாதுகாவலர், இலங்கை இளங் கலைஞர் மன்றம்.

யாழ்ப்பாண மாவட்ட மன்று,
18.2.81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

of

# Lanka Products Trades

**Dealers in Groceries & Commission Agents**

21, St. John's Road,

COLOMBO-11.

Telephone : **26740**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# புங்குடுதீவு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோபுரத் திருப்பணி வாழ்த்துப்பா

வாழிய உலகம் வாழிய தெய்வம்
வாழிய மயிலோன் வாழிய ஷண்முகம்
புண்ணிய பூமியாம் புங்குடு தீவினில்
எண்ணிய திருப்பணி இனிதுடன் விளங்கிட
கோபுர பணியும் கொடிமரப் பணியும்
கோடி புண்ணியம் வழங்கித் திகழ
மீனாட்சி சுந்த ரேஸ்வரர் ஆலயம்
மின்னிப் பொலிந்து அருளுடன் விளங்கி
அந்தணர் அறவோர் யாவரும் துதித்திட
சுந்தரேஸ் வரர் கொலு வீற்றிருக்கும்
நற்பதி ஆகியே நாடு புகழவும்
கொற்றவர் வாழ குடிகளும் வாழ
நற்றமிழ் ஓங்கியே நற் பணி செய்து
உற்றவர் மற்றவர் உலகோர் வாழ்த்தவும்
செந்தில் வாழும் சேனாதிபதி யாம்
ஜெயந்தரும் முருகன் இணையடி பரவி
திருப்பணி சிறந்திட ஆசிகள் வழங்குதும்
வாழிய பணிகள் வாழிய கோயில்
ஆயிரம் காலம் நல் உலகெல்லாம்
போற்றிப் புகழ்ந்து சிறந்து விளங்கியே
வாழிய பணிசெய்யும் புண்ணியர் வாழி
வாழிய மயிலோன் வாழ்த்துதும் வாழ்த்துதும்.

பாடியவர்:
**P. A. சேனாதிபதி ஐயர்,**
ஆசிரியர்,
செந்தில் முருகன் நடுநிலை பள்ளி,
திருச்செந்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

of

# S. P. SAMY & COMPANY

**IMPORTERS, GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**

72, Fourth Cross Street,

**COLOMBO-11.**

T'phone: 22640    T'grams: "BALLARI"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுபெற்ற நீதிபதியின்

# நல்வாழ்த்து

* *

சிவத் தொண்டுக்கு எப்போதும் அள்ளி அள்ளி நிதி வழங்குவதில் தீவுப் பகுதி மக்கள் என்றுமே பின் நின்றதில்லை. இதை நான் தீவுப் பகுதியில் நீதிபதியாகக் கடமையாற்றிய காலத்தில் நன்கு அவதானித்துள்ளேன். அவர்கள் எல்லோருக்கும் முன்னோடியாக, தனது சொந்தப் பணத்தில், புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சி யம்பதி சோமசுந்தரேஸ்வரர் ஆலயத்தின் ராஜ கோபுரத்தைக் கட்டி எழுப்பிய திரு. நாகலிங்கம் சண்முகம் அவர்களை சைவத் தமிழ் உலகு என்றுமே மறக்க முடியாது.

திரு. சண்முகம் அவர்களின் இவ் அரிய சிவதொண்டு சரித்திரத்தில் பொறிக் கப்பட வேண்டிய தொன்றாகும்.

திரு. சண்முகம் அவர்களின் சிவத் தொண்டிற்கு மேலும் மெருகூட்டும் நிகழ்ச்சி யாக, அவரால் கட்டி எழுப்பப்பட்ட ராஜ கோபுரக் கும்பாபிஷேக தினத்தன்று இசைமாரி பொழிய வரும் திரு. சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்களின் இசைக் கச்சேரி அமைவது சாலப் பொருந்துவதாகும்.

ராஜ கோபுரக் கும்பாபிஷேகமும் சீர்காழியின் இசைக் கச்சேரியும் சிறப்புடன் அமைய எனது நல்வாழ்த்துக்கள்.

க. வை. நவரெத்தினம்,
(ஓய்வுபெற்ற நீதிபதி)

யாழ்ப்பாணம்.
18-2-81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

From:

# J. M. Damian Rodrigo & Co.,

General Merchants & Dealers in Oilman Goods Etc.

**No. 170, Maliban Street,**

**COLOMBO - 11.**

With Best Compliments

of

# K. RASENTHIRAN

**170, Maliban Street,**

**COLOMBO - 11.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

கொழும்பு - யாழ். பிரபல வர்த்தகர்

# திரு. பொன். த. கனகரத்தினம் அவர்கள்

## வாழ்த்துகிறுர்!

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு கிராஞ்சியம்பதி ஸ்ரீ மீனுக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வரப் பெருமான் ஆலய பஞ்ச தள இராஜ கோபுர குடமுழுக்கு வைபவம் இன்றைய தினம் வெகுவிமரிசையாக நடைபெறுகிறது. அருட் செல்வமும் பொருட் செல்வமும் அளவின்றிப் பெற்றுள்ள என் தாயகத்துப் பெரியோரின் வள்ளற்றன்மைக் குவரலாற்றுச் சான்ருக விளங்கும் வகையில் வானுயர நிமிர்ந்து நிற்கிறது இந்தக் கயிலைவாசனின் இராஜ கோபுரம்.

நாற்புறமும் கடலலைகள் நாதமிட நர்த்தனமாடும் தில்லை நடராசனின் எல்லையில்லாப் பெருங்கருணை என்றென்றும் பொலிந்திட விளங்குவது இந்த ஆலயம். பங்குனித் திருநாளில் பக்திப் பரவசத்துடன் நடைபெறும் ஆசாரமிக்க மகோற்சவமும் கற்பின் ஒளிவிளக்காக கன்னிகையர் நோன்பிருக்க காட்சிதரும் மீனுக்ஷியம்மனுக்கான இலட்சார்ச்சனையும், திருவாதிரையில் தேரோடும் பெருஞ்சிறப்பும் இவ்வாலயத்தின் மகிமையை மக்கள் மனதில் இருத்துவன. இந்த மகிமை இன்று இன்னும் ஒருபடி உயர்ந்து தோன்றிட அடியார்கள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்குகின்றது.

இராஜ கோபுரத் திருப்பணியாம் இப்பாரிய கைங்கரியத்தை தனியொருவரது செலவில் நடாத்தி முடித்திருப்பதை எண்ணி வியப்புருதார் எவருமில்லை. புங்குடுதீவின் புகழை வானுயர நிறுத்தியுள்ள வள்ளல் சண்முகத்திற்கும் அவர் குடும்பத்தினருக்கும் அருள் வள்ளலாம் எம் ஆனந்தக் கூத்தனின் தனிப்பெருங் கருணை ஆருகப் பெருகப் போகிறது. அருளமுதம் அருந்திக் களிக்க அலை கடலெனத் திரளும் பக்தர் கூட்டம் இத்திருநாளின் பெருமையை மறக்கவே மாட்டார்கள். இன்று நடைபெறுகின்ற இந்தக் குடமுழுக்கு வைபவமும் அதனையொட்டிய சிறப்பு நிகழ்ச்சிகளும் வரலாறு காணுதவகையில் பல்லாற்ருனும் பொலிந்து விளங்கிட ஸ்ரீ மீனுக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வரப் பெருமானின் திருவருள் ஒன்றித்து நின்று உய்விக்குமாக!

ஓம் நமசிவாய!

அன்பன்,
பொன். த. கனகரத்தினம்

365, 367, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

★

# S. S. NELLAIYAPPAH PILLAI & COY.

**Millers, General Merchants & Commission Agents**
**Importers and Exporters**

P. O. Box 141
**141, Maliban Street,**
## COLOMBO - 11.

T'phone: 2 9 5 6 1 T'grams: "VALAMPURI"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ முருகன் துணை

# கொழும்பு ஜெயந்திநகர் (ஜிந்துப்பிட்டி)
# ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தேவஸ்தானம்
# அளிக்கும் நல்லாசியுரை

புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ கிரர்ஞ்சியம்பதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மீனுட்சியம்பாள் சமேத ஸ்ரீ சோமசுந்தரேசப் பெருமான் திருக் கோவிலுக்கு இராஜ கோபுரம் ஒன்று அமைந்துள்ளது என்றும் இதனைத் தனது சொந்தச் செலவிலேயே, பிரபல வர்த்தகர் திரு. நா. ஷண்முகம் அவர்கள் அமைத்து, அதற்குக் குடமுழுக்கு விழாவும் செய்கின்ருர் என்பதையும் அறிந்து மிகவும் மகிழ்வுற்ருேம்.

தமிழ்நாட்டின் பண்டைய பண்பாட்டில் இன்று நிலேத்திருந்து புகழ் பரப்புவது அன்றைய அரசர்களும் தொடர்ந்து பல சைவப் பிரமுகர்களும் கட்டிவைத்த ஆலயங்களும் கோபுரங்களுமேயாகும். இதனைப் பின்பற்றி நம்முன்னுேர்க்கெல்லாம் முன்மாதிரியாக திரு. ஷண்முகம் அவர்கள், பொருள் இருப்பினும் ஆக்க, ஆக்குவிக்க ஆள் இல்லே என்ற இந்தக் காலத்தில், தனது முழு முயற்சியால் இத்தகைய பெருங்காரியத்தைத் தான், தனியே செய்து முடித்திருப்பது நமக்குப் பெரு வியப்பையும் அவர்கள் திறமையையும் எடுத்துக் காட்டுவதாயுள்ளது.

பொருட் செல்வம் கிடைத்தபோதே இத்தகைய அருட் செல்வத்தையும் பெறுவது எல்லோருக்கும் கிடைக்கும் வாய்ப்பன்று. இவர்கள் பணி மிகச் சிறந்தது மேலும் இவர்கள் வேறுபல பொதுத் தொண்டுகளும் செய்வித்துள்ளார்கள் என்றறிய மிகவும் ஆனந்தமடைகின்ருேம். இவர்களின் பணி மேலும் தொடர்ந்து இவர்களைப் பின்பற்றி மற்றும் பலரும் இவ்வித மெய்த் தொண்டுகள் பல ஆற்றி இந்நாட்டின் சைவ மக்களுக்கு நன்மைகள் பெருக எல்லாம் வல்ல ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரர் அருளால் திரு. ஷண்முகம் அவர்களும் அவர்கள் குடும்பத்தினரும் எல்லா நலன்களும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவோம்.

இத்தகைய தொண்டுகளைப் பெற்ற பெருங்காடு ஸ்ரீ கிராஞ்சியம்பதி மக்கள் பெரிய அதிர்ஷ்டசாலிகள் என்பதில் ஐயமில்லே. அத்துடன் அவர்கள் திரு. ஷண்முகம் அவர்களுக்கும் மற்றும் அவர்கள் போன்ற வள்ளல்களுக்கும் இத்தகைய தொண்டுகளுக்கு நல்லாதரவு அளித்து அவர்கள் தகைமையை யுணர்ந்து ஊக்குவித்துப் பயன்பெற வேண்டும்.

இவ்விழாவினை என்றும் நினைவூட்டும் வண்ணம் வெளியிடப்படும் இம்மலர் எல்லாச் சிறப்புகளுடனும் மலரவும் இவ்வண்ணம் யாம் வாழ்த்த எங்களுக்கு வாய்ப்பருளியமைக்கும் ஸ்ரீ வள்ளி தேவசேனு சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியைப் போற்றுவோம்.

இங்ஙனம்,

தெக்ஷணத்து வேளாளர் மகமைப் பரிபாலன சங்கம் லிமிட்ட்.

நிர்வாகிகள் ;

கொழும்பு ஜெயந்தி நகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்.

ஜிந்துப்பிட்டி,
கொழும்பு.
10.3.1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Phone : 21961 Grams:

*With Best Compliments from:*

**MUNA. KANA. AND COY.**

General Merchants & Commission Agents
Wholesale Dealers in Groceries & Curry Stuffs
Importers & Exporters.

**73, 5th Cross Street,**

**COLOMBO - 11.**

விஜயம் செய்யுங்கள்

**"தருசம்ஸ்"**

புடவை மொத்த வியாபாரிகள்

204/7-A, பிரதான வீதி,
கொழும்பு-11. தொலைபேசி: 23786

★

**"තරුසම්ස්"**

තොග සහ සිල්ලර රෙදිපිළි වෙළෙන්දෝ

204/7-A, කෙළින් වීදිය,
කොළඹ-11. දුරකථනය: 23786

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி கோவில்
தர்மகர்த்தா சபையின் கௌரவ செயலாளர்

# திரு. க. தியாகராசா அவர்கள் மனம்மகிழ்ந்தளித்த வாழ்த்துரை

புங்குடுதீவு மேற்குப் பெருங்காடு கிரௌஞ்சியம்பதியில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரேஸ்வரப் பெருமானின் திருக்கோவிலுக்கு ஐந்து தளங்களைக்கொண்ட இராஜகோபுரம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதையும், எதிர்வரும் 26.03.1981 அன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறவிருப்பதையும் அறிந்து அகமிக மகிழ்ந்து இறும்பூதெய்துகிறேன். அகில உலகெங்கணும் இசைமணம் பரப்பும் கான மாமேதை சீர்காழி கோவிந்தராஜனின் இன்னிசைக் கச்சேரியும் அன்று சோமசுந்தரேஸ்வரப் பெருமானின் திருச் சந்நிதியில் இடம்பெறவுள்ளதென்பதையறிந்ததும் அப்பெருமானின் திருவருளினை வியந்து போற்றுகின்றேன்.

சோமசுந்தரேஸ்வரப் பெருமானின் திருவருள் நலத்தினால், அவன் புகழ் போற்றும் அற்புத நறுமலர் ஒன்று வெளிவரவிருப்பதையும், எமது நல்வாழ்த்து அம்மலரில் இடம் பெறப்போகின்றதென்பதையும் எண்ணுந்தோறும் உள்ளம் பூரித்துவிம்ம, அப்பெருமானைப் போற்றுகின்றேன்.

தவமும் தவமுடையார்க்கேயாகும் என்னும் ஆன்றோர் கூற்றுக்கமைய ஆலயத் திருப்பணிக்கு வாரி வாரி வழங்கிய கொடைவள்ளல் இரத்கம சண்முகனாரும் அவரது குடும்பத்தினரும் எல்லா நலன்களும் எய்தப்பெற்றுப் பல்லாண்டு காலம் இனிதே வாழ அருள் புரியுமாறு இறைவனை வேண்டுகின்றேன்.

மஹா கும்பாபிஷேகம் இனிதே நிறைவேறவும், அடியார்தம் உள்ளங்களில் என்றும் இந்த நினைவுகளை நிலைநிறுத்த வெளிவரும் மலர் எத்திசைகளிலும் நறுமணம் பரப்பி எழிலுடன் பொலிந்து மிளிரவும் கிரௌஞ்சிப் பெருமான் திருவருள் பாலிப்பானாக.

அடியார்தம் நடுவிருக்கும் அண்ணலவிர் சடைமுடியான்
துடியிடையா ளுடனமர்ந்து துயர்களையும் திருக்கோவில்
படியிலுள்ளார் தொழுதேத்தும் பன்மாடிக் கோபுரத்தோ
டெழில்ததும்ப புகழ்பரப்பி என்றென்றும் வாழியவே.

நிலவுலகில் வாழ்வாங்கு வாழ்கின்ற நிதிக்குவையான்
உலகுபுகழ் கொடைவள்ளல் உயர்குணத்தான் இரத்கமையில்
உலகில்பல தொழில்புரியும் அருளாளன் சண்முகனார்
உலகின்மிசைப் பலகாலம் உற்றாரோ டோங்குகவே.

இணையில்புகழ் இசைமேதை இன்னிசைக் கச்சேரியுடன்,
அணைபவர்க்கு அருள்புரிவாற்(கு) ஆட்டுகின்ற அபிஷேகம்
இணையுமின்றி ஈடின்றி இனிதேநன் கீடேறத்
துணைவியுடன் எழுந்தருளும் தோன்றல்அருள் வேண்டுவனே.

இளம்பிறையை முடிக்கொண்டான் ஏழையினை இடங்கொண்டான்
விளங்குகின்ற திருக்கோவில் விழாவென்றும் அடியவர்தம்
மனங்குளிர நினைவதனில் உறைவதற்கு உருவமைந்தே
மணங்கமழ மலர்கின்ற மலரென்றும் விளங்குகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

of

# GEORGE & COMPANY

**GENERAL MERCHANTS & AGENTS**

76, Fourth Cross Street,

COLOMBO-11.

T'phone: 25973


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

அகில இலங்கை இந்து சமாஜ் தலைவி

# திருமதி. சிவபாக்கியம் குமாரவேல் அவர்கள்

# வழங்கிய ஆசியுரை

✱

ஜகத் குரு வணக்கம்

வஸுதேவ ஸுதம் தேவம்
கம்ஸ சாணூர மர்த்தனம்!
தேவகி பரமானந்தம்
கிருஸ்ணம் வந்தே ஜகத்குரும்!

அதஸீ புஸ்ப சங்காசம்
ஹாரனுபுர சோபிதம்
ரத்ன கங்கண கேயூரம்
கிருஸ்ணம் வந்தே ஜகத்குரும்!

பெருமைமிகும் பெருங்காட்டுக் கருணைமிகும் சிவன் கோவில்
கும்பாபிஷேக விழா!

அரிதரிது மானிடராதல் அரிது எனப் பாராட்டப்பட்ட சிறப்புடையது மனிதப் பிறவி. மக்கள் வாழ்வு உண்டு உடுத்தி, உறங்கி, இனம் பெருக்கி இறந்தொழிவதில் மட்டும் முடிவதில்லை. 'வையத்தில் வாழ்வாங்கு வாழ்தல்'' என வள்ளுவப் பெருந்தகையால் சுட்டப் படும் மனித வாழ்வு குறிக்கோளுடையதாய் மனித இனத்திற்கு மட்டுமே தனிச் சிறப்பாக அளிக்கப்பட்ட ஆறுவது அறிவாகிய பகுத்தறிவைப் பயன்படுத்தி வானாகி, மண்ணாகி, வளி யாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி, உண்மையுமாய் இன்மையுமாய்க் கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டுவானாகி நிற்கும் இறைவனை இப்பாருலகினைப் படைத்த பரமனை மறவாது நாளும் பரவி வாழ்வை வளப்படுத்தி, நன்னெறியில் நடத்தி அறவழி யிற் பொருளீட்டி இன்பந்துய்த்து ஏனையர்க்கும் நல்கி அன்பு காட்டி அருள்பெருக்கி தனக் கென வாழாது பிறர்க்கென வாழும் பெற்றியது.

மனிதருடைய ஆயுட்காலம் மிகமிகக் குறைவுடையது. நேற்று இருந்தவன் இன்று இல்லை என்னும் தன்மைத்து இவ்வுலகம் என அழகாகக் கூறுகிறது ''குறள்''.

''நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும் பெருமை உடைத்திவ்வுலகு'' ஒருவன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பதில் சிறப்பில்லை. ஒருவன் எப்படி வாழ்ந்துள்ளான் என்பதில்தான் சிறப்பிருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு நாளையும் பயனுடைய நாளாகப் பிறந்த பிறவியின் பயனை எய்தும் பெருநாளாக அமைத்துக்கொள்ள வேண்டும். இறைவ னுடைய திருப்புகழைப் பரவி ஏத்திப் ''பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்கிறார் ஒரு நாயனார்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் தேவையா என்று கேட்பவர்கள் இக்காலத்திலும் இல்லாமல் இல்லை. உடல் வளர்ச்சிக்கு உணவு தேவையா? என்று கேட்பவரைக் கண்டால் நமக்கு என்ன பதில் கூறத்தோன்றும். அதே உணர்வுதான் சமயம் வேண்டுமா? என்று கேட்பவரைக் கண்டாலும் கூறத்தோன்றும். உடல் வளர்ச்சிக்கு உணவு தேவை. அதுவும் வேளை தவறாமல் காலம் தவறாமல் தேவை. அதைப்போலவே உயிர் வளர்ச்சிக்கும் கடவுள் வழிபாடு இன்றியமையாதது. சமயக் கொள்கைகளும் ஆசாரங்களும் சடங்குகளும் கடவுளிடம் நமக்கு நெருங்க உதவுகின்றன.

உலகில் உள்ள மக்கள் அனைவரும் நலஞ்சிறக்க வாழ வேண்டுமானால், ஒவ்வொரு தனிமனிதனும் கட்டுப்பாட்டோடும், ஒழுங்கோடும் வாழ்வது இன்றியமையாததாகின்றது. ஒழுங்கு இருவகைப்படும். ஒன்று "அகத்தொழுங்கு" மற்றது "புறத்தொழுங்கு" "அகத்தொழுங்கினை நிலைநாட்டுவது சமயம். புறத்தொழுங்கினை நிலைநாட்டுவது ஆட்சிமுறை. அகத்தொழுங்கைக் காக்கும்முறை நிறைகாக்கும் காப்பு" புறத்தொழுங்கைக் காக்கும்முறை சிறைகாக்கும் காப்பு" ஒருவருடைய செயலைத் தூய்மையாக்குவது சட்டம், ஒருவருடைய அகத்தைத் திருத்தி ஆண்டவனின் ஆலயமாக்குவது "சமயம்" எனவே, மக்கள் வாழ்வில் "சமயம்" இன்றியமையாதது என்பது தெளிவாகிறது.

இந்துக் கோயில்களில் இருக்கின்ற விக்ரகங்கள் எல்லாம் என்றும் மேலுலகங்களில் வீற்றிருந்து நம்மை ஆட்சி செலுத்தவரும் அதிகார தெய்வங்களின் பிரதிபிம்பங்களேயாகும். அவர்களது உருவங்களைச் சிற்ப சாஸ்திர மூலமாகக் கல்லாலோ. செம்பாலோ செய்து அவற்றில் அவ்வத் தெய்வங்களை வீற்றிருக்குமாறு வேதாகம முறைப்படி வேண்டிக் கொள்வதே கும்பாபிஷேக வைபவமாகும். அந்த வகையிலே புங்குடுதீவு மேற்குப் - பெருமைதரும் "பெருங்காட்டில்" வீற்றிருக்கும் கருணைமிகும் "சிவன் கோவிலுக்கு"ப் "பஞ்ச தளங்களும்" அழகாகத் தோன்றும் "இராச, கோபுரத்தை"த் தனது சொந்தச் செலவிலேயே சிறப்பாக அமைத்து 26-3-1981 வியாழக்கிழமை (இன்று) "கும்பாபிஷேக விழா"வினையும் சீருஞ் சிறப்புமாக நடாத்துகின்ற பிரபல வர்த்தகரான திரு. நா. சண்முகம் அவர்களையும் பாராட்டுச் செய்து, வாயாரப் புகழ்ந்து வானுயர வாழ்த்துகின்றோம்.


குறிப்பாக, கும்பாபிஷேக விழாவினையொட்டி கும்பாபிஷேக மலரொன்றையும் வெளியிடுவதைக் காணப் பெருமை பூக்கின்றதுடன், "மலர்" எல்லாவகையிலும் சிறப்புடன் அமைந்து வெளிவரக் "கங்கையைச் சடைக்கணிந்தோன்" தாள்பணிந்து இறைஞ்சுகின்றோம்.

தெய்வப் பணியும், திருத்தொண்டும் நிலைத்தோங்கப் பாடுபடும் சகலருக்கும் அவனருள் தானே வந்தடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

திருமதி. சிவபாக்கியம் குமாரவேல்.
(அகில இலங்கை இந்து சமாஜ் 'தலைவி)


1, சிலோன் இன்சூரன்ஸ் பில்டிங்,
வார்ட் வீதி, கண்டி.
21-2-1981



இசைமணி, சங்கீத வித்வான், சங்கீத ரத்னம், ஏழிசை அரசு, இசைக்கடல், இன்னிசை அரசு, இசைமாமணி, இசை அமுதம், கலைமாமணி, இன்னிசை வேந்தன், இசை அரசு, தருமபுர ஆதீன இசைப்புலவர், சங்கீத பாஸ்கர, கம்பீர கானமணி, இசை ஞானபூபதி

**சீர்காழி எஸ். கோவிந்தராஜன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரிபூசை அலங்காரனாய் லட்சார்ச்சனை ஏற்கும்
மூலமூர்த்தி காசிலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கோபுரங்களின் அமைப்புஞ் சிறப்பும்



## வித்துவான் சி. ஆறுமுகம்

தெய்வீக மாண்பினை உலகுக்கு உணர்த்திய பாரத மக்கள், தம் நுண்மதித்திறனால் கைவண்ணங் காட்டிக் கட்டடக்கலையின் சிறப்பினை உயர்த்தி உலகம் திகைப்புறும் வண்ணம் கோவில்களை அமைத்துள்ளனர். மிகப் பழங்காலத்தில் பாரத தேசத்தில் கோவில்கள் மரங்களினால் அமைக்கப் பெற்றன. பின்னர் செங்கல்லினாலும் சுண்ணும் பினாலும் அமைக்கப் பெற்றன. காலப் போக்கில் கற்பாறைகளைக் குடைந்தும் கோவில்கள் உருவாக்கப் பெற்றன. அவைகளே குகைக் கோவில்கள். கருங் கற்களைக் கொண்டு கோவில்களை அமைக்கும் முறை இவற்றிற்குப் பின்னரே தோன்றியது. இத்தகைய கோவில்களில் கலைச்சிறப்புகள் நிறைந்து விளங்கின. அதனால் மக்கள் கடவுள் வழிபாட்டுடன் கலைகளின் மாண்பினையும் உணர்ந்து வாழ்ந்து வந்தனர். கோவில் விமானங்களிலும் கோபுரங் களிலும் காணப்படும் கலையம்சங்கள் சிந்திக்கத் தக்கவை. கோவில்களே கலைகளைக் கட்டிக்காத்து வளர்த்து வந்தவை என்று கூறின் அது மிகையாகாது.

தமிழ் நாட்டில் இன்று காணப்பெறும் கோவில்களெல்லாம் கருங் கற்களினால் கட்டப்பெற்றவை. கருங் கற்களில் பாரத மக்களின் கைவண்ணங் கண்டுகளிக்கும் வாய்ப்பு நமக்கு உண்டு. இவை நம் திராவிடப் பழம் பெரும் கலைப்பண்பினைக் காட்டி நிற்பவை. இந்தியச் சிற்பக்கலை முழுவதையும் நாகரம், வேசரம், திராவிடம் என மூன்றாக அறிஞர் வகுத்துள்ளனர். இவற்றுள் நாகரம் வட இந்தியக் கட்டடக் கலையாகும். இரண்டாவதாகவுள்ள வேசரம், பௌத்த மதத்தினரால் வளர்க்கப்பெற்றது. இது வட்ட வடிவான அல்லது அரைவட்ட வடிவான கட்டட அமைப்பினைக் கொண்டது. இம்முறை தமிழகக் கோவில் அமைப்பினுள் இடம்பெற்று விட்டது. மூன்றாவது வகையான திராவிடம் தென்னிந்தியக் கட்டிடக் கலையாகும். தமிழகத்துக் கோவில்களைப் பல்லவர், பிற்காலச் சோழர், பாண்டியர், விஜய நகர மன்னர் ஆகிய நால்வகை மன்னர்களின் காலங்கொண்டும் நான்காக வகுக்கலாம்.

வட இந்தியக் கோவிலமைப்பில் மேல்தள அமைப்பு முழுவதும் 'சிகரம்' என்று அழைக்கப்பெறுகிறது. மேல் கட்டின் அடுக்குகளின் அளவுக்கேற்ப ஏகதளம், துவிதளம் என்ற அமைப்பு முறைகள் கையாளப் பட்டுள்ளன. இவையிரண்டும் தென்னிந்திய நூல்களில் பாராட்டிப் போற்றப்படுகின்றன. தென்னகத்துக் கோவில்களில் அமைந்துள்ள கோபுரங்கள் கோவில்களை வகைப்படுத்துவதில் பேரிடம் பெற்றுள்ளன. பிற்காலச் சோழர்கள் எடுத்த கோயில்களில் போற்றத்தக்க ஒரு பெரும் பகுதியாக விளங்குவன கோபுரங்களேயாகும். மூலத்தான விமானத்திலும் பார்க்க கோபுரங்கள் முதன்மை பெற்று விட்டன என்ற உண்மையை உலகம் இன்று நன்கு அறியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலுக்கு எடுப்பினையும் ஏற்றத்தையும் தரத்தக்க தோற்றத்தையுடையன கோபுரங்கள். சோழ மன்னர் மட்டுமன்றிப் பாண்டிய மன்னர்களும், விஜயநகர மன்னர்களும் தமிழகத்துக் கோவில்களில் இராச கோபுரங்கள் பலவற்றை எழுப்பினர். பாரத நாடு மட்டுமன்றி அகிலமும் வியக்கத்தக்க கோபுரங்கள் தமிழகக் கோவில்களில் தலை தூக்கி நிற்கின்றன. கோவிற் கட்டடக் கலையுடன் சிற்பக் கலையும் இணைந்து வளர்ந்தமையை இக்கோபுரங்கள் நன்கு உணர்த்துகின்றன. "மாடக்குச் சித்திரமும் மா நகர்க்குக் கோபுரமும்" அழகு தருவன என்பது ஆன்றோர் முடிபு. வானளாவ உயர்ந்து வனப்புடன் ஒளிரும் வண்ண வண்ணக் கோபுரங்கள், வழிபட வரும் அடியவர்தம் உள்ளத்துக்கு உவகை தந்து ஈர்த்து நிற்கும் இயல்புடையன. கோபுரங்களைக் கண்ட மாத்திரத்தே அவற்றை இறைவனாக எண்ணியே மக்கள் தொழுதல் இயல்பு. இந்நிலையில் "கோபுரம் தூலலிங்கம்" என்ற கருத்து உறுதி பெறுகின்றது. தொடக்க நிலையில் கோவில்களின் கிழக்குத் திக்கிலேயே முதற் கோபுரம் எழுந்தது. அக்கோபுரங்கள் ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று ஆகிய பல எண்ணிக்கை கொண்ட மாடங்களை உடையன. கோபுரங்களின் உச்சியில் மூன்று, ஐந்து, ஒன்பது என்ற எண்ணிக்கை கொண்ட கலசங்கள் உண்டு. கோவிலின் அளவுக்கு ஏற்பவே கோபுரத்தின் மாடங்களும் அமையும். மாடங்களைச் சத்தி பீடங்களாகக் கொள்வாரும் உளர். கோபுரத்தின் முற்பக்கமும் பிற்பக்கமும் ஒரே அளவினவாகும். அவை வலப்புறத்தையும் இடப்புறத்தையும்விட அகலங்கூடியவை. முற்பக்கமும் பிற்பக்கமும் திறந்தபடி சாளரங்களாகிய யன்னல்கள் அமைக்கப்படும். இவற்றையே நிலைகள் என்றும் மாடங்கள் என்றும் அழைப்பர்.

கருவறை விமானத்தைவிட கோபுரங்கள் உயர்ந்தனவாக அமைதலே பொது விதி. அதற்குப் புறநடையாக அமைந்த கோவில்களும், கோபுரங்களும் உள்ளன.

கிழக்குத் திக்கிலுள்ள கோபுரம் வடமொழியில் பூர்வ கோபுரம் எனப்படும். தெற்கிலுள்ளது தட்சிண கோபுரம். மேற்கிலுள்ளது பச்சிம கோபுரம். வடக்கிலுள்ளது உத்தர கோபுரம். கோவிலின் நடுவண் அமைந்துள்ள கோபுரம் மத்திய கோபுரம் எனப்படும். இவ்வைந்துமே 'பஞ்ச கோபுரங்கள்' ஆகும். சிற்ப நூல்கள் பஞ்ச கோபுர அமைப்பினை நன்கு விளக்குகின்றன. இன்னும் பத்துவகைப்பட்ட கோபுரங்களும் உண்டு. அவை விரிப்பிற் பெருகும். ஒரு கோபுரத்தின் முக்கியமான உறுப்புக்கள் நான்கு. அவை சிகரம், ஸ்தூபி, கனகூடம், சூத்திரநாசி என்பன. ஒன்று முதல் பதினேழு நிலைகள் அமையும் வண்ணமும் கோபுரங்களை அமைக்கலாம்.

தமிழ் நாட்டில் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் கட்டப் பெற்ற தாராசுரத்துச் சிவன் கோவிற் கோபுரம் மிகவும் உயரமானது. சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் அமைந்தது. இதற்கு அடுத்தபடியாக உயர்ந்த கோபுரம் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் திரிபுவனம் என்ற திருத்தலத்தில் அமைந்த சிவன் கோவிற் கோபுரம். இவையிரண்டும் கோவிற் கருப்பக்கிரக விமானத்தைவிடச் சிறியனவே! பாண்டிய மன்னர் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பேராதிக்கம் செலுத்தினர். அவர்களும் பெருங் கோபுரங்களை அமைத்தனர். திருவாரூர்க் கீழைக் கோபுரம், சிதம்பரம் கோபுரம், ஆவுடையார் கோவிற் கோபுரம் என்பன மூலத்தான விமானத்தைவிட மிகவும் உயர்ந்தவை. கோபுர வளர்ச்சி விரிவடைந்து கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் உச்ச நிலையை அடைந்தது. விஜய நகர மன்னர் ஆட்சியில் கோபுரங்கள் பல உயர்ந்தோங்கி எழுந்தன. திருவண்ணாமலை, சிதம்பரம் போன்ற திருத்தலங்களில் இக்காலத்தில் பெருங் கோபுரங்கள் உருவாகின. மதுரை மாநகரில் நாயக்க மன்னர் காலத்தில் மாபெருங் கோபுரங்கள் அமைக்கப்பெற்றன. கோபுரங்களின் நான்கு மூலைப்பக்கங்களும் நேர் கோடாகக் காணப்படுவது ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு முறை. நான்கு மூலைப்பக்கங்களும் உள் வளைந்து காணப்படுவது மற்றொருவித அமைப்பு முறை. இவ்வாறு அமைக்கப் பெற்ற கோபுரங்கள், தெய்வீக மாண்பினையும், கலைச்சிறப்பினையும் கட்டிக் காக்கும் புனித உருவங்களாக என்றும் விளங்கும்.

பன்னெடுங்காலமாக நம் முன்னோர் கோவில்களையும், கோபுரங்களையும், புண்ணிய தீர்த்தங்களையும், மலைகளையும் தெய்வீக நிலையங்களாகப் போற்றி வருகின்றனர். இவற்றுள் "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" தருமென்பர் ஞானியர். பண்டை நாளில் மன்னர்களே இராச கோபுரங்களை அமைத்தனர். தஞ்சாவூரில் உள்ள பிருகதீசுவரர் ஆலயத்தில் அமைந்துள்ள இராச கோபுரம் மிகப்பெரியது. அதன் வரலாறு வியக்கத்தக்கது. மன்னர்களின் அன்புக் கட்டளையை ஏற்றுக் கலைஞர்களும் பொதுமக்களும் தம் உயிரை ஒரு பொருளாக மதியாது அறப்பணி புரிந்தே அரும் பெருங் கோபுரங்களை உருவாக்கியுள்ளனர். ஆண்டவனின் எண்ணற்ற அருளாடல்களும், பெருமைகளும் சிற்ப வடிவில் கோபுரத்தில் சுடர்விட்டு நிற்கின்றன. ஞான விளக்குந் தந்து நிற்கும் இராச கோபுரங்களின் எழுச்சி என்றென்றும் பத்திமான்களைச் சிந்திக்கச் செய்யும்.


இன்னும் கோவில்களின் வீதிகள் தோறும் கோபுரங்கள் அமைக்கும் வழக்கமும் பண்டை நாளில் இருந்தது. கோவிலின் ஒவ்வொரு பிரகாரத்திலும் முற்புறத்தில் ஒவ்வொரு கோபுரங்கள் எழுந்தன. இத்தகைய விதியை நன்கு கடைப்பிடித்த சிற்பிகள் உள்மண்டபத்திற்கு அணித்தாக அமைத்த கோபுரம் 'துவார சோபை' என அழைக்கப் பெற்றது. இதனையடுத்து இரண்டாம் பிரகாரத்தில் அமைந்துள்ள கோபுரம் 'துவாரசாலை' எனப்பெற்றது. மூன்றும் கோபுரம் 'துவாரபிரசாதம்' எனப் பெற்றது. நான்காம் பிரகாரத்தில் எழுந்த கோபுரம் 'துவார ஹர்மயம்' எனப்பெற்றது. ஐந்தாம் கோபுரம் 'மகா மர்யாதை' என அழைக்கப் பெற்றது. இந்த ஐந்தாம் கோபுரமே பண்டை நாளில் மகா கோபுரம் அல்லது இராச கோபுரம் என அழைக்கப் பெற்றது.

'இராச கோபுரம் தெய்வ வடிவம்' என்பதை உள்ளத்திலிருத்தியே இதனை அமைத்தல் வேண்டும். செருக்கற்ற சாந்த நிலையில் நின்று இராச கோபுரத் திருப்பணி புரிபவர் திருவருள் பெறுவர். இதனை அமைக்கும் சிற்பிகளும் தூயவர்களாகவும் நிரம்பிய கலையறிவு பெற்ற உத்தமர்களாகவும் இருத்தல் வேண்டும். பத்தி நெறி கைவந்த உத்தம சிற்பிகளாலும், பண்பு மிகுந்த தெய்வத் திருப்பணித் தொண்டர்களாலும் ஆக்கப் பெற்ற இராச கோபுரங்கள் பல்லூழிகாலம் நிலைநின்று தெய்வீக ஒளிவீசும். இராச கோபுரம் இறைவனுடைய திருவடி முதல்திருமுடி வரையுள்ள திருவுருவ அம்சங்களை அடக்கி நிற்கும் வண்ண வனப்பு அமைப்பு. அதனை வணங்கி வாழ்வதே நமது வேலை. திருவிம்பம் மட்டுமன்றித் திருக்கோவிலுந் தெய்வம்! திருத்தம்பமும் தெய்வம்! திருக்குப்பமும் தெய்வம்! திருக்கோபுரமும் தெய்வம்! திருவீதி பண்ணுந் தெய்வம்! திருக்குளமும் தெய்வம் இத்தகைய நிலை உள்ளத்தில் உருவாகி விட்டால் மனிதப் பிறப்பு மகத்துவம் உடையதாகும். நன்மை பெருக அருள் நெறியாகிய சைவம் என்றும் நிலை பெறவும், சைவ நீதி உலகெங்கும் பரவவும் தொண்டர்கள் புரியும் அருட்பணிகள் துணைபுரிவனவாக திருக்கோவிற் கோபுரங்கள் வானளாவ எழுந்து தெய்வீக ஒளி வீசட்டும்! "செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்யும் அடியார் கூட்டம் பெருகட்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுரதரிசனம் கோடிபுண்ணியம்

-- எம். சண்முகலிங்கம் --



உலகம் உய்ய இறைவன் எழுந்தருளியுள்ள ஆலயங்களுள் சிவாலயங்களே மிகவும் விசேடமானவை. நாயன்மார் காலத்தில் சைவ உலகில் ஆயிரத்தெட்டுச் சிவாலயங்கள் நிலைபெற்று இருந்ததாக வரலாறு கூறும்.

சிவபூமியாகிய இலங்கையிலே பாடல் பெற்ற திருக்கேச்சரம், திருக்கோணமலை ஆகிய சிவாலயங்கள் புகழுடன் விளங்குகின்றன. வட இலங்கையில் யாழ்ப்பாணமும் அதனைச் சார்ந்த சப்த தீவுகளும் சைவத்தின் உயர் நிலையங்கள் என்பதை உலகம் அறியும். தமிழகத்திற்கு மிகவும் அண்மையில் இருக்கிற காரணத்தால் சைவ சமயம் எழுச்சியும் வளர்ச்சியும்பெற்று ஓங்கி நிற்பது இந்த நாட்டில் எனலாம். சைவ சமயத்தைக் காப்பாற்றி வந்தவை சிவாலயங்களே.

திருக்கோயில் இல்லாத ஊர் "திருவில் ஊர்". அதாவது லட்சுமி கடாட்சம் இல்லாத வறிய ஊர் என்பது நாவுக்கரசர் பெருமான் கண்ட பேருண்மை.

சப்த தீவுகளிலும் புகழில் ஓங்கி நிற்பது சைவத்தின் உறைவிடமாகிய புங்குடு தீவு என்பதை நாடறியும். இந்த ஊரின் கண் வாழும் சிவப் பிராமணர்கள் சைவ சமயத்தையும் சமூகத்தையும் தங்கள் இரு கண் போலப் போற்றிப் பாதுகாத்து வருகிறார்கள். அவர்களுள் வீரம்மிக்க சைவ வேதியராகிய மார்க்கண்டேயர் இறைவன் அருள் கட்டளைக்கு இணங்க தமது வீட்டையே கோயிலாக மாற்றிய புதுமை வேறெங்கும் கண்டும் கேட்டும் அறியாதது.

காசி, கதிர்காமம் ஆகிய புனித க்ஷேத்திர யாத்திரை செய்த ஸ்ரீ மார்க்கண்டேய சிவாச்சாரியார் புங்குடுதீவு கிராஞ்சியம்பதியில் திருக்கோயில் அமைத்ததால் எமது ஊர் சிறப்புப் பெற்றது. அறுபத்து நாலு திருவிளையாடல் புரிந்து தமிழை வளர்த்த மதுரை சொக்கநாதப் பெருமானையும் ஸ்ரீ மீனாட்சியம்பாளையும் எமது ஊராகிய புங்குடுதீவு கிராஞ்சியம்பதியில் எழுந்தருளச் செய்தது எமது ஊர்ப் பிறந்தார் செய்த புண்ணியப் பேராகும்.

சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பெற்ற இப்புனித சிவாலயத்துக்கு சிவாச்சாரியப் பெருந்தகை ஸ்ரீ ஐ. கைலாயநாதக் குருக்கள் தலைமையில் 1977ம் ஆண்டு அதி உன்னதமான முறையில் வட ஈழத்தில் முன் கண்டுகேட்டு இராதவாறு சிறப்பாக மகாசாந்தி என்னும் கும்பாபிஷேக விழா ஸ்ரீ மா. மீனாக்ஷிசுந்தரக் குருக்கள், ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் மற்றும் பெரியோர்களது முயற்சியால் நடைபெற்றது நமது நாட்டுக்கு ஒரு புதுப் பொலிவைத் தந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து தற்போது பல லட்ச ரூபா செலவில் சிவபக்த சிரோமணியாகிய திரு. நா. சண்முகம் அவர்களுடைய முயற்சியாக கோயில் இராச கோபுரம் அமைவது திருவருளுக்கு கிட்டிய தேட்டம் எனலாம்.

ஆலயத்தினுள்ளே செல்லும் அடியார்கள் அதற்குரிய பக்திபூர்வமாகச் செல்லுதல் வேண்டும் என ஆகமங்கள் கூறும். ஆலயத்தின் வெளியே உள்ளவர்கள், பிரயாணம் செய்பவர்கள் அனைவருமே பார்த்து முதலில் வணங்குவது தூலலிங்கமாகிய ஆலய இராச கோபுரத்தைத்தான். கோபுரம் அனைவருக்கும் இறை உணர்வைத் தூண்டிவிடுமாறு அற்புதமான அமைப்பு. இதனாலேதான் பெரியோர் "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" எனக் கூறினார்கள். இந்த மாபெரும் கைங்கரியம் மிகக் குறுகிய காலத்தில் ஒரே வர்த்தகப் பிரமுகருடைய உபயமாக அமைந்தது இறைவன் பேரருள்தான்.

உலகும், அண்டசராசரம், சூரிய சந்திரர் முதலிய யாவும் தம்முள் அடக்கம் என்பதை கோபுரத்திலுள்ள உருவங்கள் மூலம் இறைவன் காட்டி அருளுகிறார். கர்ப்பக்கிரகத்தின் உள்ளே மூலலிங்கத்துக்குச் செய்யும் கும்பாபிஷேகத்திலும் பார்க்க கோபுரக் கும்பாபிஷேகத்தையே பார்க்கப் பலர் விரும்புவர்.

ஸ்ரீ மார்க்கண்டேயக் குருக்களுடைய வாரிசுக்களாக விளங்கும் சிவப் பிராமண சமூகத்தினர்களையும், கோபுரம் அமைத்த பெருமக்களையும், ஆலயத் திருப்பணிக்கு உதவியோரையும் ஸ்ரீ மீனாட்சி சோமசுந்தரேஸ்வரப் பெருமான் பெயரால் வாழ்த்தி வணங்குவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவர்கள் உள்ளத்தில் ஒரு சண்முகச் சோழன்

*

புலவர் ஈழத்துச் சிவானந்தன்



இறைநிறை நெஞ்சங்களே நெறிமுறை நாட்டடத்தன. நாட்டின் நன்மைகளும், இன்பங்களும் சிவபாத இருதயர்களாலேயே நடைபெறுகின்றன. சிவனே முழுமுதற் கடவுள். முன்னைப் பழம்பொருள். தோற்ற மில்லாத் தொன்மையன். பின்னைப் புதுமை விரும்பிகள் உவக்கும் உருவங்கள் காட்டு பவன். திருவினைகளை திருவிளையாட்டாகச் செய்பவன். மாறும் உலகத்திற்கு ஏற்றவாறு வெவ்வேறு வகைகளில் வருகைதந்து தண் ணளி செய்பவன் சிவபெருமானே.

அவனது ஐந்தொழில்கள் அவனுக்காக வன்று. நமக்காகவே எம்மை ஆண்டு கொண்டு இன்னருள் பொழியும் இயல்பின னய்; வாழ்க்கைத் துணையாய்; விளங்கி பின்னல் நின்று கவனித்துத் தக்கநேரத்தில் தகுந்தது செய்தருளுகின்முன். இதனு லேயே இவனை வாழ்முதலாகிய பொரு ளென்று திருவாசகம் புகட்டுகின்றது.

சிவவழிபாட்டுப் பழமை எழுத்தோ வியங்களால் மட்டுமின்றி - கல்லோவியங் களாலும், செப்பேடுகளாலும், மெய்க் கீர்த்திகளாலும், விதை பொருள் புதை பொருள் கண்டுபிடிப்புகளாலும் நிருபண மாகி நிற்கின்றன. அமெரிக்காவிலும், பிலிப் பைன்சிலும் வேறுபல நாடுகளிலும் அவ்வப் போது மனிதகுலக் கண்களுக்குக் காட்சி கொடுத்த சிவசின்னங்கள் வழிபாட்டுப் பழமையைப் பறைசாற்றியுள்ளன.

சிவபெருமானை இந்து நாகரிகத்தின் சொந்தக் கடவுள் என்று எண்ணியவர்கள், இந்த மண்ணின் உரிமைக் கடவுளே சிவனேதான் என்று ஒப்புக்கொண்டுள்ளார் கள். தமிழினத்தின் தனிக் கடவுளாகக் கருதப்பட்ட சிவன் மனித இனத்தின் மேன்மைத் தெய்வமாக - பாரொடு விண் ணுய்ப் பரந்த பரனுக இருந்தருள் செய்வது ஆய்வின் முடிவாகி அறிஞர் அறிவித்தலாகி யுள்ளது.

மூன்றுவித மேனிகளாய் நிற்கும் முதல் வன்; மூர்த்தி, தலம், தீர்த்தங்களால் அருள் வழங்குகின்முன். தோத்திரங்களும் சாத்தி ரங்களும் புராணங்களும் அவனுடைய அருமைபெருமைகளைப் பேசுகின்றன. மந்திர மும் தந்திரமும், மருந்துமாகி நிற்கும் கடவு ளுக்கு காலப்போக்கில் கற்கோயில்களும், திருக்கோயில்களும் அமைந்தன. ஒவ்வொரு காலப்பகுதியிலும் மக்களும் மன்னர்களும் ஆற்றிய திருப்பணிகளாலேயே "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்னும் கொள்கை படிந்தது. பல்லவர் கால பக்தி இயக்கங்களும், சோழர் கால கோயில் பணி களும் சைவசமய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளன. இத்திருப்பணிகளுக்கு இறை வனின் அகக்குறிப்பும் புறக்குறிப்பும் உத வின. சிவக் குறிப்பறிந்த சீலர்களின் ஊக் கமும் ஆக்கமுமே சைவசமய பணிகளாக வும் பக்தியாகவும் வளர்ந்து செழித்துள் ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் எதிர்ப்பும் கடவுள் மறுப்பும் சைவசமயத்தை வளரச்செய்த உணர்ச்சி களே. மாறுபடு கொள்கைகளின் வேறுபடு செயல்கள் வெற்றிதரவில்லை. ஊறுபட வாழ்ந்தவர்களும் உண்மைநிலை தெரிந்து திரும்பி வந்ததும் அல்லாமல் திருப்பணி களும் செய்தனர். நாத்திகம் பேசிய நாவும் சொக்கநாதா என்றே சொல்லியது. இது விலகா விதி, நீங்கா நியதி.

புங்குடுதீவு பெருங்காட்டில் அருள் வழங்கும் அப்பன் காசிலிங்கன். அருள் சுரக்கும் அம்மை தேவகோட்டை மீனாட்சி. இவ்விருவரருளால் வாழ்வின் இருள் அகன்று ஒளி மிகுந்து வளம் பல காணும் மக்கள் பலர். ஈர்த்து ஆட்கொள்ளும் சோமசுந்தரேஸ்வரர் ஆலயத்தின் தோற்ற மும் வளர்ச்சியும் கருத்திற்குரியவை. வளர் முக வண்ணத்தில் சிவன் கோவில் பக்தர்கள் கண்ணுயிருப்பது காரியசித்திக்கு உதவு கிறது.

நான்கு வருடங்களுக்கு முன்பு அடியார் கள் உதவியுடன் முப்பத்து மூன்று குண்டங் களோடு கூடிய மகாகும்பாபிஷேகம் நடை பெற்றது. நடேசர் பிரதிஷ்டை, நாராயணர் பிரதிஷ்டையோடு இயமசங்காரத் திரு விழாவும் சேர்ந்து இக்கோவிலின் அருள் நெறிச் சிறப்புக்கு அணி செய்கின்றன. இங்கு நடக்கும் இமயசங்காரத் திருவிழா எங்கும் நடக்காத புதுமையாய் ஏன் இந்தியாவிலேயே இல்லாத நல்விருந்தாய் நடைபெறுகின்றது. உரைச்சித்திர விளக் கங்களோடு வீதியில் நடைபெறும் இயம சங்காரக் காட்சியமைப்புக்கள் மார்க்கண் டேய வரலாற்றை பக்தர் உள்ளங்களில் விளக்கும் அற்புத நிகழ்வாகும்.

தென்னாடுடைய சிவன் என்னாட்டிற்கும் இறைவனாகி இந்நாட்டிற்கு எழுந்தருளி மக்கள் மனங்களில் மருவி மன்னி வாழ்விக் கின்றான். கோயிலைக் கும்பிடுவது போலவே கோபுரத்தை வணங்குவதும் சைவசாதனை யாம். கோபுர தரிசனம் கோடிபுண்ணியம் என்பார்கள். கோடி புண்ணியக் கைங்கரி யத்தையுங் காட்டிய கடவுளை எண்ணும் போது "காட்டாதனவெல்லாம் காட்டி" என்னும் திருவாசகம் நினைவுக்கு வரு கிறது.

கோபுரம் எழுப்ப எண்ணங்கொண்ட திருமிகு சண்முகநாதனின் செயல் சோழர் கால நிகழ்ச்சிகளுக்கு நெஞ்சைத் திருப்பு கின்றது. தென்னாட்டின் கோவில்களையும் கோபுரங்களையும் மனக்கண்ணில் காட்சிக்கு விரிக்கின்றது சிதம்பரத்தையும் தஞ்சை யையும், திருவாரூரையும் சிந்தனைக்கு வந்து போக வைக்கின்றது, இராசராசசோழனை யும், இராசேந்திரசோழனையும் ஞாபகப் படுத்துகின்றது.

ஆம்! நமது, நா. சண்முகம் அவர்களும் சோழனுக்குச் சொந்தக்காரனே. சோழனின் மறுபிறப்பே. ஓர் உத்தமசோழனே என்று ரைக்க வைக்கின்றது. உறைத்த பக்தியின் உணர்வலைகள் அவரைப் பல்லாண்டு வாழ்ந்து பணிபல செய்கவென வாழ்த்திப் போற்றுகின்றது.

கொள்முதலுக்குரிய பொருளால் திருப் பெருந்துறையில் கோவில் எடுப்பித்த தென் னவன் பிரமராயனே மாணிக்கவாசகரானார் அன்று. இன்று கொள்முதலுக்குரிய பொரு ளால் கோபுரம் எடுப்பித்த சண்முகனார் "உத்தமசோழன்" ஆவதில் மகிழ்ச்சிதான். நிறைவுதான்.

கிராஞ்சியம்பதிச் சுந்தரனும் மீனாட்சி யும் சீர்காழிப் படித்துறையில் சம்பந்தனுக்கு திருமுலைப்பால் ஊட்டியதோடு தமது 'ஊட்டும்' திருச்செயலை விட்டுவிடவில்லை. எங்கெங்கு எதனை ஊட்டவேண்டுமோ அதனை ஊட்டிக்கொண்டேயிருக்கிறார்கள், அது அறிவாக, ஆற்றலாக, பொருளாக. அருளாக, உணர்வாக, ஊக்கமாக, விழிப் பாக, செயலாக விளங்கிக் கொண்டிருக் கிறது. இராஜகோபுரத் திருப்பணி எண் ணம் சண்முகச் சோழனின் இதயத்தில் சிவனால் ஊட்டப்பட்ட ஓர் உணர்வே. முன்னோன் ஊட்டிய முயற்சி திருவினையாகி பெருநிலை எய்தியது. தன்னிடம் வந்து வழி படும் அடியார்கள் அல்லலறுத்து ஆனந்த மாக்கும் எல்லையில்லாப் பயன்பொருள் ஊரின் சிறப்புக்காய்; மக்கள் வாழ்வின் உயர்வுக்காய் ஊட்டி வளர்த்த அருள் நிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்கள் அடியார் திருப்பணிகளாய் நிலைக்கின்றன.

அன்னை மீனாட்சி கேதாரகௌரி நோன்புக் காலத்தில் எழில்வழியும் எடுப்புடனும் அருள்தரும் கோலத்துடனும் கண் சுவைக்கும் கவர்ச்சியுடனும் காட்சி தந்து வேண்டியதை வாரிக் கொடுக்கின்றாள். சென்ற ஆண்டு கௌரி நோன்பைத் தொடர்ந்து முதன்முதலாக ஏற்றி வழிபடப்பட்ட ஆயிரம்விளக்கு விழாவில் அடியேனின் அகத்தில் புகுந்த அன்னை கரும்பு மனம் குழைத்து இனிய கவிதை ஊற்றெடுக்க திருமுலைப்பால் சுரந்தளித்ததுபோல தமிழ் அமுதம் ஊட்டினாள். உடனே ஸ்நபன மண்டபத்தில் உட்கார்ந்து ஓடும் எழுதுகோலும் எடுப்பித்து எழுதினேன். எழுதியது அம்பாள் சந்நிதியில் பண் அமைத்துப் பாடப்பட்டது அம்பாள் அரும்பும் இள நகையுடன் அதனை ஏற்றுக்கொண்டாள். அடியார்களும் பக்திப்பரவசம் பொங்க அருள் வெள்ளத்துள் புகுந்து பணிந்து வணங்கினர். அந்தப் பாடல் அம்மையப்பனின் பலன்களை வேண்டிய விண்ணப்பமாகும். அஃது, இஃது.

"காயம் உன்சழற்கே காணிக்கை தந்தும்
கௌரியுமைக் கடைக்கண் கண்டுபோற்றி
மாயமே வாழ்க்கையென்ற மாயையே மறுத்தும்
மந்திரமாய் எந்திரத்தில் மருவி நிற்கும்
தாயான சுந்தரேசா! தரைதனிலே கைலாசம் கண்டநாதா
தண்ணளிசேர் பார்வையாலே கௌரி நோன்பில்
ஆயிரமாம் பலன்கள் அள்ளி மகிழவைப்பாய்
ஆயிரம் விளக்குடைய அதிபதியே!

சீராளமார்க்கண்டன் சிரசில் சுபையிருந்து சுந்தரேசர்
மடியிலே தலைவைத்த மங்கையுமையே
கிராஞ்சிப்பதி மன்னிக் கௌரிக் கோலமுடன்
மலர்கொண்ட கூந்தலை மனங்கொள்ள வைப்பவளே
நீராயுருகும் நெஞ்சகத்தில் நிறைபொருளே
நிர்மலச் சித்த சுகமே நீலாம்பிகையே
ஆயிரம் விளக்குகளாய் சுடர்கின்ற அருள்விழியாள்
அடியவரின் குறை களைய நோக்குவாயே!"

எல்லோரும் எல்லா நலன்களும் பெற்றுவாழ எருதேறும் எங்கள் பிரான் எங்களூரில் எண்ணரிய போதனைகளும் சாதனைகளும் நிகழ அருள்பாலிக்க வேண்டிப் பிரார்த்திப்போமாக.

*WITH BEST COMPLIMENTS*

*FROM*

★

# N. K. MYLVAGANAM & CO.


**IMPORTERS, EXPORTERS, GENERAL MERCHANTS**
**AND**
**COMMISSION AGENTS**

**நா. க. ம. அன் கோ.** **ඇන්. කේ. ඇම්. සහ සමාගම**

**68, 4TH CROSS STREET,**
**COLOMBO - 11.**


**T'phone : 22250** **T'grams : "VAAGANAMCO"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சந்தனத்தில் காப்பெடுத்து சந்ததமும் காப்பாற்றும்,
கௌரியுமை அன்னை மீனாட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினை நாகபூசணி 'அம்மையின் பரம்பரை சிவாச்சாரியார் பிரதிஷ்டா திலகம் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்கள்



மங்காப் புகழ் வளர் மாரியம்மன் தேவஸ்தான பிரதான குரு சிவன் கோவில் வைப்பிடைத்த சிவாச்சாரியார் சிவஸ்ரீ இ. கெங்காதரக் குருக்கள் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு பிரபல வர்த்தகரும், சைவத் தமிழ் அன்பரும்,
ஜெயந்தி நகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
தர்மகர்த்தாவும், தர்மசீலரும் ஆகிய

# திரு. வி. ரி. வி.
# தெய்வநாயகம்பிள்ளை அவர்கள்

## வழங்கிய நல்லாசியுரை

கொழும்பு ரத்கம ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. நா. சண்முகம் அவர்கள் தெய்வீகப் பணிபுரியும் நற்தொண்டர். தாம் ஈட்டிய பொருளைக் கொண்டே பன்னெடுங்காலமாக ஏழைகள் துயர் தீர்த்து வருவதை நன்கு அறிவோம்.

''பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானில் நனி சிறந்தனவே'' என்னும் உண்மைக்கு உதாரணமாகப் போலும் தாம் பிறந்த தாயகமான புங்குடுதீவு மேற்கில் ஸ்ரீ கிராஞ்சியம்பதி ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தானத்துக்கு பாரிய இராஜ கோபுரம் ஒன்றை அமைத்து உதவியுள்ளார். திரு. சண்முகம் அவர்கள் தனித்து நின்று பல இலட்சம் ரூபாய்களைக்கொண்டு பணி செய்துள்ளமை யாவராலும் பாராட்டப்படத் தக்கதாகும்.

தவமும் தவமுடையார்க்கு ஆகும் அன்றோ! முன்னைத் தவமும் பெற்ற செல்வப் பெருந்தகை அமைத்த இந்த இராஜ கோபுரத்துக்கு குடமுழுக்கு விழாவையும் நல்ல முறையில் அமைத்துள்ளார். புங்குடுதீவு மக்கள் மாத்திரம் அன்றி சைவத் தமிழ் அன்பர்களனைவரையும் அழைத்து சிறப்பு நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்துள்ளார். தமிழ்நாட்டு இசை அரசு சீர்காழி கோவிந்தராஜனின் இன்னிசை வெள்ளமும் பெருக்கெடுத்தோடும் பொழுது யாவருக்கும் இறையருள் கிட்டும் என்பதில் சந்தேகமில்லை.

இராஜ கோபுரப் பணியைப் பாராட்டுமுகமாக தமிழ் மலர் ஒன்றையும் மலர்க் குழுவினர் வெளியிட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியதே! இத்தமிழ் நறுமலரில் எமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்வதில் நாமும் நிறைவு பெறுகின்றோம். ஊழியுள்ள அளவும் இந்த இராஜ கோபுரம் வானுயர்ந்து நின்று திருவருள் வெள்ளத்தை மக்களுக்கு வழங்குவது போன்றே தீந்தமிழ் நறுமலரும் மணம் பெருக்கி யாவரது உள்ளங்களிலும் நிறைவு தர வேண்டும் என விழைகின்றோம்.

இத்தகைய சிறந்த ஆத்மீகப் பணிபுரிந்துள்ள திரு. நா. சண்முகம் அவர்களும் அவரது குடும்பத்தினரும், அயலவர் அனைவருமே நீடிய வாழ்வுபெற்றுச் சிறந்தோங்க வேண்டும் என எல்லாம் வல்ல எம்பெருமானின் திருவடி நிழலை வழுத்தி வேண்டுகின்றேன்.

வி. ரி. வி. தெய்வநாயகம்பிள்ளை

37, ஐந்தாம் குறுக்குத் தெரு,
கொழும்பு – 11.
4-3-81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments of

# Kala Trading Centre

General Merchants & Commission Agents For Local Produces

කලා ට්‍රේඩිං සෙන්ටර් கலா டிரேடிங் சென்டர்

111, 4th Cross Street,

COLOMBO-11.

T'phone: 22584 දුරකථනය : 22584

---

සියලුම දේශීය ගොවි කාර්මික ද්‍රව්‍ය වෙළෙන්දෝ

சகல உள்ளூர் விளை பொருள் விற்பனையாளர்கள்

# S. P. S. AGENCY

எஸ். பி. எஸ். ஏஜன்ஸி ඇස්. පී. ඇස්. ඒජන්සි

113, Fourth Cross Street,

COLOMBO-11.

T'phone: 26204

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர்

# பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களின் வாழ்த்து

யாழ்ப்பாணத்தில் புங்குடுதீவு கிராஞ்சியம் பதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ சோமசுந்தரேசுவர சுவாமியின் திருவருட் பெருக்கால் பெருமானின் பரிபூரணமான அநுக்கிரகத்துக்குப் பாத்திரமான சிவகைங்கரிய துரந்தரர் உயர்திரு நாகலிங்கம் சண்முகம் அவர்களுக்கு இராஜ கோபுரம் அமைக்கும் அரியபேறு கிட்டியுள்ளதில் வியப்பெதுவுமில்லை. தளராத உற்சாகத்துடன் இவ்வரும் பணியில் ஈடுபட்ட சண்முகம் அவர்களின் தனிமுயற்சியால் திருக் கோபுரக் கட்டடவேலை இலட்சக் கணக்கான பொருட்செலவில் செவ்விதாக நிறைவேறி கும்பாபிஷேகம் நிகழ இருக்கும் பொன்னாளில் இராஜ கோபுர கும்பாபிஷேக சிறப்பு மலர் ஒன்று மலர இருக்கின்றது என்பதை அறியும்பொழுது மகிழ்ச்சி மட்டில்லாது பெருகுகின்றது.

"இம் மலர், மலருக்குரிய குளிர்ச்சி, நறுமணம், அழகு ஆகிய பண்புகள் வாய்ந்த தாய் இறைவன் திருவடிகளில் சமர்ப்பிப்பதற்குரிய புனிதச் சிறப்புமிக்கதாய் மிளிர வேண்டும்" எனப் பெருமானின் திருவருளைத் துணைக்கொண்டு வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

கா. கைலாசநாத குருக்கள்.

9 3 1981

---

உ

புங்குடுதீவு "அம்பலவாணர் அரங்கு" கலைப் பெருமன்றத் தலைவர்

# சங்கீதபூஷணம் க. தாமோதரம்பிள்ளை அவர்கள் வழங்கிய வாழ்த்து

பொருள் வளமும் அருள் வளமும் பொலிந்த பூமி புங்குடுதீவு. ஆங்கு மார்க்கண்டேய ஐயரும் அவரது பிரிய பத்தினியாரும் அரும்பாடுபட்டு அமைத்த அழகு மிகு ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம் அதன் நடு நாயகமாக விளங்குகின்றது. இன்று அதன் இராஜ கோபுரம் கம்பீரமாக வானளாவ உயர்ந்து நிற்கிறது. அறவழி நின்று தேடிய பொருளை இத்தர்ம கைங்கரியத்தில் செலவிட்டு இறையருள் வேண்டி நிற்கும் திரு. நாகலிங்கம் சண்முகம் அவர்களது இறைபணி என்றும் எல்லோராலும் போற்றற்பாலது.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"

இராஜ கோபுர குடமுழுக்கும் அதனையொட்டிய சீர்காழி கோவிந்தராஜன் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் சிறப்புடன் நிகழ நம் நாட்டு நற்றொண்டர்கள் அம்பலவாணர் சகோதரர்கள் பெயரால் நிறுவிய "அம்பலவாணர் அரங்கில்" அமைந்துள்ள புங்குடுதீவு கலைப் பெருமன்றம் தனது இதயபூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

வாழ்க இறைபணி!
வளர்க கலைத் தொண்டு!
ஓங்குக திரு. சண்முகனார் திருத்தொண்டு!
அன்பே சிவம்.

க. தாமோதரம்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

Phone: 27451

*With Best Compliments from:*

# WOODLANDS COMPANY

**Importers, Exporters & Commission Agents**

**Dealers in all kinds of Local Produce**

**வூட்லன்ட்ஸ் கொம்பனி**

**No. 192, 4th Cross Street,**

**COLOMBO-11.**

T'phone: 27451

# Woodlands Hotel

**STRICTLY PREPARED VEGETARIAN DIETS & SWEETS**

192, 4th Cross Street,

**COLOMBO-11.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# தமிழொடு பிறந்து பழ மதுரை வளர் மீனாட்சி

★ ★

திருப்பூங்குடி
வி. கே. ஆறுமுகம் அவர்கள்

### அருள் நிறைந்த திருத்தலம்

மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடிய குமரகுருபர சுவாமிகள் சப்பாணிப் பருவத்தில் பெரும்பாடலிலே அம்மை மீனாட்சியை, "தமிழொடு பிறந்து பழ மதுரையில் வளர்ந்த கொடி" என்று தீந்தமிழோடு தேவியையும் சேர்த்துத் தெய்வத் தமிழாக்கினார். அந்தப் பாவடியைத் தலையங்கமாக வைத்து தமிழுக்கும் மதுரை மீனாட்சி அம்மையாருக்கும் உள்ள இசைவு எத்தன்மைத்து என்று உணரலாம்.

நான்மாடக் கூடல், கடம்பவனம், திருஆலவாய் பூலோக கயிலாயம், சிவராசதானி, துவாத சாந்தத்தலம், சிவநகரம், சமட்டி வித்தியாபுரம் எனப் பல நாமங்களைக் கொண்ட இந்தத் திருத்தலம் எல்லா உலகங்களிலும் மிகமிகச் சிறந்ததான காசி, திருக்காளத்தி, சிதம்பரம், திருஆலவாய் ஆகிய நான்கினுள்ளும் திருவாலவாயே சிறந்தது என்று வேதங்கள் கூறும். இந்த மதுரை என்னும் திருவாலவாய் தலத்தின் பெயரை ஒருமுறை கேட்ட மாத்திரத்திலேயே போகத்தையும் மோட்சத்தையும் கொடுக்கும். ஆகையால் இத்திருவாலவாகிய மதுரைக்கு ஒப்பாகிய தலமும் சுவர்ண கஞ்சம் என்னும் பொற்றாமரைத் தீர்த்தத்துக்கு ஒப்பான தீர்த்தமும், சோமசுந்தர மூர்த்திக்கு ஒப்பான சிவலிங்கமூர்த்தியும் மூவுலகங்களிலும் இல்லையென்று அறுதியிட்டுக் கூறுவர் ஞானிகள்.

இந்தப் பழம் பெருமையை சங்க நூல்களில் ஒன்றாகிய பரிபாடல் மிக அருமையாக,

"உலகம் ஒரு நிறையாத் தான் ஓர் நிறையாய்
புலவர் புலக்கோலால் தூக்க - உலகு அனைத்தும்
தான் வாட வாடாத தன்மைத்தே -தென்னவன்
நான்மாடக் கூடல் நகர் - என்றும்"
(பரிபாடல்)

"ஈவாரைக் கொண்டாடி, ஏற்பாரைப் பார்த்துவக்கும்
சேய்மாடக் கூடலும், செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வார் எனப்படுவார் மற்றையார்
போவார் ஆர் புத்தேழுலகு"
என்றும் (பரிபாடல்) கூறும்.

உயிர்களிடத்திலுள்ள பெருங்கருணையாலே அறுபத்துநான்கு திருவிளையாடலைச் செய்தருளிய மதுரைச் சோமசுந்தர மூர்த்திக்கும் அன்னை மீனாட்சி அம்மைக்கும் ஒப்பும் உயர்வும் மூவுலகத்திலும் இல்லை எனலாம். மலைகளுக்குள்ளே மகாமேருவும், தானங்களுக்குள்ளே அன்னதானமும், மந்திரங்களுக்குள்ளே பஞ்சாட்சரமும், தருமங்களுக்குள்ளே சிவதருமமும், தீர்த்தங்களுக்குள்ளே பொற்றாமரைத் தீர்த்தமும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்க மூர்த்திகளுக்குள்ளே சோமசுந்தர மூர்த்தியும் முதன்மையானதும், மேலானதும், தொன்மையானதும் ஆகும்.

இத்தனை சிறப்புக்களைக் கொண்ட மதுரைத் திருத்தலம், தரிசித்தவர்க்கு முத்தியும் சித்தியும், பாவ நிவிர்த்தியும் செய்யும் பெருமையை அறிந்த நம்மூதாதையர்கள் காலந்தோறும் யாத்திரைசெய்து வணங்கிப் பெரும்பேறு பெற்றனர்கள்.

### சிவஸ்ரீ மார்க்கண்டையர் சிவதொண்டு

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் என்ற இன்ப உணர்விலே காலிச் சிவன் கோயில் அர்ச்சகராயிருந்து கதிர்காமக் கந்தன் திருவடி நீழலில் சமாதியெய்திய புங்குடுதீவின் அந்தணாளர், மகாஸ்ரீ மார்க்கண்டையர் காசியிலிருந்து கொண்டு வந்த பாணலிங்கத்தைச் (கங்கையிலேயே உண்டாகியது.) சோமசுந்தர மூர்த்தியாகவும், தென்னாட்டிலிருந்து தெய்வச் சிற்பிகளின் கைவண்ணத் திறல் உயிரோவியமாகக் கொண்டுவந்த மீனாட்சியம்மையாரையும் புங்குடுதீவு பெருங்காடு (மகாவனம் என்று கூறலாம்) கிராஞ்சியம்பதியில் அன்பர்கள், நண்பர்கள், சிவனடியார்கள் ஆதரவுடன் பிரதிஷ்டை செய்து வைத்தார்கள். கடம்பவனச் சொக்கர், அபிடேகச் சொக்கர், கர்பூரச் சொக்கர், சங்கத் தமிழ்ச் சொக்கர் என்று "மதுரைக் கலம்பகம்" பாடலில் குமரகுருபரர் கிள்ளை விடுதூதுப் பாடலில் கூறுவது மகாவனச் சுந்தரர் ஆகிவிட்டார் கடம்பவனச் சொக்கர், மகாவனச் (பெருங்காடு) சொக்கர் ஆகிவிட்டார் அதுவும் பொருத்த மானதேயாகும்.

அந்தத் திருத்தலமே இன்று வானளாவிய கோபுரத்துடனும் அழகிய சித்திரப்பதுமைகளோடு கூடிய பக்தர்களைக் கவரும் கருணை பொழியும் பரிவார மூர்த்திகளின் விமானங்களோடும், மூலஸ்தான விமானத்தோடும், தேர் வீதிகளோடும், பல்லோரும் பார்த்துப் பரவசமுறும்படி திகழ்கின்றது.

இத்தலத்திற்கு தொடர்ந்து பணி செய்த அந்தணாளர் அருமை மனைவியார் அம்மா அவர்களையும், அன்பு மகன் சிவஸ்ரீ மீனாட்சிசுந்தரக் குருக்கள் குடும்பத்தாரையும், சிவபக்தர் நாகலிங்கச் சாமியார் அவர்கள், மற்றும் கிராஞ்சியம்பதி வாழ் அன்பர்கள் திருப்பூங்குடி மக்கள் அனைவரையும் போற்றவேண்டும்.

### கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

மேலே குறிப்பிட்ட முதுமொழிக் கிணங்க, தருமங்களுக்குள்ளே மிக மிகச் சிறந்ததாகிய சிவதர்மத்தைச் செய்ய அன்பன், சிவதர்ம சீலன் நா. சண்முகம் அவர்கள் முன்வந்து அயராது உழைத்து முழுச்செலவையும் தானே ஏற்று மிக மிக அழகாகவும் அமைப்பாகவும், கட்டுவித்து பூர்த்தி செய்து குடமுழுக்கு விழாச் செய்யும் பெருமையைச் சைவத் தமிழுலகம் முழுதுமே போற்றவேண்டும்.

அவர் செய்த இந்தப் பெரிய திருப்பணி புங்குடுதீவு (திருப்பூங்குடி) மக்களையும், புங்குடுதீவையுமே இமாலய சிகரத்தில் தூக்கி வைத்து விட்டது. என்றால் மிகையாகாது, எனவே திருப்பூங்குடி மக்கள் அவர் செய்த மாபெரும் திருப்பணிக்கு என்றும் கடப்பாடுடையவர்களாவர்.

"அருள் என்னும் அன்பு ஈன் குழவி பொருளென்னும் செல்வச் செவிலியால் உண்டு"
குறள் (757)

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய எழுகின்ற பிறவிதோறும் அன்பும் அருளும் பொருளும் பெருகச் சகல யோகமிக்க பெருவாழ்வு வாழ்வாராக.

### கோயில் விழாக்களும் விரதங்களும்

முறையாக நடந்துவரும் விழாக்களில் கேதார கௌரி விரத விழா மிகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த பக்தி விழாவாக நடைபெறுவதை என்கண்ணுரக் கண்டு அநுபவித்திருக்கிறேன். ஒரு நாள் விழாவிலன்று அம்பிகை சகல கலைகளும் நிரம்பச் சர்வாலங்காரபூஜிதயாய் நின்ற காட்சியைக் கண்டு, தேவாரம் பாடிய பின் அந்தாதி பாடிய நிலையில் உரையுணர்வு அற்ற நிலை எனக்கு ஏற்பட்டது உண்டு. அன்று தொடக்கம் நான் மறக்கினும் எந்நா மறக்காது. எங்கு சென்ருலும் சிவனடியார்களுடன் பேசி மகிழும் அந்த விழாவில் சிறப்பாக இலட்சார்ச்சனையும், வேத திருமுறை பாராயணங்களும், சமயச் பொழிவுகளும் 21 நாட்களும் நடைபெறும் அது அம்பிகைக்கு அருள் சூற்கொள்ளும் விழாவாகவே நடைபெறும் இந்த விழா ஒரு சமய விழிப்புணர்ச்சியை உண்டாக்கியது என்றே சொல்லலாம்.

**தமிழும் மீனுட்சியம்மையும்**

"தமிழொடு பிறந்து பழமதுரையில்
வளர்ந்த கொடி"

"தென்னற்கும் அம்பொன் மலை
மன்னற்கும் ஒரு செல்வி"

"தெளி தமிழ் மதுரையில் வளரு மொரிள
மயில்"

"சங்கம் வளர்ந்திட நின்ற பொலன்
கொடி"

"தெய்வத்தமிழ்க் கூடல் தழையத்
தழைத்தவள்"

"முதுதமிழ் உத்தியில் வருமொரு
திருமகள்"

"மதுரம் ஒழுகிய தமிழின் இயல்பயில்
மதுரை மரகதவல்லி"

"முத்தமிழ் தேர்தரு மதுரைத்தவத்துறை
முத்தனமேவு பெண்ணரசி"

என்று விழித்து அடிதொறும் தெள்ளுதமிழ்த் தேனெழுகப் பிள்ளைத் தமிழ் பாடும், பிள்ளைப்பெருமான் அருள்பெற்ற குமரகுருபர சுவாமிகள் மதுரை திருமலை நாயக்க மன்னன் முன்னிலையில், அரங்கேற்றம் செய்தபோது வருகைப் பருவத்தில் ஒன்பதாவது செய்யுளாகிய "தொடுக்கும் கடவுட் பழம் பாடல்" என்ற பாடலிலே

பழம்பாடற் தொடையின் பயனே!
தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே!
தொழும்பர் உளக் கோயிற் கேற்றும்
விளக்கே!
இளமென்பிடியே!
உயிரோவியமே!

என்றெல்லாம் உள்ளம் உருக விழித்துப் பாடிய பாடல் அம்பிகை மீனுட்சியின் உள்ளத்தை உருக்கிவிட்டது. மதுரையில் 64 திருவிளையாடல்களைச் செய்த ஆடலரசினின் அரசியாகிய 64 கலைகட்கும் அரசி அங்கயற் கண்ணி ஒரு திருவிளையாடல் செய்தார். தமிழுக்கு உருகியவர் மானிட உருவெடுத்தார். அர்ச்சகரின் பெண் போல அரசன்முன் நடந்து வந்தார். அரசன் கழுத்தில் அணிந்திருந்த விலைமதிப்புள்ள மணிமாலையைக் கழற்றி குமரகுருபரர் கழுத்திலிட்டு மறைந்தருளினுர். கண்டவர்கள் மெய் மறந்தனர், கரங்கள் குவிந்தன, கண்ணீர் பொழிந்தனர், உருகி உருகி அழும் கண்ணீரால் நனைந்தனர்.

நாமும் கோபுர தரிசனம் கண்டு அம்பிகை மீனுட்சியின் அருள் மழையில் நனைவோமாக. கோபுரப் பணியோடு சீர்காழி தந்த செல்வர் தமிழிசைச் சக்கரவர்த்தி எஸ். கோவிந்தராஜன் அவர்களைப் பாடவைத்து அம்பிகையோடு நம்மையும் இசைய வைக்கிறுர் சண்முகனுர்.

எனவே கோபுரக் கும்பாபிஷேக விழாவைப் பெருவிழாவாக, இசைவிழாவாக நடாத்தும் சிவதர்மசீலன் நா. சண்முகம் அவர்களும், சகோதரர்களும், குடும்பத்தாரும், நண்பர்களும் அன்பர்களும் கோடி கோடி இன்பம் பெற்று என்றும் பல்லாண்டு வாழ்வாராக.

அம்பிகை மீனுட்சி திருவருள் பெருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முகனாரின் சைவப்பணி

*

க. சௌந்தரராஜா, புங்குடுதீவு-3

சைவம் தமிழை வளர்த்ததா அல்லது தமிழாலே சைவம் உயர்ந்ததா என வகுத்துக்கூற முடியாதவாறு எங்கள் மதத்தினதும் மொழியினதும் வரலாறு பின்னிப் பிணைந்திருப்பதை யாமறிவோம். இலக்கியத்தில் மட்டுமல்ல, கலைத்துறையிலும் எமது சமயம் பாரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி எங்கள் இன்பத்த மிழுக்கு எழிலூட்டிய தென்பதற்கு நமது ஆலயங்களில் அமைந்திருக்கும் கோபுரங்கள் நல்ல சான்று.

"கோவிலில்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்பது எமது பைந்தமிழ்ப் பொன்மொழி. மனித வாழ்வில் அத்துணை முக்கியத்துவம் வாய்க்கப் பெற்று முன்னணியில் அச்சாணியென விளங்கும் ஆலயத்தின் அருட்சிறப்புக்குக் கோபுரம் எத்துணை அத்தியவசியமானதென்பதை விபரிக்க வேண்டியதில்லை.

நமது மதவழிபாட்டு முறையிலே குறிப்பிடத்தக்கதொரு முக்கிய அம்சமாகத் திகழுவது கோபுர தரிசனம். இவ்வாறான மகத்துவம் மிக்க கோபுரத்தின் சிறப்பியல் புகளை உணர்ந்து திருப்பூங்குடி மேற்கு ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி ஆலயத்திற்கு இராச கோபுரமொன்றை நிருமாணித்த எங்கள் பேரன்புக்கும் பெருமதிப்புக்குரிய உயர் திரு. நா. சண்முகம் அவர்கள் தமது அரிய சேவை மூலம் ஆலய வரலாற்றில் அழியாத ஓர் அத்தியாயத்தின் கதாநாயகனாக திகழுகிறார்.

எங்கள் பகுதிக் கற்பகதரு எனப் போற்றப்படும் பனைகள் நிறைந்த சோலையின் மத்தியிலே பத்தியோடு தொழும் அடியார் வினை தீர்த்தருளி இறைவனார் சுந்தரேஸ்வரர் கோவில் கொண்டுள்ளார். இச்சிவனாலயம் சிவாலயச் சீலர்களினாலே நிருவகிக்கப்படுவதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த அருள்நிறை ஆலயத்திற்குப் புராதன வரலாறும் புனித வழிபாடும் உண்டு. ஊரின் ஊறுகளைந்து இடர் தீர்த்தும் காவல் தெய்வமாகக் கருணைக் கடலாக அமைந்த இறைவனுக்கு எங்கள் சிவனுக்கு விசேட பூசைகள், விழாக்கள் அனைத்தும் முறைப்படி நிகழ்வ துண்டு என்றாலும் இக் கோவிலுக்குக் கோபுரமில்லாத பெரியதொரு குறைபாடு மிக நீண்ட காலமாக எமது ஊர்ப் பொதுமக்களால் உணரப் பட்டு வந்தது. ஆயினும் இதனை நிவிர்த்தி செய்யவல்ல மனமும் பணமும் எங்கள் வள்ளல் சண்முகம் அவர்களிடமே வாய்க்கப் பெற்றிருந்தது பெரிய நிதிச்செலவில் இந்த அரிய பணியை ஆற்றிய அன்னாருக்கு. நாம் நன்றி தெரிவிக்காவிடில் எமது கடமையிலிருந்து தவறியவர்களாவோம். பொருளை ஈந்து அருளை நாடும் அப்பெருமகனார் நீண்ட ஆயுளுடனும் நிறைந்த செல்வத்துடனும் நீடூழி வாழ நிமலனை நெஞ்சார வேண்டுகிறோம். ஆண்டவனுக்கு இராச கோபுரம் அமைத்த அண்ணலின் தன்னலமற்ற சேவை ஒவ்வொரு சைவ அபிமானியின் இதயத்திலும் நிலைத்து நிற்கும்- நிறைந்திருக்கும் என்பது உறுதி.

திருவாளர் சண்முகம் அவர்கள் புகழை எதிர்பாராது அத்துடன் விளம்பரத்தை விரும்பாது சேவையுள்ளங்கொண்ட ஒரு தொண்டராக நம்மிடையில் வாழ்வது நம்முடைய கிராமத்தின் பெரும் பேறு என்றே பெருமையுடன் கருத வேண்டும்.

சிறந்த கலைத்திறனுடனும் இறவாத சிற்ப நுணுக்கத்துடனும் நிறுவப்பட்டு வானளாவ உயர்ந்து நிற்கும் இந்த இராச கோபுரம், தனது தாபகர் அவர்களின் தாராளத் தன்மையினைத் தரணிக்கு எடுத்துக் காட்டுமென்பதில் ஐயமில்லை.

கண்கவர் கலையழகும் மனங்கவர் மகிமையும் ஒருங்கே அமையப்பெற்ற இராச கோபுரத்தின் குடமுழுக்கு எங்கள் ஊரைப் பொறுத்தமட்டில் மங்களகரமான-மகிழ்ச்சிகரமான ஓர் இறைவிழா; திருவிழா இந்தப் பெருவிழா இனிதே நிறைவுற இவ் வைபவத்தின் வாயிலாகப் பொதுமக்கள் அனைவர்க்கும் இறையருள் வாய்க்கப்பெற்று நலங் கொழிக்கட்டும்; வாழ்வு செழிக்கட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வப் பணி

✶

நாட்டின் சிறப்பை, மக்களின் உள் ஒளியை வெளிப்படுத்துவது ஆலயங்கள். மனிதனின் உடம்பைக் கருப் பொருளாக வைத்து ஆலயங்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஆலயத்தின் மூலஸ்தானம் சிரமாகவும், இராஜ கோபுரம் திருவடியாகவும் சிற்ப தத்துவம் பொருள் கொள்கிறது. கோபுரத்தை ஸ்தூலலிங்கம் என்று அழைப்பர். வழிபடச் செல்லும் அடியவர் முதலில் கோபுரத்தைக் கண்டதும் இறைவனை அதிலே நினைவு கொள்கின்றார். ஆகவே, வழிபாடுகளில் கோபுர வழிபாடும் முக்கியமானதாக அமைகின்றது. மாயையில் மூழ்கி உழலும் ஆன்மாக்கள் ஆலய மணியொலி, கோபுரக்காட்சி என்பவற்றால் இறைவனின் நினைவை மீளப் பெற்றுக் கொள்கின்றன. இதனால்தான் "கோயில் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம்" என்று ஒளவை வலியுறுத்தி வைத்தார்.

உண்மையான சமதர்மவாதிதான், பூரணத்துவமான ஆத்மீகவாதியாக வாழ முடியும். இவ்விரு தத்துவங்களிலும் முதிர்ச்சியடைந்தவன்தான் "உன்னைப்போல் உன் பிறத்தியானையும் நேசி" என்ற இறை வார்த்தையை வாழ்க்கை நெறியாகக் கொண்டு மக்களுக்கு வழிகாட்ட முடியும். இத்தகைய நெறியில் வாழும் சமதர்ம வள்ளல் திரு. வி. என். சண்முகம் அவர்கள் மக்களின் ஆன்மீக ஈடேற்றத்திற்குத் தூண்டுகோலாக, ஸ்ரீ கிராஞ்சியம்பதி சோமசுந்தரேஸ்வர சுவாமிகள் தேவஸ்தான இராஜ கோபுரத் திருப்பணியைத் தமது தனிப் பணியாக அமைத்துதவியமையைப் பாராட்டுகின்றோம்.

"ஊருணி நீர் நிறைந் தற்றே யுலகவாம் பேரறிவாளன் திரு" என்ற வள்ளுவன் வாக்குக்கு, இவ்வடியாரதும் அவர்தம் இலலத்தரசியாரினதும் தெய்வப் பணியாலும் கல்விச்சாலைகளும், கலைக்கூடங்களும் அமைக்கும் சமதர்மப் பணியாலும் நிறைவு பெற வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்,

சகோதர அன்புக்குரிய
சு. யோ. பூராசா,
நிர்வாகச் செயலாளர்,
புங்குடுதீவு,
அருள்மிகு புனித அந்தோனியார் ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

# THE BOMBAY STORES

**GENERAL MERCHANTS, WHOLESALE & RETAIL**

**142, Maliban Street,**

**COLOMBO-11.**

**Telephone: 27718**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். திவ்விய ஜீவன சங்கத் தலைவரின் ஆசியுரை

இறைவழிபாட்டுக்கு இடமாகக் கோவில்களை அமைத்த முன்னோர், அவற்றை நிர்மாணிப்பதில், அவற்றுக்கு அழகுத் தோற்றம் அளிப்பதில், அவற்றைப் பழுதுபடாமல் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள். பொன்னையும், பொருளையும், சரீர உழைப்பையும், தருவதில் இன்பங் கண்டார்கள். இதில் நமக்கெல்லாம் வழிகாட்டியவர்கள் நம் முன்னோர்கள் ஆவர்.

நம் முன்னோர்கள் வழியில், பண்டைப் பெருமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றான புங்குடுதீவு பெருங்காடு சிவன் கோவிலின் ராஜ கோபுரத்தைத் தனது சொந்தச் செலவில் கட்டிய கொழும்பு பிரபல வர்த்தகர் திரு. நாகலிங்கம் சண்முகம் அவர்களின் சிவத் தொண்டை நான் பாராட்டுகின்றேன். திரு. சண்முகம் அவர்களின் இவ் அளப்பரிய சிவத்தொண்டு ஒப்பற்றது. திரு. சண்முகம் போன்ற வள்ளல்கள் எம் நாட்டில் இன்னும் தோன்ற வேண்டும்.

புங்குடுதீவு பெருங்காடு சிவன் கோவிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ராஜ கோபுர கும்பாபிஷேகச் சிறப்பு நிகழ்ச்சியில் இசை மழை பொழிய வந்துள்ள தென் இந்தியப் பிரபல பாடகர் சீர்காழி எஸ். கோவிந்தராஜனின் இசை நிகழ்ச்சி சிறப்பாக அமைய வேண்டும் என எல்லாம் வல்ல புங்குடுதீவு பெருங்காடு சிவனை வேண்டி எனது ஆசிகளைத் தெரிவிக்கின்றேன்.

திரு. நாகலிங்கம் சண்முகம் இந்நாட்டில் பல்லாண்டு காலம் நோய்நொடியின்றி வாழ்ந்து, இதைப்போல் இன்னும் பல அளப்பரிய தொண்டுகளைச் செய்ய அவருக்கு இலக்குமி தேவியின் கடாட்சம் மேலும் மேலும் கிட்ட வேண்டும் என இறைவனை வேண்டுகின்றேன்.

சி. கனகரத்தினம், ஜே.பி.யூ.எம்.
அரச சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ்
மரண விசாரணை அதிகாரி.
தலைவர், திவ்விய ஜீவன சங்கம், யாழ்ப்பாணம்
தகுதிவாய்ந்த அதிகாரி,
வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை.

"சிவஸ்தான்"
நல்லூர், யாழ்ப்பாணம்.
18-2-81

---

# அகில இலங்கை இளங் கலைஞர் மன்றத்தின் வாழ்த்து

மனித ஈடேற்றத்திற்கு மிக முக்கியமானது சிவத்தொண்டாகும். அத்தொண்டில் மிகச் சிறந்தது ஆலய கோபுரம் அமைத்தலாகும். புங்குடுதீவு சிவன்கோயில் இராஜ கோபுரம் அமைத்து கும்பாபிஷேகம் நடாத்தும் சிவதொண்டர் திரு. நாகலிங்கம் சண்முகம் அவர்கள் சைவ மக்கள் எல்லோரினதும் பாராட்டுக்குரியவரே. இவ்விழாவின் சிறப்புக் கலை நிகழ்ச்சியான சீர்காழி எஸ். கோவிந்தராஜன் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் விழாவின் இதர நிகழ்ச்சிகளும் சிறப்புற அமைய அகில இலங்கை இளங் கலைஞர் மன்றம் தனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

பொன். சுந்தரலிங்கம், தலைவர்.
மு. இராமலிங்கம், செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

★

# SARAVANAS TRADING COMPANY.

General Merchants & Commission Agents
For Local Produces

சரவணாஸ் டிறேடிங் கொம்பனி

සරවනාස් ට්‍රේඩිං කොම්පැණි

61, 4th Cross Street,

**COLOMBO - 11.**

T'phone: 27437 T'grams: "THILLAI"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு பிரபல வர்த்தகர்

## திரு. இ. சண்முகம் அவர்கள்

## வழங்கிய வாழ்த்துரை

✶

ஈழவள நாட்டில் எத்திசையிலும் சைவ எழில் மணக்கும் கோவில்கள் எழுந்துள்ளன சில திருக்கோயில்களின் முன் இராஜ கோபுரங்கள் வானளாவி நிற்கின்றன. தமிழகத்தில் முடி மன்னர்கள் இராஜ கோபுரங் கட்டிய கதை பழங்கதை. நம் இலங்கைவள நாட்டில் பொது மக்கள் இராஜ கோபுரங்களை எழுப்புகின்றனர். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" கோபுரம் அமைப்பது மாபெரும் புண்ணியம். ஒரு கோவிலின் முன் தனி ஒரு மனிதன் ஒரு பெரும் இராஜ கோபுரத்தை தன்னுழைப்பினுல் கட்டுவிப்பது வியப்புக்குரியது. பெருமைபடத் தக்கது. போற்றுதற்குரியது. சைவப் பேரன்பர் நாகலிங்கம் சண்முகம் அவர்கள் புங்குடுதீவு மேற்கு மீனுட்சிசுந்தரேஸ்வரர் ஆலயத்தில் அமைத்து விட்டார் ஓர் இராஜ கோபுரம். அவர் உள்ளம் உயர்ந்த உள்ளம்; அவர் உழைப்பினுல் உயர்ந்த உத்தமர். அவர் பணி ஒப்பற்ற பெரும் பணி! அவர் திருத்தொண்டு என்றும் வாழ்க!

---

பிரபல வர்த்தகரும், சமூக சேவையாளருமான

## திரு. கு. அ. குழந்தைவேல் அவர்கள்

## வழங்கிய வாழ்த்துரை

திருப்பணிகள் செழித்தோங்கும் புண்ணிய பூமி புங்குடுதீவு. எட்டுத் திசையிலும் எழில் மிகு கோவில்கள். இன்று கோபுரங்களும் எழுந்துவிட்டன. ஒரு குறையுமில்லை. உழைப்பின் பயனை உலகம் உணர்ந்து விட்டது. உலகில் உயர்ந்த பணிகள் கல்விப் பணியும் ஆலயத் திருப்பணியுமே. ஆலயங்க்ள் உயிரை நல்வழிப்படுத்தும், மனதைப் பண்படுத்தும். இத்தகைய ஆலயங்களைக் கட்டியெழுப்பிப் பேணிப் போற்றி வர வேண்டும்.

"தென்புலத்தார், தெய்வம் விருந்து, சுற்றம்தான்" என்கின்ற ஐந்து பெரும் பகுதிகளாகப் பொருளை வகுத்துச் செலவிடுக என்ருர் வள்ளுவனுர். தெய்வப் பணிகள் புங்குடுதீவில் செழித்து நிற்கின்றன. நண்பர் பேரன்பர் திரு. நா. சண்முகமவர்கள் சிவன் கோவிலுக்கு இராஜ கோபுரம் அமைத்துவிட்டார். அவரது தனிப்பெருந் திருப்பணி அது அவர் தன்னை வெளிப்படுத்த விரும்பாத திருத்தொண்டர். அவர் திருப்பணி இனிது நிறைவேறி விட்டது. அவர் வாழ்வு நல்ல வாழ்வு.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" ஓங்குக திருப்பணி!
விளங்குக தெய்வீக நலம்! "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from :

# C. NADANASABAPATHY

AGENT: CODE No. 340810

# INSURANCE CORPORATION OF SRI LANKA

For Life, Motor Fire and Marine Insurance

*Office:*
**102, 2nd FLOOR,**
**PRINCE STREET,**
**COLOMBO-11,**
Sri Lanka.

**T'Phone : 26575**

With the Best Compliments of :

# PARIS TEX-S

DEALERS IN TEXTILES AND FANCY GOODS

பாரிஸ் ரெக்ஸ் පැරිස් ටෙක්ස්

**130, MALIBAN STREET, COLOMBO-11.**

| | |
|---|---|
| **கிளை :** | **Branch :** |
| 153, *மின்சார வீதி,* | 153, POWER HOUSE ROAD, |
| *யாழ்ப்பாணம்.* | JAFFNA. |
| போன் : 7863 | Telephone: 7863 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வணங்கி வாழ்த்துவனே

ஊரை உயர்த்தும் உயரிய திருப்பணிகளில் உச்சமான திருப்பணி, கோபுரம் அமைக்கும் திருப்பணி. இத் திருப்பணிக்குரிய சிந்தனை இதயத்தில் எழுவதற்கே திருவருளின் அருள் நோக்கு வேண்டும்.

அன்பர் நா. சண்முகம் அவர்கள் சிவனடியே சிந்திக்கும் செம்மையினர். பொருளீட்டுதலையும், அதனைக் காத்தலையும், காத்ததை வகையாக வகுப்பதிலும் வல்லவர். அவருடைய வல்லமைகளின் வழிவந்த செயலே புங்குடுதீவு பெருங்காடு சிவன் கோவிலுக்கு கோபுரம் அமைத்த செயல். இந்தச் செம்மையான செயலால் சைவ உலகம் இறும்பூதடைந்து நிமிர்ந்து நிற்கலாம். நிற்பதோடு மட்டுமா? சண்முகனாரை உறைத்த அன்போடு உள்ளவும் நினைக்கவும் செய்யும். அவர் பணியும் வாழ்வும் சிறக்க சிவனை எண்ணி வணங்கி வாழ்த்துகின்றேன்.

செ. தில்லைநாதன், (J.P.)

புங்குடுதீவு. தலைவர், புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கம்.

26-3-1981

---

உ

# "பக்தர்களோடு, பணிகின்றேன்"

சிவன் ஒரு வைத்தியநாதன்; உயிர்களின் நோய், நாடி; நோய் முதல் நாடி. பரிகாரம் பார்க்கும் பக்குவன். இதனாலேயே தென் தமிழகத்தில் வைத்தீஸ்வரன் கோவிலிலே வைத்திய பூபதியாய்க் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கின்றான். அவனுடைய அருள் உருவத் திருமேனியே, புங்குடுதீவு கிராஞ்சிச் சிவன் கோவிலில் இருந்து அருட் கடாட்சத்தினை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றது.

சிவனார் வழங்கிய கடாட்சத்தின் காரியமே திருத்தொண்டர் நா. சண்முகனார் நிர்மாணித்த இராஜ கோபுரமாகும். இக் கோபுரம் காண்பவரை மெய்ஞானத்தில் அமிழ்த்தக் கூடியது. மெய்ஞான விழிப்பில் மக்களை வழிப்படுத்திய திரு. நா. சண்முகனாரை வாழ்த்துவதில் பக்தர்களோடு நானும் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வைத்தியர் சி. கணேசன், (J.P.)

புங்குடுதீவு - 11,

---

உ

# "பொருளூறிக் கோபுரமாயுருமாறியது"

உருவேறத் திருவேறும், உமையொருபாகனின் அருளேறப் பொருள் தேறும், பொருள் தேற புகழூறும். புண்ணியனார் சண்முகனார் பொருளேறிக் கருவாகி கோபுரமாய் உருமாறி உள்ளமெலாம் வெள்ளமென துள்ளி நிற்கிறது.

துள்ளி நிற்கும் உள்ளத்தை உத்தமனார் உண்மையினில் தோய வைக்கும் பணியதனைப் பாராட்டி மகிழ்வதிலே ஆனந்தம் கொள்கின்றோம்.

அம்மையப்பன் அருளை அள்ள அருள்நெறித் தம்பி சண்முகனார் ஆற்றிய அரும் பணியை அகம் குழைந்து வாழ்த்துகின்றேன்.

"வாழ்க சிவத்தொண்டு"

வளர்க சண்முகனார் அருள் உள்ளம்.

சி. சின்னத்துரை,

ஆசிரியர்.

புங்குடுதீவு - 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

# M/s C. SIVASAMY & CO.

DON CAROLIS BUILDING

**50, KOSALA LANE,**

**COLOMBO - 11.**

★

Customs Clearing & Forwarding Agents

Importers and Distributors of Electrical items

**Tel. 21558**

Cable: **'SIVASONS' Colombo.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறையருள் எங்கும் பிரவாகிக்கட்டும்"

# திரு. எஸ். கே. மகேந்திரன் (சட்டத்தரணி) அவர்களின் இதயபூர்வமான இனிய வாழ்த்து

சைவமும் தமிழும் சால்புற விளங்கும் புங்குடுதீவுக் கிராமத்தின் நடுநாயகமாக விளங்கும் கிராஞ்சியம்பதியிலே, ஸ்ரீ மீனாட்சியம்பாள் சமேதராக வீற்றிருந்து வெவ்வினையை வேரறுத்து அடியார்க்கு அனுக்கிரகம் செய்து கொண்டிருக்கும் சோம சுந்தரேஸ்வர சுவாமி கோயிலில் நிமிர்ந்து நிற்கும் இராச கோபுரம் தீவக மக்களாகிய எமக்கெல்லாம் பெருமை தந்து கொண்டிருக்கிறது.

பண்டைத்தமிழகத்தில் அரசர்களின் அரவணைப்பிலே தமிழும் சைவமும் தழைத் தோங்கின. இன்று தமிழித் தனவந்தர்களினதும் வர்த்தகப் பெருமக்களினதும் பேராதரவினல் சைவத்திற்கும் தமிழிற்கும் பெரும் சிறப்புக்கள் குவிக்கப்படு கின்றன. இந்த வகையில் இலட்சக்கணக்கான ரூபா செலவில் இத்தர்ம கைங்கரியத்தை, இராசகோபுரத் திருப்பணியை செவ்வனே செய்து முடித்திருக்கும் அன்பர் நா. சண்முகம் அவர்களின் பெருமையையும் மனப்பாங்கையும் இறை பக்தி யையும் நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. தான் ஈட்டும் பொருட்செல்வத்தின் பெரும்பகுதியை அருட்செல்வம் வேண்டி செலவிடும் இவரது உள்ள உணர்வுகள் தீவக வர்த்தகர்களின் பரந்த மனப்பான்மைக்கு ஒரு உரைகல்லாகும். இவரை இப்பணிக்கு இழுத்துவிட்ட சிவஸ்ரீ மா. மீனாட்சி சுந்தரக் குருக்களையும் அவருடைய தர்மபத்தினியாரையும் புங்குடுதீவுத் தமிழகம் என்றும் மறக்காது. அவர்களின் சேவை புனிதத் தன்மையானது.

அன்பர் சண்முகம் அவர்களின் அரிய பணியால் உருவாகி நிற்கும் பஞ்சதள இராசகோபுரத்தின் குடமுழுக்கு விழா சிறப்புற நடக்கும் இவ்வேளையில் அன்பர் சண்முகத்துக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சகல செல்வங்களும் கிடைக்க வேண்டுமென விழைந்து இறையருள் எங்கும் பிரவாகித்து சகல மக்களுக்கும் ஐஸ்வரியம் அளிக்க வேண்டுமென வாழ்த்தி அமைகின்றேன்.

சுபம்

இங்ஙனம்,
அன்பன்,
எஸ். கே. மகேந்திரன்.
(சட்டத்தரணி)

"சத்திய இல்லம்"
புங்குடுதீவு 6. 10-3-1981

---

பிரபல வர்த்தகர்

# திரு. சி. சின்னத்துரை அவர்களின் வாழ்த்துரை

தமிழ்ப்பற்றும் சமயப்பற்றும் மிக்க புங்குடுதீவுப் பெருமக்கள் ஆலயங்கள் தோறும் மஹோற்சவம் நடாத்துவதோடும் ஆலய புனருத்தாரணம் செய்தும் கோபுரங்கள் அமைத்தும் குடமுழுக்குச் செய்தும் இறையருள் வேண்டி நிற்பது பாராட்டுக்குரிய விடயமாகும். அறவழி நின்று ஈட்டிய பெருநிதியின் பெரும் பகுதியை இறைதொண்டுக்கென அர்ப்பணம் செய்தால் இவ்வூர் மக்களின் சிறப்பம்சமாகும். இவ்வூர் மக்களின் பெருமையை நாடறியச் செய்யும் வகையில் சிவநெறித் தொண்டர் திரு. நாகலிங்கம் சண்முகம் அவர்களது இத்தர்ம கைங்கரியம் அமைந்துள்ளது. பெருங்காடு சிவன்கோவில் பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேக வைபவமும் அதனையொட்டி நடைபெறவுள்ள சீர்காழி எஸ். கோவிந்தராஜன் குழுவினரின் இன்னிசைவிருந்தும் சிறப்புற அமைய எல் லாம் வல்ல எம் பெருமான் திருவருள் கூட்ட வேண்டும் என இறைஞ்சுகின்றேன்.

சி. சின்னத்துரை.

இணுவில்,
6-3-81

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு ஸ்ரீ மீனாட்சியம்பாள் சமேத
சோமசுந்தரரேஸ்வர சுவாமி கோவில் பஞ்சதள இராச கோபுர கும்பாபி
ஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

போன்: 25567 தந்தி: 'வாசன்'

# வாசன் ரேடிங் கோ.

(மொத்த சில்லறை வியாபாரிகள்)

**121-5ம் குறுக்குத் தெரு,**

**கொழும்பு-11.**

மற்றும் உங்கள் உல்லாசப்பயணத்திற்கு

# வாசன் சுப்பர் ரவல்ஸ் லிமிட்டட்

(குளிரூட்டப்பட்டது)

**121-5ம் குறுக்குத் தெரு,**

**கொழும்பு-11.**

---

**T'grams: VASSAN** **T'phone: 25567**

With Best Compliments from:

# VASAN TRADING CO.

GENERAL MERCHANTS

**121, 5th Cross Street,**

**COLOMBO-11.**

# சட்டத்தரணி திரு. ப. கதிரவேலு அவர்களின்
# வாழ்த்துரை

ஒரு நாட்டின் அருட் செல்வத்தின் அறிகுறிதான் ஆலயங்கள். பல்லவர், சோழர் காலத்தில் தமிழ்நாடு பொருட் செல்வமும் அருட் செல்வமும் நிறைந்து வானுயர்ந்த கோபுரங்கள் அருள் ஒளிபரப்பி நின்ற வரலாறு உலகறிந்த ஒன்றாகும். பல கல் தூரத்தில் வாழும் மக்களும் பரமன் புகழ்பாட வாய்ப்புத்தருவன. ககனம் தடவும் கோபுரங்களே.

இத் தெய்வத்திருவை, புங்குடுதீவு கிராஞ்சியம்பதி அருள்மிகு மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமிகள் திருக்கோயிலும் பெறத் திருவருள் சித்தம் கொண்டு செயற்படுத்தும் சிவப்பேற்றை அன்பர் நாகலிங்கம் சண்முகம் அவர்களுக்கு வழங்கியுள்ளான் சோமசுந்தரேசன். இப்பேறு பல பிறப்புகளில் ஈட்டிய பெரும் புண்ணியப் பயனும். வளர்க திருத் தொண்டு.

இராஜ கோபுர திருப்பணி நிறைவின்போது கொழும்பு வர்த்தகப் பெருமக்கள் மலர் ஒன்று வெளியிட உள்ளார்கள் என்ற செய்தி பெரு மகிழ்ச்சி தருவதாகும். அவர்கள் திருப்பணி இனிது நிறைவுபெற இறைவன் திருவருள் பாலிப்பாராக.

அன்பன்,
ப. கதிரவேலு

யாழ்ப்பாணம்,
5-3-1981

---

திருநெல்வேலி "சீமா சில்க்" பங்காளரும், பிரபல சமூக சேவையாளருமான

# திரு. இராமநாதன் குணரத்தினம் அவர்களது
# வாழ்த்துரை

புங்குடுதீவு சிவன்கோவில் ராஜ கோபுர கும்பாஷேகம் 26-3-81 வியாழக்கிழமை வெகு விமரிசையாக நடைபெறுவதையிட்டுப் பேருவகை அடைவதுடன், அவ் விழாவில் வெளியிடப்படும் கும்பாபிஷேக மலருக்கு ஆசி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

நான் பிறந்த ஊரில் நடைபெறும் இப் பெருவிழாவினை முன்னின்று நடாத்தும் சிவனருட் செல்வர் திரு. நாகலிங்கம் சண்முகம் அவர்களது தன்னலமற்ற இச் செயல் பல்லோரது பாராட்டுக்குரியதாகும். இஃது எமது ஊருக்குமட்டுமல்லாது சைவ உலகமனைத்துக்குமே பெருமை அளிப்பதாகும். முற்காலத்தில் மன்னர்கள் செய்து வந்த இத்தகைய தர்ம கைங்கரியங்களைத் தற்போது திரு. நா. சண்முகம் போன்ற சிவதர்ம வள்ளல்கள் செய்து வருவது பாராட்டுக்குரியதாகும்.

இவ் விழா சிறப்புடன் நடைபெறவும் இதனையொட்டிய சீர்காழி கோவிந்தராஜன் குழுவினரின் பக்தி இசை வெள்ளம் தீவகம் எங்கணும் ஒலிக்கவும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இ. குணரத்தினம்

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
9-3-1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

Telephone : 23686 Telegrams :

With Best Compliments from:

# RAMSETHU & CO.

General Merchants & Commission Agents

**DEALERS IN ALL KINDS OF LOCAL PRODUCES**

No 65, 4th Cross Street,

COLOMBO-11.

ராம்சேது அன் கோ.

රාම්සේතු සහ සමාගම

*Branch* T'phone : 415 JAFFNA

*கிளை :*

*இல.* **32**, *மானிப்பாய் வீதி,*

**யாழ்ப்பாணம்.**

*தொலைபேசி:* **415** *தந்தி: ஆர்எஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# சிவனுக்கு இராஜ கோபுரம்

ச. சதாசிவம்

(தீவகன்)

புங்குடுதீவில் என் தாயகத்தில் அதிலும் என் கிராமத்தில் சிவனுக்கு இராஜகோபுரம் எல்லையே இல்லாது திருநடனம் புரியும் தில்லை சிவனுக்கு, சிதம்பர நடராசனுக்கு சதா ஆனந்தமயமான சதாசிவனுக்கு சங்கரனுக்கு இராஜகோபுரம். எனக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் மகிழ்ச்சி தரும் செயலே ஆகும். என்றோ என் இதயத்திற் குடிகொண்ட எண்ணம் இன்று நிறைவேறிவிட்டது. அதிலும் எம்மவரால் எம் ஊரவரால் நிறைவேறுகிறது.

பல நூற்றாண்டுகளாக பழமை வாய்ந்த கோயில்கள் கண்டிராத இராஜகோபுரத்தை அரை நூற்றாண்டு கண்ட வரலாற்றுச்சிறப்பு மிக்க சிவன் தனக்கெனவே அமைத்துக் கொண்ட இவ்வற்புத செயலை வார்த்தைகளால் வருணிக்கவே முடியாது.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"' "கோபுரம் காண்பது கோடி புண்ணியம்" என்றெல்லாம் அன்று சொல்லிவைத்தனர் நம்முன்னோர். இன்றோ ஊருக்குள்ளே இராஜகோபுரத்தைக் காணக்கிடைத்தமை இறைவனின் கருணையும் எம்மவரின் அதிர்ஷ்டமுமே ஆகும்.

இறைவன் இறைவியின் திருவிளையாடல்களைச் சித்தரிக்கும் சிற்பங்களாக தத்ரூபமாக செய்யப்பட்ட சிலைகளைத் தாங்கியதே இராஜ கோபுரம். இது சேர, சோழ, பாண்டிய மன்னர் காலத்திலே பல்லவர் தம் கலையாலும், பழம் சேரர் சிலையாலும் பார் மிளிரச் செய்த நாடு தமிழ்நாடு. இன்று நம் நாடெல்லாம் பரவி வருகிறது.

வானுயர்ந்த கோபுரத்தை மட்டுமல்ல அதை அமைத்த நம் ஊர் சகோதரர் திரு. சபாரத்தினம் அவர்களின் கைவண்ணத்தையும் வானுயர்ந்த கோபுரங்கள் வண்தமிழர் கைவண்ணம் வையமிசை காட்டும் தீவு நாம் கண்டுவிட்டோம். ஆனந்தக் கூத்தாடும் அம்பலத்தரசன் வாவென்று நம்மையெல்லாம் வரவழைக்கும் வண்ணக் கோபுரமாய் விண்ணை முட்டி நிற்கிறது.

அதற்கு மெருகூட்டினால் போல கலைச் செல்வத்தை அள்ளிக்கொட்டி கண்ணை கவர வைத்த தமிழ்நாட்டு சிற்பாஸ்திரியான திரு. பக்கிரிசாமி அவர்களின் திறமையே தனிச்சிறப்பு, தனிப்பெருமை.

இத்திருப்பணியை அருட்பணியாக ஏற்றுப் போற்றும் வகையில் ஆக்கி அமைத்த திரு. நா. சண்முகம் அவர்களை நமது நாடு மறக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரை கடலோடி திரவியம் தேடும் நம் தாயக மக்கள் தாயக அபிமானம் கொண்டு, பல வசதியீனங்கள் மத்தியிலும் தாயகத் திற்கும், தம்மினம், மதத்திற்கும் பல பல தொண்டுகள் செய்வதை யாவரும் அறிவர். இதிலும் எம்மவர் முதன்மை வகிப்பது பாராட்டுக்குரியது.

தேடிய செல்வத்தை தனக்கும் தன்னை தொடர்ந்துவரும் சந்ததியினர்க்கும் என மூடி மறைத்து பேணி பாதுகாத்து வருப வர்களும் நம் தாயகத்தில் உண்டு. தேடிய தெல்லாம் தேவைக்கே என்றும் இது என்னால் வந்தது அல்ல அவன் செயல் சிவன் தந்த செல்வம் என்றெண்ணி பணிகள் பல செய்யும் பெருமக்களும் உண்டு. கேட்ட பணிகளுக்கெல்லாம் இல்லையெனாது கொடுத்து தனக்கெனவே சில தலையாய பணிகளைச் செய்யும் பண்பாளர்களும் உண்டு. இப்படியான செயற்கரிய பணி களை அதிலும் நம்சமயத் திருப்பணிகளை மனம் துணிந்து செய்த மக்களை காலாதி காலமாக பாராட்டிக் கௌரவிக்க வேண்டி யவர்கள் ஆவோம். அன்றியும் அவர்கள் நீடூழி காலம் சீரும் சிறப்பும் செல்வமும் பெற்று சிரஞ்சீவிகளாய் வாழ்ந்து மேலும் நற்பணிகள் பல செய்யவேண்டுமென ஒரு முறையாவது நம் உள்ளத்தால் இறைவனை இறைஞ்ச வேண்டும். "இராஜ இராஜேஸ் வரம் தஞ்சை பெரிய கோவில்", தமிழ் நாட்டில் தஞ்சை என்றாலே இராஜராஜ சோழனுடைய நினைவு எப்படி வருமோ அதேபோல புங்குடுதீவு கிராஞ்சி சிவன் கோவில் என்றால் அதனை ஸ்தாபித்தவர் களையும் கோபுரம் அமைத்தவர்களையும் நினைவு வராமல் போகாது.

சிவன் கோவிலை ஸ்தாபித்தவர் என்றும் இளமை மாறாத மார்க்கண்டேய குருக்கள், காலி சிவன் கோவிலில் சுவாமி வீதிவலம் வருகையில் சொன்னபடியே மழைபெய்யச் செய்த சித்தர். இவர் காசி யாத்திரை செய்து கங்கையில் மூழ்கி எடுத்த மரகத லிங்கத்தை புங்குடுதீவு மேற்கு, கிராஞ்சியில் ஸ்தாபித்தார். அவர் சில வருடங்களில் கதிர்காமத்தில் சமாதியாகினார். இன்றும் அவரின் சமாதியை மக்கள் தரிசித்து வருவதைக் காணமுடியும் கணவன் எடுத்த முயற்சியின் தொடர்ச்சியாக அவரின் அருமை மனைவியும் அவரின் புதல்வன் மீனாக்ஷி சுந்தரமும் பாடுபட்டு வளர்த்த கோவிலை கோபுரம் வரை வளர உழைத்த பெருமை குலமகள் மீனாட்க்ஷி சுந்தர குருக் களின் மனைவி பரமேஸ்வரி அம்மாவையே சாரும் என்றால் மிகையாகாது. இவர்கள் இருவருக்கும் ஒரே மகளாக உதித்த நிறத் திலும் உருவத்திலும் மீனாக்ஷி அம்மனைப் போல் தோற்றம் அளிக்கும் லோகேஸ்வரி அம்மாவினதும் அவர் கணவர் நாகேந்திர சர்மா (சின்னமணி) அவர்களினதும் விடா முயற்சியும் ஊக்கமும் உற்சாகமுமே கோயில் வளர்ந்து கோபுரம் அமையக் கூடிய அளவுக்கு புங்குடுதீவு மக்களையே பாசப் பசுங்கொடியால் பின்னிப் பிணைத் துள்ளனர்.

வரலாற்றுப் பெருமைமிக்க சிவனுக்கு இராச கோபுரத்துடன் அமைந்து மிளிரும் சிவன் கோவில் சமயப் பெருமை கொண்ட தாயும் சமுதாய ஏற்றத்தாழ்வை அறவே நீக்கி ஆண்டவன் முன்னிலையில் அனைவரும் சமம் என்ற நிலையில் வழிபாட்டு ஸ்தல மாகவும், கலை வளர்க்கும் நிலையமாகவும், பிணி அகற்றும் நிலையமாகவும், அறியாமை என்னும் இருள் நீக்கி ஒளி வழங்கும் நிலைய மாகவும், சமுதாயப் பணியாற்றும் நற் கூடமாகவும் அமைந்துவிட்டது.

ஆதி அந்தம் இல்லாத அரும் பெரும் சோதியாய் விளங்கும் பரம்பொருள் "அருவன்". ஆயினும் அன்பர்க்கு ஒருவனாய் வருவன் என்ற மாமறைக்கு இணங்க அரு உருவ திருமேனியான லிங்க வடிவில் தன்னை வெளிப்படுத்தி எம்மை எல்லாம் ஆட் கொண்டுள்ளான்.

எனவே சமயப் பெருமை மிக்க கோயிலாக அருள்மிகு மீனாக்ஷி சுந்தரேஸ் வரர் (கிராஞ்சி சிவன்) கோவில் வருங்காலம் மாபெரும் வரலாற்றுச் சிறப்பை வெளிக் காட்டி இலட்சோப லட்சம் மக்களை தன்னிடத்தே வரவழைத்து அருள்பாலிக்க வேண்டுமென வேண்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எல்லாம் அவன் செயல்

சிற்பி கனக. சபாரெத்தினம்

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே" —

— அப்பர் —

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம் பதியில் கோயில் கொண்டருளிய ஸ்ரீ மீனுட்சி சுந்தரேஸ்வரரின் கும்பாபிஷேகம் இன்று அதி விமரிசையாக நடைபெறுவதை நினைத்து இறும்பூதெய்துகிறேன். என் உள்ளம் இன்று கருணைகொண்ட உள்ளமாக தியாக சிந்தனை நிறைந்த உள்ளமாக தூய உள்ளமாக இருப்பதை உணர்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே எம்பெருமானின் புகழை, சிறப்பை எடுத்தியம்பாமல் இருக்க முடியவில்லை. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்பது ஆன்ருேர் வாக்கு. எம் நாடாம் புங்குடுதீவில் ஏராளமான ஆலயங்கள் சிறப்புற்று அமைந்திருந்த போதிலும், கிராஞ்சியம்பதியில் கோயில் கொண்டருளிய ஸ்ரீ மீனுட்சி சுந்தரேஸ்வரரின் புகழ் சிறப்பு தனிச்சிறப்பாக அமைந்துள்ளதை யாவரும் அறிவர். அவரின் ஆலயத்தைச் சுற்றியுள்ள மக்களை நோக்கின் தனிச்சிறப்பு பொருந்தியவர்களாக, தியாக சிந்தனை, கருணை உள்ளம் படைத்தவர்களாக, கல்வி, செல்வம் நிறைந்தவர்களாக காணப்படுவது எம்பெருமானின் அருளே யாகும். மேலும் அவரின் ஆலயம் அமைந்துள்ள அயல் அமைதி நிறைந்ததாக புங்குடுதீவில் எப்பகுதியிலேனும் காணப்படாத புனிதம் பொருந்திய இடமாக காட்சியளிக்கிறது. எம்பெருமானை வழிபட்டோர், தம் உள்ளத்தில் அவரை நிலைநிறுத்துவோர் உயர் நிலை அடைவது திண்ணம்.

இந்த நிலையில்தான் தேவஸ்தான இராசகோபுரம் நிறைவேறியது என்று கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இராசகோபுரம் உருவாகுவதற்கு காரணமாக இருந்த பிரபல்ய வர்த்தகர் திரு. நாகலிங்கம் சண்முகம் என்பவர் ஒரு சிவ பக்தர் என்பது யாவரும் அறிந்ததே. எத்தொழிலை தொடங்கு முன்பும் எம்பெருமானின் அருளை வேண்டி நிற்பவர் வர்த்தகத் துறையில் ஈடுபட்டிருந்த போதிலும் கருணை உள்ளமும் தியாக சிந்தையும் கொண்டவர். நினைத்தற்கரிய ஆலய திருப்பணியாம் இந்த இராச கோபுரத்தை தன்னந்தனியே கட்டி எழுப்ப திட சங்கற்பம் பூண்டவரென்ருல் எம்பெருமான் மேல் அவர் வைத்திருந்த அசையாத நம்பிக்கை அன்பையும் நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இத் திருப்பணியை நிறைவேற்றிய நாகலிங்கம் சண்முகம் குடும்பத்தாருககு எம்பெருமானின் அடியவர்கள் எல்லோரும் நன்றியுடையவர்களாக இருக்கிருர்கள்.

தம் உள்ளத்தில் எம்பிரானை நினைத்தோருக்கு நிலைநிறுத்தியோருக்கு குறைவில்லை என்பதற்கு இரண்டாவது உதாரணமாக, இராச கோபுரத்தை கட்டி எழுப்புவதற்கு எனக்கு கிடைத்த பாக்கியத்தை கூற விரும்புகிறேன். நயினுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் எனது ஆருவது வயதில் எனது பெற்ருேர்கள் சகிதம் 1931ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவில் காலடி எடுத்து வைத்தேன். அதுவும் எம் பெருமானின் ஆலய முன் றலிலே வந்திறங்கினேம். அன்றுதொட்டு இற்றைவரையும் புங்குடுதீவில்தான் வசித்துக் கொண்டிருக்கிறேன். எனது ஆரம்ப கல்வியை புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் கற்று, தமிழ்நாடு, ராமநாதபுரம் ஸ்ரீ ச. நாகலிங்க ஸ்தபதியாரிடம் இரண்டாண்டுகள் ஆலய கட்டிட அமைப்பு நுணுக்கங்களை ஓரளவு கற்றுத்தேறினேன். அதன்பின் எனது தந்தையார் உதவியுடன் பல கட்டிடங்களை கட்டி முடித்தேன். 1964ம் ஆண்டிலிருந்து இற்றைவரையும் 2600 வீடுகளையும் 250க்கு மேற்பட்ட ஆலயங்களையும் அமைத்துள்ளேன். எம்பெருமான் கருணையுடன் நான் அமைத்த இந்த இராச கோபுரம் எட்டாவது கோபுரமாக விளங்குவதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். எம் பெருமானின் கருணையே கருணை.

எம்பெருமான் ஆலய இராச கோபுரம் பஞ்சதள (ஐந்து நில) அமைப்பைக் கொண்டதாக 55 அடி உயரமுள்ளதாக விளங்குகிறது. சிறப்பு அம்சமாக தளத்திற்கு தளம் சிறந்த வேலைப்பாடுகள் கொண்ட கர்ண கூடுகள் காணப்படுகிறது. எம் பெருமான் கிராஞ்சியம்பதியில் கோயில் கொண்டருளிய (காசிலிங்க வரலாறு)) பொறிக்கப் பட்டிருக்கிறது. சாஸ்திர விதிக்கமைய அமைக்கப்பட்ட இந்த இராச கோபுரம் எம்பெருமானின் புகழைப் பரப்பி நிற்கும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. எத்தனையோ ஆலய கட்டிட வேலைகளில் ஈடுபட்டிருக்கிறேன். ஆனுல் எம்பெருமானின் இராச கோபுர கட்டிட வேலையில் ஈடுபட்டிருந்தபோது எனக்கிருந்த மன உத்வேகம், திருப்தி எந்த இடத்திலும் ஏற்படவில்லை. குறித்த காலத்தில் கட்டி முடிக்கக்கூடிய நிலையை எனக்கு நல்கியது எம்பெருமானின் பெருங் கருணையேயாகும்.

எம்பெருமானின் ஆலய இராச கோபுர கட்டிட வேலைகள் சிறப்புற நடந்தேறியதற்கு எம்பெருமானின் கருணையோடு இவ்வாலய தொண்டர்களாக பூஷ்கராகவுள்ள பிரம்ம ஸ்ரீ மீனுட்சி சுந்தரேஸ்வர குருக்கள், அவர் பாரியார் பரமேஸ்வரி அம்மையார், ஸ்ரீ நாகேந்திரக் குருக்கள், அவர் பாரியார் லோகேஸ்வரி ஆகியோர்களுடைய அன்பும் கருணையுமே காரணமாகவுள்ளது. அவர்களின் தொண்டு இவ்வாலய சிறப்புக்கு பெருந்துணையாக அமைகிறது. பால மார்க்கண்டனின் அன்பும், கருணையும் என் மனத்தே நிலைகொண்டுள்ளது. அவர்கள் இவ்வாலயத்திற்கு செய்யும் தொண்டு நிலைபெற அதனுல் அவர்கள் எம்பெருமானின் அருளைப்பெற பெருமானை இறைஞ்சி நிற்கிறேன்.

இந்த இராச கோபுரத்தின் சிற்ப வேலைகளை மிக அழகுடன் ஆக்கிதந்த திரு. பக்கிரிசாமி அவர்களை நாம் மறத்தல் முடியாது. அவரின் சிற்ப வேலைகள் வானளாவும் கோபுரத்தை அழகுபடுத்துகிறது.


கோபுரத்தின் சிற்பங்களை வர்ணம் தீட்டிய கொழும்பு 13ஐ சேர்ந்த சூரிய குமாரின் கைவண்ணத்தையும் நான் மறந்து விடவில்லை. அவரின் சேவையையும் நம் நாட்டு மனத்தகத்தே வைக்க கடமைப் பட்டுள்ளேன்.

வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஊருக்கு நல்லது செய்யும் திரு. நா. சண்முகமும் குடும்பமும் நீடு வாழ்க"

கோயில் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம் என்றனர் பெரியோர். வழி பாட்டுத்தலம். அங்கு இறைவன் இருந்து திருவருள் பாலிக்கின்றான். அவ்விறைவனை வழிபடச் செல்லும் ஊர்மக்கள் நாலுதிசை யிலிருந்தும் முதலில் காண்பது கோயிலின் நெடிதுயர்ந்த இராசகோபுரத்தைத்தான் இராசகோபுரம் கோயிலுக்கு அழகு செய்கின்றது. மக்களின் உள்ளத்தைத் தூய்மை செய்கின்றது. எனவே கோயிலுக்கு இராச கோபுரம் ஒன்று அமைத்துக் கொடுப்பதானால் அது மக்களுக்கு உள் ஒளி பெருக்கச் செய்த பெருந் தொண்டாகும்



இவ்வண்ணம் புங்குடுதீவு மேற்கு ஸ்ரீ கிராஞ்சியம்பதி ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி (சிவன்) தேவஸ்தானத்துக்கு இராச கோபுரம் அமைத்துக் கொடுத்த பெரும் புண்ணியவான் திரு. நா. சண்முகம் அவர்கள். இவர் அல்லும் பகலும் அனவரதமும் இறைபக்தியும் மிகுந்தவர். தம்மைப்போலவே தம் ஊர்மக்களும் பக்தி சிரத்தையுடன் வாழவென்றே இத்தகைய இராச கோபுரத்தை அமைத்து உதவினார்கள்.

இந்தக்காலத்தில் இராச கோபுரம் ஒன்றை அமைத்து கொடுக்க தனி ஒருவர் முன்வருகிறார் என்றால் முன் செய்த தவத்தால்தான் முடியும். அந்தளவு பொருள்வளத்துக்கும் இறைவன் துணையும் வேண்டும். பொருளைப் பெற்ற அன்றே மேலும் மேலும் இறைவன் அருளுவான் என்றெண்ணி பெருஞ் செலவில் திரு. நா. சண்முகம் அவர்கள் இராச கோபுரம் அமைக்கும் திருப் பணியை ஆரம்பித்தார். ஆண்டு ஒன்றுக்குள் கருமமே கண்ணாயிருந்து இலட்சக் கணக்கான பொருளையும் பொருட்படுத்தாமல் செய்து முடித்துவிட்டார் கோபுரத்தை.

இராச கோபுரத்தை அமைத்துவிட்டதுடன் அமையாது அதற்கு கும்பாபிஷேகத்தையும் பெரிய அளவில் செய்துகொள்ளவும் வழிசெய்துள்ளார். ஆலயத்தில் நாட்டம் கொள்ள-மக்களை-ஈர்க்க தமிழ் நாட்டு இன்னிசைச் செம்மல் சீர்காழி எஸ். கோவிந்தராஜனின் கான மழையையே பொழிய ஏற்பாடும் செய்துள்ளார். புங்குடுதீவு மக்கள் எங்கணும் இருந்து தம்வழி பாட்டுத்தலத்

**திரு. வ. நடராசா**
முன்னாள் வட்டாரக் கல்வி அதிகாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கு இராஜகோபுர கும்பாபிஷேக விழாவுக்கு வருகைதர - இன்னிசையில் இறைவன் நாமத்தையே உச்சரிக்க காதலாகிக் கசிந்து உருக வைக்க இன்னிசை பேருதவியாக அமையும், இராச கோபுரத்தை அமைத்து, இன்னிசை விருந்தும் ஒழுங்கு செய்து வைத்துத் திருப்தி கொண்ட திரு. நா. சண்முகம் அவர்களுக்குப் பக்கத் துணையாக கும்பாபிஷேக மலர் ஒன்றினையும் பக்தர்கள் வெளியிட முன்வந்துள்ளமை பாராட்டத் தக்கதாகும்.

கும்பாபிஷேக ஒழுங்குகளைப் பன்னெடுங்காலமாக எல்லாரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளத்தக்க செய்திகளைக் கொண்டிருக்கும் மலரை மலர்விப்பதும் இலேசான காரியமாக இல்லை. இதற்குப் பொருள் வேண்டும் அல்லவா? வியாபார அன்பர்கள் தத்தம் விளம்பரவகையால் கொடுத்த மூலதனமாக அமைகின்றது. அம்மலரை மணம்பெறச் செய்யவும் இராச கோபுர அமைப்பு பாராட்டப் பெறவும் அறிஞர் பெருமக்களின் ஆசிச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன இம்மலரில். அன்றியும் வரலாற்றுக் கட்டுரைகளும் ஆத்மீக உரைகளும், கூட வெளிவருகின்றன.

அரைநூற்றூண்டுக்கு மேலாகியும் இராச கோபுரம் அமைக்க யாரும் எண்ணமுன் திரு. நா. சண்முகம் அவர்கள் உள்ளத்தில் அவ்வெண்ணத்தை உதிக்கச் செய்த புங்குடு தீவு பெருங்காட்டு சிவனாின் திருவருட் கருணையை என்னென்று சொல்லுவது! திரு. நா. சண்முகம் அவர்களைப் போல இன்னும்பல வள்ளல்கள் புங்குடுதீவில் இருக்கின்றனர். இவர்கள் அவ்வூர் மக்களுக்கு வேண்டிய நீர்வழங்கல், பாதைகள் அமைத்தல், போன்றவற்றுக்கு உதவுவார்கள் என்று நாம் கருதலாம்.

புங்குடுதீவு வாழ் மக்கள் இலங்கையின் நாலுதிசைகளிலும் இருந்து நல்வாழ்வு காண்கின்றூர்கள். அவர்கள் நாம் பிறந்தகத்து வாழும் சாதாரண மக்களையும் நிறைந்து தம்மைப்போல உயர்ந்துவாழ வழி வகை காட்ட முன்மாதிரியாக உள்ள பிரபல வர்த்தகர் திரு. நா. சண்முகம் அவர்களையும் அவர்தம் குடும்பத்தையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அன்னுருக்கு சகல வளமும் அளித்து நீடு வாழ்வு வழங்க எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பானுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சைவ சமய இலக்கியங்கள்



மு. இராமலிங்கம், B.Sc., Dip in Ed.

ஒரு நாட்டு மக்களின் நாகரிகம், பண்பாடு, கலை, கலாசாரம் மொழிவளம் ஆகியவற்றை எடுத்துக் காட்டுவது அம் மக்களினின் இலக்கியப் படைப்புகளாகும். இவ்வகையில் பொதுவாகத் தமிழ் மக்களினதும் சிறப்பாக சைவ மக்களினதும் அரும் பெரும் பொக்கிஷமாக விளங்குவன. தேவாரம், திருவாசகம் திருக்கோவையார், திருமந்திரம், திருப்புகழ், பெரியபுராணம் முதலியனவாகும். இவற்றின் வரலாறு பற்றியும் உள்ளடக்கம் பற்றியும் அறிந்திருத்தல் ஒவ்வொரு சைவனதும் கடமையாகும். ஆனால் உலகாயதத்தில் முற்றும் மூழ்கித் தவிக்கும் இன்றைய காலகட்டத்தில் இத்துறையில் சிந்தனை செலுத்துவோர் சிலரினும் சிலரே.

"எல்லா மனிதர்களிடத்திலும் ஈசுவரன் இருக்கிறான். ஆனால் ஈசுவரனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை. இதுதான் அவர்கள் துன்பப்படுவதற்குக் காரணம்" என்பது பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பணிவார்த்தை.

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாரெனின்" என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திருவாக்கு இவற்றின் பொருளை நன்குணர்ந்து நம் வாழ்நாள் பொழுதில் ஒரு சிறிது நேரத்தையேனும் ஒதுக்கி இறை சிந்தனையில் ஈடுபடுவோமானால் எமக்கு எதுவித இடுக்கணும் ஏற்படமாட்டாது. இறை சிந்தனைக்கு நம்மை இட்டுச்செல்வன நம் முன்னோரளித்த அருஞ்செல்வமாகிய சமய இலக்கியங்கள்.

சைவ சமய இலக்கியங்களுள் திருமந்திரம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. சைவசித்தாந்தத்தின் அடித்தளமெனக் கருதப்படும் இத்திருமந்திரம் பண்டைத் தமிழ்நாட்டில் பதிணெண் சித்தர்களுள் ஒருவராகிய திருமூலரால் அருளப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமான சுவாமிகள் திருமூலரை யோகிகளுள் சக்கரவர்த்தியெனப் பாராட்டியுள்ளார். திருமூலரது திருமந்திரம் வேதம் ஆகமம், தந்திரம் யோகம் முதலிய பலவற்றை எடுத்துக் கூறுகின்றது.

இரு பொருட்காட்சியில் ஒன்றைக் காணும்போது மற்றயது தானாகவே மறையும் என்பது உளநூலார் முடிபு. மெய்ப்பொருள் தெளிவானால் பொய்மை விலகிவிடும் என்பது தத்துவம் இதனைப்பின் வரும் திருமந்திரம் தெளிவாக விளக்குகின்றது.

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்துள் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்துள் மறைந்தது பார்முதற் பூதம்"

ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருங் கடலாம் அமலனை அன்பின் வடிவாக கண்டு ஆராதித்த திருமூலர் கூறுகிறார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவம் என்பது யாரும் அறிகிலார்"

இவ்வடிகள் பற்றிக் கூறும் பேராசிரியர் றோமானிஸ் (Prof. Romanes) "அன்பே தெய்வம் எனும் கோட்பாட்டுடன் ஒப்பிடும் போது அறிவியலும் தத்துவமும் மானிட சிந்தனைக்கு அளித்துள்ள பங்களிப்பு மிக மிகச் சொற்பமே" என விளக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து பதின்மூன்றும் நூற்றுண்டில் வாழ்ந்த மெய்கண்டதேவர் அருளிய சிவ ஞான போதம் பதினன்கு சித்தாந்த சாஸ்திரங்களுள் முதலாவதாகும். புதிய ஏற்பாடு (New Testament) எனக் கருதக் கூடிய இந்நூல் மிகச் சில சூத்திரங்களையே கொண்டிருப்பினும் அவை காலத்தால் அழியாதவை; கருத்தினுல் கடலினும் ஆழமானவை; கற்போர் மனதைக்கவர வல்லன இதற்கு "சிவஞானசித்தியார்" என விளக்க உரை அருளியவர் 'சகலாகம பண்டிதர்' எனப் பலராலும் போற்றப்படும் அருணந்தி சிவாச்சாரியார் மெய்கண்டதேவர் கைலா சத்து பரஞ்சோதி மாமுனிவரிடம் நேரடியாக தீட்சை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. மெய்கண்டதேவர், அருணந்த சிவாச்சாரியார் மறைஞான சம்பந்தர் உமாபதி சிவாச்சாரியார் ஆகிய நால்வரும் சந்தானக்குரவர் எனப்படுவர்.

சமய குரவர்களாகிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாணிக்கவாசகர் ஆகியோர் அருளிய பாடல்களுள் முதல் மூவரின் தேவாரங்கள் முதல் ஏழு திருமுறையாகவும் மணிவாசகரின் திருவாசகம் எட்டாம் திருமுறையாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. கருவூர்ச்சித்தர் சேந்தனர் திருமாளிகைத் தேவர் முதலியோர் அருளிய திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறை யாகவும் திருமூலர் திருமந்திரம் பத்தாம் திருமுறையாவும் காரைக்காலம்மையார் பாடல் சேரமான் பெருமாள் நாயனர் பாடல், நக்கீரர் பாடல் முதலியன பதினே ராம் திருமுறையாகவும் சேக்கிழாரது பெரிய புராணம் பன்னிரண்டாந் திருமுறை யாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. திருஞான சம்பந்தரது. 383 பதிகங்களுள் 136 பதிகங்கள் முதல் திருமுறையாகவும் 122 பதிகங்கள் இரண்டாம் திருமுறையாகவும் 125 பதிகங்கள் மூன்றும் திருமுறையாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

"வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க" வந்து அவதரித்த ஞான சம்பந்தப் பெருமான், ஆதியும் அந்தமுமாகி நிற்கும் சிவபரம்பொருள் ஆண்பெண் என்ற இரு பிரிவுள்ள பொருள்களாகி, சத்துவம், ராஜசம், தாமசம் என்ற குணங்கள் மூன்றுகி வேதம் நான்கினும் மெய்ப் பொருளாகி, ஐம்பூதங்களாகி, அறு சுவையாகி ஏழிசையாய் இசைப்பயனுய் எட்டுத் திக்காகி நிற்கும் அற்புதத்தைப் பின் வரும் திருவீழிமிழலைத் தேவாரத்தில் காட்டுகிறுர்.

ஈருய் முதல் ஒன்ருய் இரு பெண் ஆண்குணம் மூன்ருய்
மாருமறை நான்காய் வரு பூதம் அவை ஐந்தாய்
ஆருர்சுவை ஏழோசையோ டெட்டுத்திசை தானுய்
வேருய்உடன் ஆனுன்இடம் வீழிம்மிழலையே

சைவ சமய இலக்கியப் பூங்காவை அணி செய்யும் அருணகிரிநாதரது அலங்காரமும் அநுபூதியும் திருப்புகழும் காலத்தாற் பிந்தியனவாயினும் கருத்தினுற் சிறப்பு டையனவே.

"ஆடும் பரிவேலணி சேவலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

என அநுபூதியும்

"என்னை நன்ருக இறைவன் படைத்தனன்
தன்னை நன்ருகத் தமிழ் செய்யுமாறே"

என மந்திரமும்

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து
சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின்
உள்ளார் சிவனடிக்கீழ்"

என சிவபுராணமும் கூறும் கருத்தினையே "நாடும் பொருட் சுவை சொற் சுவைதோய்தர நாற்கவியும் பாடும் பணியிற் பணித்தருள்வாய்" எனும் அடிகளில் குமர குருபரர் கூறுகிருர்.

வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய திருவருட்பாக்கள் கற்போர் மனதை உருக்க வல்லது.

சமயகுரவர்கள் சந்தான குரவர்கள் திருவாய் மலர்ந்தருளியனவும் மற்றும் அருணகிரிநாதர், தாயுமானவர், வள்ளலார்' குமரகுருபரர் போன்ற அநுபூதிமான்கள் அருளியனவுமாக பல்லாயிரம் பாடல்கள் சைவ சமய இலக்கியப் பூஞ்சோலையை அணிசெய்கின்றன. இவற்றைக் கற்றுணர்ந்து இறையருள் பெற்று உய்தி பெறுவோமாக.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுள் நம்பிக்கையும் ஆலய வழிபாடும்

★★★
★★★

## நா. க. மயில்வாகனம்

பல வழிகளில்பெருமைசான்ற பழம்பதி புங்குடுதீவு. அது இன்று மேலும் சிறப்புப் பெறுகிறது. அருள்மிகு ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தர சுவாமி கோயில் பஞ்ச தள ராஜகோபுரம் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. கும்பாபிஷேகம் நடக்கிறது.

ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமியின் மூர்த்திகரத்தை எழுப்ப உதவும் கிரியை கும்பாபிஷேகம்.

கும்பாபிஷேகத்தைக் காணக்கொடுத்து வைக்க வேண்டும். அதில் கலந்து கொள்வது கிடைத்தற்கரிய பேறு.

கோபுர தரிசனம் பாவ விமோசனம்; கோடி புண்ணியம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

இவற்றையெல்லாம் இன்றைய இளம் சந்ததியினர் ஏற்றுக் கொள்ளுகிறார்களா? பழங்கதைகள், மூட நம்பிக்கைகள் என்று ஒதுக்கித் தள்ளும் மனப்பான்மையே அவர்கள் மத்தியில் மேலோங்கி வருகிறது.

கடவுள் நம்பிக்கை தேவையா? கடவுள் நம்பிக்கை உடையவர்கள் ஆலயம் செல்ல வேண்டியது அவசியமா?

அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாக இருப்பவர் கடவுள் என்றால் அவருக்கு ஆலயம் எதற்கு? ஆலயங்களை எல்லாம் அறிவுக் கூடங்களாக மாற்ற வேண்டாமா?

பகுத்தறிவின் பெயரால் இப்படியான கேள்விகளை அடுக்கடுக்காக எழுப்புகிறார்கள் இன்றைய இளம் சந்ததியினர். அவர்களுக்குச் சரியான பதில் அளிக்க வேண்டும், சீரிய சமய நெறியின் சிறப்பை அவர்களுக்குத் தர்க்கரீதியாக உணர்த்த வேண்டும். சமய வாழ்க்கைக்கு அவர்களைத் திருப்ப வேண்டும். இன்றேல் சமுதாயச் சீரழிவு தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.

பிறக்கிறோம், இறக்கிறோம், இடையில் வாழ்கிறோம, இவற்றில் பிறப்பும் இறப்பும் எமது கையில் இல்லை. இடைப்பட்ட வாழ்க்கையை நாம் அமைத்துக் கொள்கிறோம். அதிலும் எத்தனையோ இன்ப துன்பங்கள் சோதனைகள், பாதிப்புக்கள் நினைப்பவை எல்லாம் அப்படியே நடப்பதில்லை.

பிறக்காமல் இருக்க முடிவதில்லை. இறக்காமல் இருக்க விரும்பினால் அதுவும் நடப்பதில்லை. வாழ்க்கை எமது எண்ணப்படி அமைவதும் இல்லை. காரணம் என்ன? எமக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று இருந்து எல்லாவற்றையும் இயக்குகிறது. காட்ட முடியாத சக்தி அது. காண முடியாத சக்தி அது. உணர்வால் மட்டும் அறியக் கூடிய உள்ளத்தைக் கடந்த சக்தி அது. அதற்குத் தான் கடவுள் என்று பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

__ நம்பிக்கையின் தொடர்கதைதான் வாழ்க்கை. கொள்கைகள், கோட்பாடு களில் சிலர் நம்பிக்கை வைக்கிறார்கள். அவை நன்மை பயக்கும் என்று எதிர்பார்க் கிறார்கள்.

சிலர் வேறு மனிதரில் நம்பிக்கை வைக்கிறார்கள். அவர்கள் கடைசி வரை தமக்குத் துணைநிற்பார்கள் என்று நம்பு கிறார்கள்.

பலர் கடவுளில் நம்பிக்கை வைக்கிறார் கள். அந்த நம்பிக்கை தம்மை நல்வழி நடத்தி நலம் விளைக்கும் என்று நம்பு கிறார்கள்.

கொள்கைகளும், கோட்பாடுகளும் நிலையற்றவை. மனிதரைப் பொறுத்த வரையில் உறவினர், வீடுவரை, மனைவி வீதிவரை, பிள்ளை, காடுவரை. கடைசி வரை துணை கடவுளைத்தவிர வேறு யாருமில்லை. இது கடவுள் நம்பிக்கை உடையவர்களின் திடமான கருத்து.

கொள்கைகள் கோட்பாடுகளிலும், மற்ற மனிதரிலும் நம்பிக்கை வைத்திருப்ப வர்கள் வாழ்க்கையில் கஷ்டம் வரும்போது கலங்குகிறார்கள். இதைத் தாங்க முடியாமல் தவிக்கிறார்கள்.

கடவுள் நம்பிக்கை உடையவர்கள் கஷ்டத்தைக் கண்டு கலங்குவதில்லை. அது கடவுளின் சோதனை என்று கொள்கிறார்கள். அதனால் மன அமைதி அடைகிறார்கள்.

கடவுள் நம்பிக்கை கடைசிவரை துணையோ இல்லையோ, அனுபவத்தில் தானே அது தெரியும்! அந்த நம்பிக்கை பற்றி இப்படிச் சந்தேகம் கொள்பவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இந்த உண்மையை யாவது உணர வேண்டும்.

என்னால் ஆவது ஒன்றுமில்லை. எல்லாம் அவன் (கடவுள்) செயல். அவன் இயக்கு கிறான், நான் இயங்குகிறேன், கடவுள் நம்பிக்கையின் அடித்தளமே இதுதான்.

அறநெறி என்று ஒன்று இருக்கிறது என்பதை நினைவுபடுத்தி அதன்படி ஒழுக ஏவுகிறது கடவுள் நம்பிக்கை.

பலனை எதிர்பாராமல் பணி செய்யத் தூண்டுகிறது கடவுள் நம்பிக்கை.

எது வரினும் அதை ஏற்கும் துணிவைத் தருகிறது கடவுள் நம்பிக்கை.

எந்த நிலையிலும் ஆறுதல் அடையச் செய்கிறது கடவுள் நம்பிக்கை.

பணிவுடனும் பரோபகாரச் சிந்தை யுடனும் வாழ மனதைப் பக்குவப் படுத்து கிறது கடவுள் நம்பிக்கை.

அமைதி, சாந்தி, சமாதானம் - இவற்றை உள்ளூர நிலைநிறுத்துகிறது கடவுள் நம்பிக்கை.

உலகில் வேறு எந்த நம்பிக்கையாவது இத்தனை நன்மைகளைத் தருகிறதா? இல்லை.

ஆகவே நல்வாழ்க்கைக்குக் கடவுள் நம்பிக்கை அத்தியாவசியம் என்பது புலனாகிறது.

இப்போது அடுத்த கேள்விகள் எழுகின்றன.

கடவுள் நம்பிக்கையை வலுப்படுத்த ஆலயம் சென்று கடவுளை வணங்க வேண்டுமா?

எங்குமுள்ள கடவுளை நாம் இருக்கு மிடத்தில் இருந்தே வணங்க முடியாதா?

உள்ள வேலைகளைச் செய்யவே நேரம் போதவில்லை. கோவிலுக்கு வேறு போக வேண்டுமா?

நியாயமான கேள்விகள் இவை. விடை என்ன?

வீட்டில் எத்தனையோ இடங்களில் சுவாமிப் படங்களை மாட்டி வைத்திருக் கிறோம். எனினும் சுவாமி கும்பிடுவதற்குப் பூசையறைக்குத்தான் செல்கிறோம். வெளியில் உள்ள சுவாமிப் படங்களே பூசை அறையிலும் இருக்கின்றன. வெளிப் படங்களை விட்டுவிட்டுப் பூசை அறைப் படங்களை நாடி நாம் செல்வது ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசை அறை, வீட்டிலே கடவுள் வணக்கத்துக்கு என்று ஏற்படுத்தப்பட்ட பிரத்தியேக இடம். அங்கே சென்றதும் புறச் சூழல்களை மறந்து விட முடிகிறது. மனம் குவிந்து கடவுளை வழிபடக்கூடிய நிலை ஏற்படுகிறது.

வீட்டில் பூசை அறை எப்படியோ அப்படித்தான் ஊரில் ஆலயம்

ஆலய ஆராதனைகள், அர்ச்சனைகள், பூசைகள், புனஸ்காரங்கள், கிரியைகள், உற்சவங்கள் அனைத்தும் பக்திச் சூழலை உருவாக்குகின்றன. மனம் ஒரு நிலைப்பட்டு இறைவனை வணங்கத் துணை புரிகின்றன.

ஆலயம் என்றாலே ஆன்மா லயிக்கும் இடம் என்று பொருள்.

ஐந்தும் ஐந்தும் பத்து. இந்தக் கணக்கைச் சிறுபிள்ளை முதலில் எப்படித் தெரிந்து கொள்கிறது? ஒன்றில், கைவிரல்களை மடித்தும் நீட்டியும் எண்ண வேண்டும், அல்லது குச்சுகளை வைத்து எண்ண வேண்டும்.

ஆரம்பப்படி இது. காலப்போக்கில் கைவிரலும் தேவையில்லை, குச்சும் தேவையில்லை. இதைவிட பெரிய கணக்குகளைக்கூட மனதால் பார்க்க முடிகிறது.

தொடக்கத்தில் கணக்குப் படிக்கப் பாடசாலை செல்வது போல் கடவுள் வணக்கத்துக்குக் கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

பாடசாலையில் கணக்கிற்குக் கைவிரல்களும், குச்சுகளும் பயன்படுகின்றன. கோயிலில் கடவுள் வணக்கத்துக்கு மூர்த்திகள் இருக்கின்றன.

பாடசாலை சென்ற மாணவன் வகுப்பேற்றங்கள் முடிந்ததும் பாடசாலை செல்வதை நிறுத்தி விடுகிறான். அது போலக் கோயிலுக்குப் போகிறவர்களும் பக்தியில் முதிர்ச்சி அடைந்த பின்னர் கோயிலுக்குப் போவதை நிறுத்தி விடலாமே! கடவுள் கோயிலில் மட்டும் இல்லை, அவர் இல்லாத இடமே இல்லை என்ற தத்துவ தரிசனம் கிடைத்த பின்னர் ஏன் கோயிலுக்குச் செல்லவேண்டும்?

ஒருவர் வாழ்நாள் முழுதும் சதா கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்தால் அதன் அர்த்தம் என்ன? அவர் பத்தி மார்க்கத்தில் முதிர்ச்சி அடையவில்லை. இன்னும் ஆரம்பப் படியிலே இருக்கிறார். அவருக்குத் தத்துவ தரிசனம் இன்னும் ஏற்படவில்லை என்றுதானே கொள்ள வேண்டும்?

இப்படியான கேள்விகளும் எழுப்பப்படலாம்.

இற்றை நாளில் உள்ள சமயப் பெரியார்கள், அறிஞர் பெருமக்கள் எல்லோரையும் விட்டுவிடுவோம்.

தேவாரம், திருவாசகம் போன்ற திவ்விய பக்திப் பிரபந்தங்களைத் தேனாகப் பொழிந்து தந்த நாயன்மார்கள் நால்வரின் வரலாறு நாமெல்லோரும் அறிந்ததே.

முழுமுதற் கடவுளான சிவபெருமானின் தோழராக இருந்த சுந்தரர் —

உமையம்மையிடம் ஞானப் பாலுண்ட திருஞானசம்பந்தர்—

பிற சமயத்திலிருந்து சங்கரனால் ஆட்கொள்ளப்பட்ட திருநாவுக்கரசர் —

பாண்டிய மன்னனின் அமைச்சர் பதவி துறந்து அரன்பணிக்கே தம்மை அர்ப்பணித்த மாணிக்க வாசகர் —

இவர்கள் நால்வரும் இறுதிவரை ஆலயமாகச் சென்று இறைவனை வழிபட்டு வந்தார்களே, இவர்கள் தரிசனமற்றவர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் இல்லாத இடமே இல்லை என்று எல்லோருக்கும் சொல்லித் தந்தவர்கள் இவர்கள். தாம் விரும்பியபோது இறை தரிசனம் பெற்ற பெருந்தகைகள் இவர்கள். இவர்களே ஆலயம் சென்று அங்குள்ள மூர்த்திகளை வணங்கினுர்கள். ஏன்? மற்றவர்களுக்கு முன்மாதிரி காட்டுவதற்காகத்தான்.

பாடசாலையில் பிள்ளைகளுக்குக் கை விரலிலும் குச்சுகலிலும் கணக்குக் கற்பிக்கும் ஆசிரியர் தாம் ஓய்வுபெறும்வரை பாடசாலை சென்று திரும்பத் திரும்பக் கை விரலிலும், குச்சிகளிலும் எண்ணிக் கொண்டே இருக்கிறுர்.

ஏன் அவருக்கு மனதால் கணக்கு பார்க்கத் தெரியாதா? காரணம் அதுவல்ல. புதிதாக வந்து சேரும் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்காகவே ஆசிரியர் அப்படிச் செய்கிறுர்.

வளர்ந்தவர்கள் ஆலயத்துக்குச் சென்றுல்தான் அவர்களை பார்த்துச் சிறுவர்களும் செல்வார்கள் வளர்ந்தவர்கள் தமக்கு அவசியமில்லாவிட்டாலும் இள வயதினருக்காக எப்பொழுதும் ஆலயத்துக்குச் சென்று வழிபட வேண்டும். இது அவர்களுடைய தவிர்க்க முடியாத கடமை.

ஆலயம் செல்பவர்களுக்கு என்ன பலன் கிடைக்கும் என்பதைத் திருஞானசம்பந்தப் பெருமான் பத்துத் தேவாரப் பதிகங்களில் அழகாகக் கூறியிருக்கிருர்.

இன்றுநன்று நாளைநன் றென்று நின்ற
இச்சையால்

பொன்றுகின்ற வாழ்க்கையைப் போக
விட்டுப் போதுமின்

மின்தங்கு சோதியான் வெண்மதி விரி
புனல்

கொன்றைதுன்று சென்னியான்
கோடிகாவு சேர்மினே

இப்படி அந்தத் தேவாரப் பதிகம் தொடங்குகிறது.

தமிழ் நாட்டில் உள்ள கோடிக்கா என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவனைச் சென்றடையுங்கள் என்று சம்பந்தப் பெருமான் இந்தப் பதிகத்தில் அறிவுறுத்துகிருர்.

எல்லா ஆலயங்களிலும் ஒரே இறைவனே வெவ்வேறு மூர்த்தங்களில் இருக்கிறுர். அதனுல் சம்பந்தப் பெருமானுடைய அறிவுரை எல்லா ஆலயங்களுக்கும் பொருந்தும்.

ஆலய அமைப்பு மனித வடிவத்திலேயே இருப்பதைக் காணலாம்.

ஆலயத்தின் கருப்பகக்கிரகம் தலை.

அர்த்த மண்டபம் கழுத்து.

மகா மண்டபம் மார்பு.

யாகசாலை நாபி.

கோபுரம் பாதம்.

பாதம் பெருமைக்கு உரியது.

இறைவனின் பாதாரவிந்தங்களை அடைந்து வினைப்பயனை இந்தப் பிறப்பை அறுப்பதே மனிதப் பிறவியின் நோக்கம், ஆகவே பக்தர்கள் இறைவனின் பாதத்தையே கண்ணுகக் கொண்டு வணங்குவார்கள்.

இறைவனுடைய திருப்பாதம் சேவடி என்றும் மலரடி என்றும் சமய இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

"நாமார்க்கும் குடியல்லோம்" என்று தொடங்கும் அப்பர் சுவாமிகள் ............ கோமார்க்கே நாமென்றும் மீளா ஆளாய்க் கொய்மலர்ச் சேவடி குறுகினேமே" என்று முடிக்கிருர்.

"காஞ்சிமாவடி வைகும் செவ்வேள் மலரடி" என்று முருகப் பெருமானின் திருவடி குறிப்பிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராம பிரானின் பாதம் பட்டு அகலிகை சாபம் நீங்கினாள்.

படுத்திருந்த கண்ணபிரானின் பாதம் மருவியிருந்தான் பாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனன். அவன் கேட்டதையே கண்ணன் கொடுத்தான். பாரதப் போரில் பாண்டவர் பக்கமே நின்றான் கண்ணன். தலைமாட்டில் இருந்த துரியோதனனும் அவன் கூட்டத்தாரும் கூண்டோடு அழிந்தார்கள்.

ஆலயத்தின் பாதமாகப் புகுமுக வாயிலில் அமையும் ராஜகோபுரம் ஆலயத்துக்குப் பொலிவையும் கவர்ச்சியையும் ஊட்டுகிறது.

தூரத்தே இருப்பவர்களையும் அருகே வருக வருக என்றழைக்கும் தன்மை வாய்ந்தது கோபுரம்.

துன்பத்தில் மிதந்திருப்பவர்களுக்குத் தோணியாகத் தெரிவது கோபுரம்.

அஞ்ஞான இருளில் மூழ்கித் தவிப்பவர்களுக்கு ஒளிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்வது கோபுரம்.

அதனால்தான் அதைத் தரிசிப்பது பாவ விமோசனம் என்றும் கோடி புண்ணியம் என்றும் சொன்னார்கள்.

கோபுரத்தைத் தரிசிப்பதே கோடி புண்ணியம் என்றால் அனைவரும் தரிசிப்பதற்காகக் கோபுரத்தை அமைப்பதும், கும்பாபிஷேகம் நடத்துவதும் எவ்வளவு பெரிய புண்ணியம் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

புங்குடுதீவு வர்த்தகப் பெருமகனார் திரு. நா. சண்முகம் புங்குடுதீவு மேற்கு, பெருங்காடு கிராஞ்சியம்பதி ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி கோயிலுக்கு அழகொளிர் பஞ்சதள ராஜகோபுரத் திருப்பணியைத் தனது சொந்தச் செலவில் மேற்கொண்டு கும்பாபிஷேகத்தையும் நடத்தி எல்லையற்ற இறையருளுக்குத் தம்மைப் பாத்திரராக்கிக் கொண்டார்.

இறைவன் தந்த செல்வத்தை இறைபணியிலும் செலவிட்டு இன்பம் காணும் இயல்புடையவர்கள் மிகச் சிலர். இவர்களில் திரு. சண்முகம் குறிப்பிடத்தக்கவர். அவருடைய சீரிய சைவத் தொண்டால் நம்மவர் மத்தியில் கடவுள் நம்பிக்கை வலுக்கவும் ஆலய வழிபாடு சிறக்கவும் திருவருள் கூடுகிறது.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# “நம்பினோர் கெடுவதில்லை”

அருள்மொழி அரசி, வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்

சிவசம்பந்தமுடையது சைவம். சிவம் என்பதற்கு மங்களம் என்பது பொருள். மங்களத்தன்மை உலகில் என்று ஏற்பட்டதோ அன்றே சிவமும் தோன்றி விட்டது. மொழிக்கும் நினைவிற்கும் முற்பட்டது சைவம் ஏனைய சமயங்களுக்கு இல்லாத தனிச் சிறப்பு இதற்கு உண்டு. அதுதான் மற்றைச் சமயங்களைப் புறக் கணிக்காது தன்னோடு தழுவிக் கொண்டு செல்லும் தாய்மைத் தனிப்பண்பு. அதே நேரத்தில் தன்னிலையினின்றும் திரியாது. சமயக்காழ்ப்பு சைவத்தில் கிடையாது. இத் தனிப் பெருந்தகைமையைத் தாயுமானவ சுவாமிகள் நினைந்து நினைந்து அகம் நெகிழ் கின்றார்.

இயல்பென்றும் திரியாமல் இமயமாதி
எண்குணமும் காட்டியன் பால்இன்ப மாகிப்
பயனருளப் பொருள்கள் பரிவார மாகிப்
பண்புறவும் சௌபான பக்ஷங் காட்டி
மயலறு மந்திரஞ் சிக்ஷை சோதிடாதி
மற்றங்க நூல் வணங்க மௌனமோலி
அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங் கத்தில்
அமர்ந்தது வைதிக சைவம் அழகுதந்தே

அந்தோ! ஈததிசமயம்! இச்சமயம்போல் இன்று
அறிஞர் எல்லாம் நடுவறிய அணிமாவாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசாமோனம்
வைத்திருந்த மாதவர்க்கும் மற்றும் மற்றும்
இந்திராதி போகநலம் பெற்ற பேர்க்கும்
இதுவன்றித் தாயகம் வேறில்லை! இல்லை!!
சந்தான கற்பகம்போல் அருளைக் காட்டத்
தக்கநெறி இந்நெறியே தான் சன்மார்க்கம்

அன்புதான் சைவம்........சைவம் தான் அன்பு எல்லா உயிர்களையும் தன்னுயிராகக் கருதும் பண்பு சைவத்தின் ஜீவநாடி. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் உதிரக் கண்ணீர் வடித்த இராமலிங்க அடிகள்...... எலும்பை உதிர்த்து இறைச்சி அறுத்து யாகம் செய்தாலும் காணமுடியாத ஈசனை அன்போடுருகி அகம் குழைந்தால் காண லாம் என்றுரைத்ததிருமூலர்.........அன்புக் கயிற்றால் ஆண்டவனைப் பிணித்த சமயக் குரவர்கள் எல்லோரும் நமக்கு போதித்தது அன்பு வழி எங்கும் சிவத்தைக் காண வேண்டும். தவத்தைப் பெருக்கவேண்டும். எம்மதமும் சம்மதம்.

“விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயம் செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்

என்று அருளுவார் அப்பர் பெருமான்,
யார் யார் எப்படி வணங்குவார்களோ அப்படி அப்படி எல்லாம் ஈசன் தோன்று வான்.

“யாதொரு தெய்வம் கொண்டீர் அத் தெய்வமாகி ஆங்கே.
மாதொரு பாகனார் தாம் வருவர்.”
என்பது சிவஞான சித்தியார்.

அன்பு உள்ள இடத்திலே ஆண்டவன் தானே வந்து குடிகொள்வார். பார்க்குமிட மெங்கும் நீக்கமற நிறைந்து காணப்படும் பரம்பொருளை நாம் உணர்வு விழியினால் உணர வேண்டும். அந்த உணர்வு உரை உணர்வு கடந்து தன்னை மறந்து, தான் இருக்கும் இடத்தை மறந்து ஏன் நமது உயிரையும் மறந்தபோது ஓர் உணர்வு நம்முள் ஊற்றெடுக்கின்றதே அதுதான் கடவுள் உணர்வு.

“உருவெனவும், அருவெனவும், உளதென வும், இலதெனவும்
உழலுவன பரசமய கலையார வாரமற
உரையவிழ, உணர்வவிழ, உளமவிழ, உயிரவிழ
உளபடியை உணருமவர் அநுபூதியான துவும்”

இது அருணகிரிப் பெருமானது திரு வாக்கு உறவுக்கோல் நட்டு உணர்வு கயிற்றினால் நம்பிக்கையுடன் கடைபவர் களுக்கு இறையருள், விறகில் தீயாகவும், மணியில் ஒளியாகவும் வெளிப்படும்.

“நம்பினோர் கெடுவதில்லை.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் குருநாதர்

திரு. கா. க. கனகசுந்தரம்
செயலாளர், பெரியம்புலம் விநாயகர் ஆலயம்.

✶ ✶

குரு என்றால் இருளில் இருந்து ஆன்மாக்களை ஒளிக்குக் கொண்டு வருபவர். 'கு' என்பது இருள், 'ரு' என்பது ஒளி. இந்த ஒளியைத்தான் ஒவ்வொரு குருவும் தம் பக்தர்களுக்குக் காட்டிக் தந்துள்ளனர். இதனை நாம் நூல்கள் வாயிலாக அறிய முடிகின்றது. சைவ சமயத்தில் இதனை பரவலாகக் காண முடிகிறது. திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் குரு வடிவாக அமர்ந்து இருந்து அரிமர்த்தன பாண்டிய மகா ராஜாவுக்கு குதிரைகள் வாங்கச் சென்ற மணிவாசப் பெருமானை தடுத் தாட்கொண்டு அவருக்கு குருவடிவாக இருந்து உபதேசம் செய்து தம் பாதாரவிந்தங்களை அடையச் செய்தார் என்பது புராண வரலாறு.

எம்பெருமானால் ஆட்கொள்ளப்பட்ட மணிவாசகப் பெருமான் தான் மட்டும் இறைவனடி சேர்ந்தால் போதாது "எல்லோரும் வாருங்கள்" என்று அழைத்தார். திருவாசகம் என்னும் திவ்விய பிரபந்தத்தை, சிவபுராணம் முதல் அச்சோப் பதிகம் ஈறாக 51 பகுதிகளாகப் பாடி எமக்கு அளித்துள்ளார். அவனருளாலே அவன் தாள் வணங்கி எமக்களித்த மணி மந்திரமாகும். இவற்றைப் பாடி பரவி வீடடைய எழுந்தருளியுள்ள புண்ணிய தலமே புங்குடுதீவு பெருங்காட்டில் ஊருக்கு மத்தியிலே அமைந்துள்ள சிவன் கோயில். இந்த அரிய பெரிய புண்ணிய தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள எம்பெருமானுக்கு அழகிய பஞ்ச தள ராஜகோபுரத்தை அமைத்து இன்று மகா கும்பாபிஷேகம் செய்து அடியார்களுக்கு அருள்பாலிக்க ஆவன செய்கின்றார்கள் மெய்யடியார்கள். இந்த வகையில் முதலிடம் பெறுகின்றார் வர்த்தகர் "திருவாளர் நா. சண்முகம் அவர்களும், கோயில் சிவாச்சாரியார் அவர்களும், குடும்பத்தினர்களும். சைவமும், தமிழும் இரு கண்கள் என போற்றிவளர்த்தவர்கள் புங்குடுதீவு மக்கள்.

எம் சிறிய தீவை எடுத்துக்கொண்டால் ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுக்காத பல ஆலயங்கள், பாடசாலைகள் இருப்பது இத்தீவுக்கு பெருமையை அளிக்கின்றது. இத்தீவு பக்குவ ஆன்மாக்கள் நிறைந்த ஒரு பொய்கை. ஒவ்வொரு மலரும் அழகாக மலர்ந்து மணம் வீசிக்கொண்டே இருக்கின்றது. இந்த மலர்களில் தனிப் பெருமை வாய்ந்தது இந்தச் சிவன் உறையும் ஆலயமலராகும். எம் இதயங்களை மலரவைத்து தன்வசம் இழுக்கும் காந்த சக்தி கொண்டது இந்த ஆலயம். வட்டாரங்கள் தோறும் ஒவ்வொரு விக்கினங்களை தீர்க்கும் விக்னேஸ்வரர்கள், இரண்டு மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் ஆலயங்கள். அப்படியே கலியுக வரதனும் முருகன் ஆலயங்கள் அமைந் துள்ளன. இவற்றுக் கெல்லாம் மணிமுடி வைத்ததுபோல் அமைந்துள்ளதுதான் இன்று ராஜ கோபுரக் கும்பாபிஷேகம் காணும் ஒரேயொரு தனிக் கோயிலான சிவன் ஆலயம். எம் சமயம் சைவ சமயம். சைவ சமயம் என்பதன் உட் பொருள் சிவத்தை அடையச் செய்யும் சமயம் என்ப தாகும். நாம் எந்த ஒரு தெய்வத்தை பக்தி யோடு அருச்சனை செய்தாலும் முடிவில் அடைய வேண்டியது சிவன் தாள்களே.

இதனையே "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று சைவ சமயம் வலியுறுத்து கின்றது. சமய குரவர்களையும், சந்தான குரவர்களையும் ஆட்கொண்டு அருள் பாலித் தவர் சிவபெருமானே. ஆரம்பத்தில் நான் கூறியபடி மணிவாசகப் பெருமானை ஆட் கொண்டு குருவடிவாக வந்து அருள் பாலித் தவர் எம்பெருமானே. நாம் குருவைக் காண வேண்டுமானுல் எம் பெருமானை நாட வேண்டும். எம் பெருமான் தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் போது குரு வடிவெடுத்து பூமியில் இறங்கி வருகின்ருர். குரு மூலமே நாம் "இறவாப் பெருநிலையினை அடைய முடியும். ஒவ்வொரு ஆன்மாவின் இறுதி இலட்சியமே மோட்சமாகும். மோட்சத்தை அடைந்த ஆன்மாக்கள் மீண்டும் பிறப்பதில்லை. நாம் மீண்டும் பிறவாதிருக்க இறைவன் அடியினை சேர வேண்டும். இதனையே வள்ளுவப் பெருந் தகையின் அருள் வாக்கான திருக்குறளில்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவனடி சேராதார்"

எனக் கூறப்படுகின்றது. குருவருள் பெற்ற மணிவாசகப் பெருமான் "புல்லாகிப் பூடாய், புழுவாய், மரமாகிப், பல் மிருகமா கிப், பறவையாய்ப் பாம்பாகி...... எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என்று கூறி அழுகின்ருர். நாம் எத்தனை பிறவி எடுக்கப் போகின்ருேமோ எமக்குத் தெரி யாது. "அரிது, அரிது மானிடராதல் அரிது" என்ற முதுமொழிக்கமைய அரிய மானிடப் பிறவியை எடுத்த நாம் எம் பிறவிப் பெருங் கடலை நீந்து இறைவனடி சேர வேண்டும். இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க் குமோ?

உலகிலே பிறந்துள்ள ஈ, எறும்பு முத லிய பல்வகைப்பட்ட உயிர்கள் யாவும் உண்ணுகின்றன, உறங்குகின்றன, விழித் தெழுகின்றன. மனிதனும் அதே செயல் களைச் செய்தபோதும் ஆருவது அறிவாகிய பகுத்தறிவினுல் அவன் தான் பிறந்த நோக் கத்தினை அறிய முடிகின்றது. அப்படி அறிய முடியாவிடில் அவனுக்கும், ஏனைய ஜீவராசி களுக்கும் இடையில் எத்தகைய வேறுபாடும் இல்லை. எனவே சைவ மக்களாகிய நாம் இறைவனடியினைச் சேர முயல வேண்டும். இறையன்பை வளர்க்க வேண்டும், இறை வன் திருவருளைப் பாடிப் பரவ வேண்டும். இவற்றுக்காக அமைந்த புண்ணிய இடங் களே ஆலயங்களாகும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங் களில் இறைவனை அடையலாம். இந் நான்கு முறையினையே எமக்கு சைவ நாயன்மார்கள் நால்வரும் வாழ்ந்து காட்டியுள்ளனர். பூந் தோட்டம் அமைத்தல், மெழுகுதல், அல கிடுதல், பூமாலை தொடுத்தல், திருக்கோயில் அமைத்தல், திருக்குளம் கட்டுதல் போன்ற தொண்டுகளைச் செய்வது மிகவும் சிறந்த தாகும். இறைவனுக்கு தொண்டு செய்யும் போது ஒருவனுடைய உள்ளம் பணிவடை கின்றது. அதன் மூலம் அவன் இறைவனின் அன்பைப் பெற்ற ஒருவனுக்கு இறைவன் குருவடிவாகக் காட்சி அளிப்பார். அக் குருவின் பாதங்களைத் தரிசித்து நாமும் வீடுபேறு அடைவோமாக.

அன்பே சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் அ. திருநாவுக்கரசு அவர்களின்

## ஆசியுரை

★

''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்பர் அருளடியார்கள். கோடி புண்ணியர்களைத் தொழவைத்திடும் கோபுரமெடுத்த புண்ணியனை தொழுதாலே கோபுரத்தைத் தொழுதமைக்குச் சமமாகுமென்றால் மிகையாகாது. அருளுந் திருவுங் கைகூடியதாலேயே அருள்மிகு மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரக் கடவுட்குத் தூலலிங்கம் அமையத் திருவருள் பாலித்தது. திருவருள் நலத்தில் குழைந்து திளைத்த ஆறுமுகக்கடவுளின் திருப்பெயர்கொண்ட நா. சண்முகம் அவர்கள் தவமுடையார் ஆகையால் அவர் திருவுளத்தில் மலிந்த சிந்தனையே இங்கு அமையப் பெற்ற ஐந்துதளக் கோபுரமாக வானளாவி ஒளிர்கின்றது. இத்திருக் கோபுரமெடுப்பதில் எத்துணைத் தொல்லைகள் இடர்பாடுகள், இத்தனையுந்தாண்டி எழில்மிகுந்த எடுப்பான தோற்றத்துடன் அழகிய சிற்பக்கலைகளுடன் அமைத்து முடித்துள்ளார் அன்பர் நா. சண்முகம் அவர்கள்.

திருக்கோபுரமமைத்திட உறுதுணையாயிருந்து ஏற்படுந் தொல்லைகளைத் தானும் பகிர்ந்து தொண்டு சமமாகச் செயல்பட்ட அம்மையார் புனிதவதியாரைப் போற்றாதிருத்தலியலாது. ''இல்லது என் இல்லவள் மாண்பானால் உள்ளது என் இல்லவள் மாணாக்கடை'' இப்பொய்யாமொழிக்கமைய இல்லவளின் மாண்பினாலேயே இப்பெரிய கோபுரமமைக்கச் சண்முகம் அவர்களால் முடிந்தது.

இப்பெறுதற்கரிய பேறான திருக்கோபுரமெடுத்த இனியான் சண்முகம் அவர்களின் திருத்தொண்டு வாழ்க அவரெடுக்கும் கோபுர குடமுழுக்கு எல்லா நலன்களுடனும் நிறைக என வாழ்த்தி வணங்குவதுடன், அன்பர் நா. சண்முகம் அவர்கள் தொடர்ந்தும் பல திருத்தொண்டாற்ற நீடிய ஆயுளையும் நிறைந்த செல்வத்தையும்பெற்று வாழ ஸ்ரீ மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரக் கடவுள் திருவருள் சொரிந்து புரக்க அன்னையடிகளை வாழ்த்தி வணங்கியமைகின்றேன்.

புலவர் அ. திருநாவுக்கரசு,
தேவஸ்தானம்,
திருக்கேதீச்சரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments
From:

# ARUNA * AGENCY

COMMISSION AGENTS, IMPORTERS & EXPORTERS

15, 4th Cross Street,

**COLOMBO-11.**

Telephone: 28610

With Best Compliments from:

# LINGAM STORES

General Merchants & Commission Agents

Dealers in: Oilman Goods & Groceries

No. 129. 5th Cross Street,

COLOMBO-11.

Phone: 37209

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருப்பணி வேந்தன்" சண்முகனார் வாழ்க!

1. முத்துடையார் மரபதனில் வந்துதித்த முத்து!
முடிமன்னர் மூவர்பணி தனிநின்று முடித்தே
எத்திசையும் புகழ்மணக்க இலங்கிநிற்கும் முத்து!
எங்கள் எழிற் புங்கைமணித் தீவீன்ற முத்து!
பத்திநலங் கனிந்துநிற்கும் பழவடியார் மகிழப்
பண்புடனே கிராஞ்சிதனிற் பரமசிவன் கோவில்
உத்தமநற் கீழ்த்திசையில் ஓங்குமா ராஜ
கோபுரம்ஒன் றெடுத்துயர்ந்த சண்முகநன் முத்து!

2. உழைப்பினுல் உயர்ந்தமணி சண்முக நன்மணியே
உள்ளத்தின் உயர்வுபோல் உயர்ந்ததுநின் வாழ்வு
இழைத்தபணி பெரும்பணிகாண் ஏழேழு பிறப்பும்
ஏத்து புகழ் புண்ணியமும் எய்தினை நன்மணியே
தழைத்தோங்கும் நின்மரபு தவஞ்செய்த மணிநீ
தன்மானச் சிங்கம்நீ தமிழர்குலம் நின்னை
அழைத்திடுமே திருப்பணிக்கோர் வேந்தன் எனஐய
அன்னையுமை சிவனருளால் அறம்பேணி வாழ்க!

3. செம்மை மனங்கொண்டுபல திருப்பணிகள் செய்க
செந்தமிழர் குலமரபு தினம்பேணி ஒளிர்க
மும்மையால் உலகாண்ட முதல்வர்வழி நின்றே
முப்போதும் எப்போதும் மூர்த்திபதம் போற்றி
மெய்மையே உயிராக வேண்டுவோர்க் கீந்தே
வெற்றியுடன் வள்ளலென விளங்கிடுக நன்றே
அம்மையார் திருவருளால் அடியர்குலம் வாழ
அரும்பணிகள் பலபுரிக சண்முகனார் வாழ்க!

ஆக்கம்:

**வித்துவான் சி. ஆறுமுகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

With the Best Compliments

of

# Sri Murugan's Stores

**GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**

93, Hospital Road,

JAFFNA.

T'Phone: 7535

# ஸ்ரீ முருகன்ஸ் ஸ்ரோர்ஸ்

93, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கொழும்பு பிரபல வர்த்தகரும், சமய சமூக தொண்டருமான

# இருப்பிட்டி திரு. இ. நாகலிங்கம் அவர்களது

## வாழ்த்துரை

வாழிய சண்முகம்! வாழிய சண்முகம்!
ஊழிதோ றூழி வாழிய சண்முகம்!
தாயகந் தன்னில் தன்னுளம் விரும்பித்
தூய திருப்பணி தொடங்கினை சண்முக!
இராஜ கோபுரம் அமைத்தனை அன்புபோல்
ஈசன் எந்தை இறைசிவன் கோவிலின்
கீழைத் திசையில் கிளர்ந்தது கோபுரம்!
வாழத் திருப்பணி மாண்புடன் புரிந்தனை!
அன்பும் பண்பும் அடக்கமும் அமைந்த
நன்பெருந் தொண்ட நாளும் நின்பணி
ஓங்குக என்றே உவப்புடன்
ஈங்குனை வாழ்த்தினேம் இறையருள் பொலிகவே!

இல. 189, நியூ கலியாணி இஸ்ரோஸ்,
கொழும்பு.

---

உ
சிவமயம்

# திரு. க. தியாகராசா அவர்களின் வாழ்த்து

நாம் பிறந்த பொன்னுடாம் புங்குடுதீவின் மேற்றிசையில், பெருங்காடு கிராஞ்சியம் பதியில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரப் பெருமானுக்குப் பஞ்சதள இராஜகோபுரத் திருப்பணியைத் தனியொருவரால் நினைத்தும் பார்க்க முடியாத, மாபெரும் பணியைத் தனியொரு மனிதனாக நின்று கட்டி 26-3-81ல் அதன் கும்பாபிஷேகத்தையும் நடாத்தவிருக்கும், நமது நாடு தந்த மாபெரும் வர்த்தகரும் கொடை வள்ளலுமாகிய திருவளர் நாகலிங்கம் சண்முகம் அவர்களின் சிவத்தொண்டிற்கு நாமும், நமது நாடும் என்றென்றும் கடப்பாடுடையோம் எனக்கூறி அவரின் தொண்டு மென்மேலும் பெருகித் தொடர வேண்டுமென இறைவனை வாழ்த்தி இவ்வாசியுரையைச் சமர்ப்பிக்கிறேன்.

64, புதுச் செட்டித் தெரு,
கொழும்பு - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட வியாபாரிகளே!

உங்களுக்குத் தேவையான கீழ்க்கண்ட பாவனைப் பொருட்களுக்கு ஏக விநியோகஸ்தர்களாக நாம் நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

★ **யானை மார்க் தீப்பெட்டிகள்**
(கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்டங்கள்)

★ **லீவர் பிறதர்ஸ் பாவனைப் பொருட்கள்**
(கிளிநொச்சி மாவட்டம்)

★ **மஞ்சி பிஸ்கட்டுகள்**
(கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்கள்)

**அத்துடன் அகில இலங்கையிலும் மிகப் பிரசித்தி பெற்ற ஹாக்றேஸ் (HARCROS) இரசாயன விவசாய கிருமி நாசினிகளுக்கு**

வடமாகாண விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.

# லலிதா டிரேடிங் கம்பனி

சிவசுந்தரம் வீதி,

## கிளிநொச்சி.

தொலைபேசி:
302

தந்தி: 'தீபம்'
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

## ஸ்ரீ மீனுக்ஷியம்பாள் சமேத சுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்த்தானம்

வேண்டியவர்க்கு வேண்டியாங்கு வேண்டுவதை ஈர்ந்நளும் திருவருளே திருமேனியாகத் தாங்கிநிற்கும் ஸ்ரீ மீனுக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரப் பெருமானின் திருவருளைத் துணைக்கொண்டு அம்மையப்பனின் திருவுருவங்களை கொணர்ந்து ஆலயம் அமைத்து அமரத்துவம் அடைந்த ஆன்மீகவாதி பிரம்மஸ்ரீ த. மார்க்டேய ஐயர் தம்பதிகளின் திருப்பாத கமலங்களை இதயமலர்களால் அஞ்சலி செய்து கோபுர தர்சனம் கோடிபுண்ணியம் என்ற வாக்கிற்கு அமைய இராஜகோபுரத்தை அமைத்துதவிய திருவாளர் நா. சண்முகம் அவர்தம் பாரியார் புனிதவதி அவர்கள் குடும்பத்தினருக்கும், நாகலிங்கம் குடும்பத்தினர்க்கும், திரு. நாகலிங்கம்பிள்ளை குடும்பத்தினருக்கும் எம்பெருமான் அருள் என்றென்றும் பொலிய வேண்டும் என்றும், தீர்க்காயுளும், திடகாத்திரமும், சகல சௌபாக்கியங்களும் பொருந்த வேண்டும் என்றும் எம்பெருமான் திருப்பாத கமலங்களை எமது மனமார வாழ்த்தி மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

கோபுரத்தை அழகொழுக கட்டித்தந்த சிற்பாசாரியார் திரு. க. சபாரெத்தினம் குழுவினருக்கும், தமிழ்நாட்டில் இருந்து வருகைதந்து விக்கிரகங்களை அமைத்துதவிய திரு. தேவலிங்கம், சிவசண்முகம், திரு. பக்கிரிசாமி அவர்களுக்கும், அழகு எழில்பெற வர்ணம் தீட்டித்தந்த திரு. சூரிய குமார் குழுவினருக்கும், விக்கிரங்களை அமைக்கும் பணியில் தமிழ்நாட்டு வல்லுனர்களை அழைத்துத்தந்த தவில் வித்துவான் திரு. சின்னராஜா அவர்களுக்கும், சிவத்தமிழ் செல்வி அப்பாக்குட்டி தங்கம்மா அவர்களுக்கும், கோபுரக்கதவுகளை அமைத்துத்தந்த திரு. ம. சண்முகலிங்கம் குடும்பத்தாருக்கும், கதவுகளை அழகுற அமைத்துதவிய திரு. ப. பொன்னுத்துரை குழுவினருக்கும், இரும்பு வேலைகளை செய்துதவிய திரு. நடராஜா, பரமலிங்கம் அவர்களுக்கும், வாகன உதவி, சரீரஉதவி செய்த அன்பர்களுக்கும், சிறப்பு மலருக்கு விளம்பரங்கள் தந்த வியாபார ஸ்தாபன உரிமையாளருக்கும், வாழ்த்துரைகள், கவிதைகள், கட்டுரைகள், தந்துதவிய பெருந்தகைகள், மலர் வெளியிட தூண்டிய மலர் வெளியீட்டு குழுவினர்களுக்கும், அழகுற அச்சிட்டுத் தந்த அச்சக உரிமையாளருக்கும், அச்சக ஊழியர்களுக்கும், மணிமண்டபத்திற்கு பொருளுதவி சரீர உதவி செய்த அன்பர்கள், கும்பாபிஷேகத்தை சிறப்பிக்க வருகைதந்த குருமணிகள் சாதகாசாரியர்களுக்கும், தரிசிக்கவந்த அன்பர்கள் அனைவருக்கும், கும்பாபிஷேகத்திற்கு மங்கள வாத்தியம் இசைத்த வாத்தியகாரர்களுக்கும், ஒலி, ஒளி அமைத்துத் தந்துதவிய அன்பர்களுக்கும் கும்பாபிஷேகத்தை இசையின் மூலமாக பிரபலப் படுத்திய இசைச் சக்கரவர்த்தி, தென்னிந்திய பிரபல பாடகர் சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்களுக்கும், குழுவினர்களுக்கும் என்றென்றும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

இங்ஙனம்,

ஸ்ரீ மீனுக்ஷியம்பாள் சமேத சுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்த்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

திருப்பூங்குடி மேற்கு ஸ்ரீ மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி ஆலயத்தின் கோபுரக் குடமுழுக்கு வைபவம் இனிதே நிறைவுற எங்கள் இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

மாபெருந் திருப்பணியினை மனமுவந்து நிறைவுசெய்த கொடைவள்ளல்

**உயர்திரு. நா. சண்முகம் அவர்களின்**

சேவை தொடர்ந்து வளர எமது பாராட்டுக்கள்.

தந்தி: 'நாகஜோதி' (NAGAJOTHI) தொலைபேசி: 36653

# ஏ. கே. கே. அன் கோ.

**84, புதிய சோனகதெரு, கொழும்பு-12.**

தேசியக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் அங்கிகாரம் பெற்ற வர்த்தக நிறுவனம்.

உற்பத்தியாளர் : மொனிற்றர்ஸ் அப்பியாசப் புத்தகம், அப்பியாசப் புத்தகம், வரைதல் அப்பியாசப் புத்தகம்.

இறக்குமதியாளர் : பெற்ரோமாக்ஸ் விளக்கு, வெளிநாட்டுக் கடதாசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

卐

# RATHGAMA STORES

IMPORTERS, EXPORTERS & COMMISSION AGENTS

**Telegrams: YADCAR**

**Telephone: 20693**

**64, 4th Cross Street,**

COLOMBO-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH BEST COMPLIMENTS*

*FROM*

*

# NEW IYANAR STORES

**GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**

105, 5th Cross Street,

COLOMBO-11.

T'phone: 25193

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from :

K. V. S. N.

உ
சிவமயம்

T'phone: 3 7 6 8 1

Cable : ANGUSAM

# K. V. S. NAGALINGAM PILLAI & SONS

IMPORTERS, GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

77, Fourth Cross Street,

COLOMBO-11.

*With Best Compliments from:*

உ
சிவமயம்

Phone: 3 7 6 8 1

# ASANTHA TRADERS

General Merchants & Commission Agents

අසන්තා ට්‍රේඩර්ස් அசந்தா டிரேடர்ஸ்

77, Fourth Cross Street,

COLOMBO-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

★

# K. ARIYAM & CO.

**IMPORTERS & EXPORTERS, DRY FISH MERCHANTS, COMMISSION AGENTS & DEALERS IN SRI LANKA PRODUCES**

**156, MALIBAN STREET,**

**COLOMBO-11.**

Telephone : **34714** Telegrams : **'ARIMALAR'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நற்றமிழ் நால்வர் நாடிய பரமன் நாயகியோடு ஆடிய பாதநாயகன் கோவிலில் சிதம்பர தரிசனம்.




அரிவாள் [illegible]
[illegible] அரும் [illegible] காட்சி திருக்கோவில் [illegible]
காட்சியளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவன் கோவில் இளைய செந்தமிழ் அர்ச்சனை செம்மல்
ஸ்ரீனிவாச நாகேந்திரக் குருக்கள் அவர்கள்.



சிவன் கோவில் குருமணி
சிவஸ்ரீ ஜோதிசுந்தரக் குருக்கள் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு அன்பரின் அன்பளிப்பு**

**புங்குடுதீவு ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வரர்**

**ஆலய இராஜ கோபுர கும்பாபிஷேகம் சிறப்புடன் நிறைவுற**

**வாழ்த்துகின்றேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அன்பர் உள்ளம்போல் உயர்ந்த கோபுரம்

எந் தாய் நாடாம் புங்குடுதீவு தருமம் வளர்க்கும் தனிநிலம், கல்விப் பணியும், கடவுட் பணியும் புரியும் அரும் தொண்டர்கள் பிறந்த புனித பூமி, அது பலநூற்ருண்டுகட்கு முற்பட்ட பழம் பெரும் கோவில்களைக் கொண்டவூர்.

எம்மூரில் சிவன் கோவில் என அழைத்துப் போற்றப்படும் பெருங்கோவில், பெருங்காட்டுச் சிவன் கோவிலே. அக் கோவிலை அமைத்துப் பணி புரிந்த அந்தணர் திலகம் தீரர் மார்க்கண்டையர் ஆசைக் கனவுகள் பல கண்டார். அவரின் கனவுகள் நனவாகின்றன. அவரின் உத்தம பத்தினியாரும் சிவன் கோவிலின் சீர் காண விழைந்து நடந்தும் திரிந்தும் ஓடியும் திருப்பணி புரிந்து அவன் பதம் அடைந்து விட்டார். இருவரினது மறைவின் பின் அவ்விருவரின் ஒரு மகஞர் மீஞட்சி சுந்தரஞரின் ஓயாத பெரும் பணியில் ஓங்கி வளர்கிறது.

சிவன் கோவில் திருமுன்னிலையில் கிழைக் கோபுரம் கிளர்ந்து எழுந்து மஹா மேரு எனப் பொலிந்து நிற்கிறது உழைப்பிஞல் உயர்ந்த உத்தமஞர் நாகலிங்கம் சண்முகம் அவர்களின் உள்ளம்போல் இராச கோபுரம் உருவாகி உயர்ந்து நிற்கிறது. தனி ஒரு மனிதன் ஓர் இராச கோபுரத்தைத் தன் உழைப்பினைக் கொண்டு உருவாக்கி விட்டான். அவனுடைய உள்ளம் உயர்ந்த உள்ளம். அவ்வுள்ளம் போல் உயர்ந்து நிற்கிறது மீஞட்சி சமேத சோமசுந்தரர் திருக் கோபுரம்.

கோபுரமும் இறைவனே, கோயிலும் இறைவனே. பண்டு இராஜ ராஜ சோழன் போன்ற மன்னர் அமைத்த இராஜ கோபுரம் இன்று எம் தாய் நாடு பெற்ற தவமகஞர் சண்முகஞர் அவர்களால் உருவாக்கப் பெற்றுத் தெய்வீக ஒளி வீசித் திகழ்கிறது. சண்முகம் அவர்கள் மரபினில் வேளாளர் உழைப்பினில் வைசியர் உணர்வினில் அந்தணர் திருத்தொண்டினில் மன்னன். வாழ்க அவர் உள்ளம், வளர்க அவர் திருத் தொண்டு, வாழிய புங்கையம்பதி மணித் திருநாடு.

வீ. வ. நல்லதம்பி

அதிபர், புங்குடுதீவு மஹா வித்தியாலயம்.

புங்குடுதீவு.
20-3-81

---

உ

# வணங்கி வாழ்த்துகின்றேன்

நான் பிறந்த பொன்ஞட்டின் மேற்றிசையில் கோவில் கொண்டருளியிருக்கும் மீஞட்சி சமேத சோமசுந்தரப் பெருமானுக்கு வானளாவிய திருக் கோபுரத்தைக் கட்டி குடமுழுக்குச் செய்து தொண்டாற்றிய எந் நாட்டின் தவப் புதல்வன், கொடைவள்ளல், பொதுஉடமைவாதி திரு. நாகலிங்கம் சண்முகஞரின் பெருந் தொண்டினைப் போற்றி வணங்கி வாழ்த்துகின்றேன்.

வதுளை அ. வை. பரராஜசிங்கம்

புங்குடுதீவு.
24-3-81

உ

# வரமெலாம் பெற்றிட வாரீர்!

திருவரு ளதனுற் கிராஞ்தியம் பதியிற்
    சிறப்பொடு கோயில் கொண்டருளி
அருள்வளர் தேவி அன்னை மீனுட்சி
    அருகிருந் தடிமலர் பரவத்
தெருள்வள ரன்பர் சிந்தையா லயமும்
    தெரிந்தமர் சிவன்றளிக் கின்றோர்
உருவள ரிராச கோபுர மெழுந்தங்
    கொப்பற ஓங்கி நின்றதுவே. 1.

சிற்பநூல் முறையா லமைந்த கோபுரத்தைச்
    சீர்பெறு குடமுழுக் காட்டிச்
சொற்படு தூல லிங்கம தாக்குந்
    தூயநா ளாகிய வின்னுள்
அற்புத மெய்தி மலர்க்கரங் கூப்பி
    அரகர வொலியொடும் பணிந்து
பொற்புறு மடியார் போற்றிசெய் கிற்பார்
    போந்தது போற்றிட வாரீர்! 2.

சங்கொலி முழங்க முரசொலி முழங்கத்
    தாரையாழ் குழலொலி முழங்கத்
துங்கவே தியர்கள் மறையொலி முழங்கத்
    தொடர்திரு முறையொலி முழங்க
மங்குல்வா னுள்ளோர் கற்பக மலர்தூய்
    வாழ்தொலி மகிதல முழங்க
எங்குமெய் யடியார் அரகர வொலியோடு
    இயைந்திடு கும்பநீ ராட்டே. 3.

கோபுர லிங்கந் தரிசனை செய்தல்
    கோடிபுண் ணியமென வெண்ணித்
தாபதர் கூட்டம் ஜயஜய வென்று
    சார்ந்துதோத் திரத்தொடு நிற்பார்
தூபியின் கொழுந்து சுடர்விடக் கும்பத்
    தூயநீ ராட்டுதல் காண
மாபெருங் கிளையோ டயலுற நின்று
    வரமெலாம் பெற்றிட வாரீர்! 4.

கங்கைநீ ராடிக் காசிநின் றிலிங்கங்
    கனிவுடன் கொணர்ந்து தம்மில்லைச்
சங்கரற் கமைந்த கோவிலா யமைத்துத்
    தாபனஞ் செய்தமார்க் கண்டன்
துங்கமா மனம்போ லுயர்ந்த கோபுரத்தின்
    தூவியின் குடமுழுக் கின்று
மங்கலம் பொலியக் கண்டுவாழ்த் தெடுத்து
    வரமெலாம பெற்றிட வாரீர்! 5.

— ஆதிரையான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நான் மறக்க மாட்டேனே

* *

ஒன்றும் போதா ஒருவரை உய்யக் கொண்ட உத்தமனார் கருணை இன்றும் நின்று என்னையும் ஆட்கொண்டது. தலைநகருக்கும், பிறந்த பூமிக்குமிடையே பறந்தும் ஓடியும் திரிந்த என்னை இருக்கவைத்து எண்ணவைத்து செயலுக்குத் தூண்டிய செம்பொருளின் சீர்மையை மறப்பேனா?

சிந்தையில் வந்த சித்திரத்தைச் சிலையாக்கி, கலையாக்கவும், கருணைப் பொருளாக்கவும், கோடி புண்ணிய தேட்டமாக்கவும் ஊட்டமளித்த உத்தமர்களை உள்ளளவும் மறப்பேனா?

ஒருவரா இருவரா இதயப்படுதாவில் எத்தனையோ பேர் வந்து முகங்காட்டுகின்றார்கள்.

சிற்பியைச் சொல்லவா, ஓவியனைச் சொல்லவா, மை தீட்டி மெய்மை புகட்டிய புத்திரனைச் சொல்லவா, ஆகம விதிகளை அறிவுறுத்திய அந்தணரைச் சொல்லவா.

மலர் காட்ட முனைந்த முயற்சியாளர் அன்பர் க. கனகரத்தினம் கடமையாளனைச் சொல்லவா, உடனிருந்து உறுதுணைபுரிந்த சேவைக்குரிய சதாசிவத்தைச் (சேவியர்) சொல்லவா.

சாந்த சொரூபன், சாதனை வீரன் ஏற்ற இறக்கம் பாராது எதனையும் இதய சுத்தியோடு இயற்றி இறைபணியை இன்முகத்துடன் இட்டு நிரப்பியும் - அச்சுக் கோர்க்கும் அறைக்கும், பிழை திருத்தும் பகுதிக்கும், வண்ணப்படம் தயாரிக்கும் கூடத்திற்கும் ஓடியோடிக் கவனித்து உயரிய பணியை தனக்குரிய பொறுப்பாக்கி உழைத்த உத்தம நண்பன் அச்சக உரிமையாளர் எஸ். பி. சாமி அவர்களை என்ன சொல்லி வாழ்த்துவேன்? வார்த்தையில்லா வறுமையால் பொறுமையாயமைகின்றேன்.

சின்னராஜா செய்த பணி செந்தமிழில் அடங்குமா? என்-மண்ணின் மைந்தன், கலை வேந்தன் காரியங்கள் யாவிலும் கைகொடுத்து, கால, தேச, வர்த்தமானங்களைக் கடந்து உற்சாக மூட்டியே உறுதுணைபுரிந்த உடன்பிறப்பை உள்ளம் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணமும் மறக்காது. இசை மேதை சீர்காழி வேந்தனை சொந்த பூமியிலே சங்கீத மழை பொழிய மனம்கொள்ள வைத்த மாண்பினையும், மேள தாள மங்கள வாத்தியங்கள் வரிசையமைத்து வானுசை எழுப்பி எம்பிரானை எண்ணவைத்த ஏற்றமுறு சூழலை அமைத்த ஆளுமையையும் அகங்குழைய வாழ்த்தாமல் விடுவேனு?

சிவத் தமிழ் வளர்ச்சிச் சிந்தனையாளன் சிவநெறி மரபின் தனித் தலைவன் அரச அதிபர் யோகேந்திரா துரைசாமி அவர்கள் ஆற்றிய பணிகளுக்கு நன்றி சொல்லி வணங்கக் கடமைப்பட்டுள்ளேன்.

வீசு தமிழ் சொல்லால் ஓசைமிகு பாடல்கள் தந்த வித்தகர் வீரமணி ஐயரை யும் விழங்கு தமிழ் சொல்லால் நன்றி சொல்லி வாழ்த்துகின்றேன்.

அன்னம் பாலிக்கும் பணியேற்ற ஸ்ரீநிவாசக செம்மலையும், தாகசாந்திக் கடமை கொண்ட தில்லையம்பல மைத்துனர் குடும்பத்தினர்க்கும், இன்சுவை இளநீர் நல்கிய நா. தம்பிராஜா அவர்களுக்கும். காவற்படை, தொண்டர் படை வீரர்களுக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சேவையாளர்களுக்கும், தனியார்துறை வாகனச் சேவையாளர்களுக்கும், ஒலி, ஒளி, சிகர மேடையமைப்பாளர்களுக்கும் என்னிதயம் கனிந்த நன்றியை நவில்கின்றேன்.

எந்நாடு சண்ட சலைஞன், ஏற்றமுறு சங்கீத வித்துவான் புங்கையூர் பொன். சுந்தரலிங்கம் அவர்களை நெஞ்சுநிறை நன்றியோடு நினைத்துக் கொள்கின்றேன்.

படித்துறையில் பாட்டெடுத்த பதியினிலே பண்ணுசைப் பக்குவத்தை பார றியப் பெற்றவனே விண்ணளந்த வித்துவத்தால் விளங்கு புகழ் ஏழிசையின் நுணுக்கமதை கம்பீர கானத்தால் காட்டிவரும் கலை வேந்தே! இசையரசே! இசைக் கடலே! இசை மணியே! தாங்கள் எந்நாட்டு மக்களுக்காய் இசையமுதம் தந்ததனை விதந்து போற்றி வாழ்த்தெடுத்தும். தங்கள் குழு விற்பன்னரை விரிந்த மனப் பக்குவத்தால் பகருமென் நன்றிதனை ஏற்றிடுவீர்.

அருள் வேண்டி நின்றோரே, இசை கேட்க வந்தோரே அனைவருக்கும் என் நன்றி.

"வணக்கம்"

நன்றி மிகு,

நா. சண்முகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப் பதிவு:
யுனைடெட் மேர்ச்சன்ட்ஸ் லிமிடெட்,
71, பழைய சோனக தெரு,
கொழும்பு - 12.

தொலைபேசி: 34281

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

from

# SRINIVASANSCO LIMITED

**Exporters of Sri Lanka Produce & Products**
**Importers**
**Agents & Representatives.**

*Exporters of*

**Ceylon Desiccated Coconut**

| | |
|---|---|
| Tea | Seasame Seeds |
| Spices | Mustard Seeds |
| Coffee | Cocoa Beans |
| Betel Nuts | Black Pepper |
| Coconut Oil | Ready-Made Garments |
| Fresh Coconut | Coconutshell Charcoal Etc., |

102, Second Floor, Prince Street,

**COLOMBO-11.**

Cable: **'CRYSTAL'**

Telephones: **24843 & 26575**
Telex: **21244**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு
ஸ்ரீ மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி கோவில்
பஞ்ச தள இராச கோபுர கும்பாபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

போன் : 25567 தந்தி : 'வாசன்'

# வாசன் ரேடிங் கோ.

(மொத்த சில்லறை வியாபாரிகள்)

**121, 5ம் குறுக்குத் தெரு, கொழும்பு - 11.**

மற்றும் உங்கள் உல்லாசப் பயணத்திற்கு

## வாசன் சுப்பர் ரவல்ஸ் லிமிட்டட்

(குளிரூட்டப்பட்டது)

121, 5ம் குறுக்குத் தெரு, கொழும்பு - 11.

*

**T'grams: VASSAN** **T'phone: 25567**

With Best Compliments from:

# VASAN TRADING CO.

GENERAL MERCHANTS

**121, 5th CROSS STREET, COLOMBO - 11.**

## VASAN SUPER TRAVELS LTD.

**121, 5th Cross Street, Colombo - 11.**


Printed by United Merchants Ltd., Colombo - 12. T'phone: 34281

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org